TAMIL SPEAKING
Personal Injury Lawyer
INJURED IN A ROAD ACCIDENT ?
ACCIDENT AT WORK PLACE OR PUBLIC PLACE
WE ACT ON "NO WIN NO FEE" BASIS
YOU KEEP 100% COMPENSATION
FOR FREE ADVICE CALL
Ask for RAJ
NOT MY FAULT
Tel : 020 3475 6665 | M : 0781 089 7754
EMail : Raj@nmflawyers.co.uk
Offices - Ascot / Ilford

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 11 ♦ ISSUE - 228 ♦ FRIDAY 17 OCTOBER 2014

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
CONVEYANCING SERVICES:
- Residential and Commercial Conveyancing
- Last will
NOTARIAL SERVICES:
- Power of Attorneys, Notarisation of documents
- Affidavits , Oaths/ Statutory Declarations / Affirmations
Contact: SEN THAVARAJA LLB (Hons)
Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor
Telephone: 020 8772 4920
10a Upper Tooting Road , London SW17 7PG

இவ்வருடத்தின் சிறப்புச் சலுகைகள்...
SIVAS TEXTILE
புத்தம் புது டிசைன்களில் நவ நாகரீக உடைகள்!!
மாபெரும் மலிவு விற்பனை
50% வரை விலைக் கழிவு
விபரங்களுக்கு அழையுங்கள்...
020 8390 6050
ஒரு முறை வந்து பாருங்கள்!!
58, Tolworth Broadway Tolworth, Surrey, KT6 7HR

நீங்கள் நீண்ட கால நோயால் அவதிபடுபவரா ?
மாற்று முறை சிகிச்சைகளை தேடுபவரா ?
ஆஸ்துமா, மூட்டு வாதம், தலைவலி, உடற்பருமன், முடி உதிர்தல், தோல் வியாதிகள், விளையாட்டுக் காயங்கள், நீரிழிவு, மன உளைச்சல், இரத்த அழுத்தம் போன்ற சகல வித வியாதிகளுக்கும் சிறந்த முறையில், பக்க விளைவுகளற்ற சிகிச்சை அளிக்கப்படும்
சிகிச்சை முறைகள்: ஹோமியோபதி, அக்குபங்சர் மற்றும் ஸ்போட்ஸ் தெரபி.
சிகிச்சை மையம்
Bodi Clinic
Caring for you
Natural Health Centre.
31 Old London Road,
Kingston, Surrey KT2 6ND.
(வியாழக்கிழமைகளில் முன்பதிவு மாத்திரம்)
Email - bodiclinic@live.com
Web - www.bodiclinic.com
டாக்டர். ச. முத்துலிங்கம்
மருத்துவ ஆலோசனைகளை தமிழிலே பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்
'Fully Insured and Registered'
Tel : 07881 492 600
020 8549 8000

WANT TO BE A DOCTOR?
Didn't get a place?
Don't worry you haven't missed out…
We will help you to find the right place
STUDENT LOANS ARRANGED
- Lowest Tuition Fees
- Guaranteed Entry
- No Entrance Exam
TEL: 0208 863 3029
www.mashaconsultants.co.uk

Nandika's Sarees
மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக பட்டுப் புடவைகள், தரமான காஞ்சி பட்டுகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
www.nandikasarees.co.uk

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா?
அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா?
நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# AIKON ACCOUNTANTS LTD

**Our Services**

- *Preparation of accounts for companies and individuals/ for companies house*
- *Preparation of annual accounts and working with auditors*
- *Reporting to lenders and other external parties*
- *Preparation of management accounts*
- *VAT Computation and filing*
- *Self-assessment returns*
- *Corporation Tax computation and filing*
- *HMRC correspondence and representation*
- *Company Formation and VAT registration*
- *PAYE – Preparation of Payroll and filing returns*
- *Scenario Testing & feeding through to forecasts*
- *Budgeting & Variance Analysis*
- *Financial Planning and Analysis*
- *Evaluation of the internal controls and propose suitable solutions in order to eliminate weaknesses.*
- *Cash flow forecasts & Projected Accounts*
- *Restructuring*
- *Mergers and Acquisitions*
- *Due diligence*
- *Investment and Project Appraisal*
- *Assisting Foreign companies establishing in the UK*
- *Assisting UK companies expanding and establishing overseas*
- *Assisting with securing finance for business growth*

**FAST GROWING ACCOUNTANTS IN LONDON FOR ALL YOUR NEEDS!**

For a no obligation, FREE consultation Call us on 02031891884
accounts@a-accountants.com - www.a-accountants.com

# பூமாலை, பூச்சரம் கட்டுபவர்கள் தேவை

பணிநிலை: பூமாலை, பூச்சரம் கட்டுபவர் – Hindu religious worker (Garland Master)

தகைமைகள்: பூமாலை கட்டுவதில் நல்ல அனுபவமுள்ளவராகவும், வண்ண வண்ண பூக்களைக் கொண்டு விதம் விதமாக மாலைகள் கட்டுவதில் புலமையும், பூச்சரம், பூச்செண்டு, பூ அலங்காரம், மணவறை அலங்காரம் போன்ற திறமைகள் விரும்பத்தக்கது.

கடமைகள்: ஆலய பூஜை காலங்களில் சுவாமிக்கு சாத்தும் கழுத்து மாலைகள், பூஜை மாலைகள், கொண்டை மாலைகள், சுவாமி அலங்காரத்துக்கு தேவையான திருவாட்சி மாலைகள் கட்ட வேண்டும்.

வேதனம்: பிரித்தானிய வேதன முறைகளுக்கமைவானது

விண்ணப்ப முடிவு திகதி: 20-11-2014

உங்களுடைய விண்ணப்பங்களை (CV) இணைத்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**அருள்மிகு விக்னவிநாயகர் ஆலயம் - லிவர்பூல்**

www.liverpoolkirkbyganeshtemple.org.uk

Entrance:- Gate between 11&15 Delfby Crescent, Liverpool, L32 8TN

# Happy Diwali...

## Diwali Dinner and Dance !

Saturday 25th October 2014

From 5.00 pm to 12.00am

**Amazing value buffet,**
with over 50 items from India, Singapore, Malaysia and Sri Lanka Buffet
**Only £12.00**

Celebrate the Diwali in style with Buffet Dinner, Bollywood Live Music and Dance
**Only £18** per person

FUSHIA

**FUSHIA RESTAURANT**
3 Brighton Road, South Croydon, CR2 6EA.
Tel : 020 8680 8833 Web : www.fushiauk.com
*Plenty of FREE Parking available.*



# SRI KANAKA DURGA ASTROLOGY CENTRE



**PANDITH: ARJUN RAJ**
50 Years Experience

**சாஸ்திரம் இலவசமாகச் சொல்லப்படும்**

ஆயுள்பூசை, லட்சுமி கடாட்சப்பூசைகள், தொழில் வியாபார, பிள்ளைகளின் படிப்பு, பெண் பிள்ளைகள் குடும்ப ஒற்றுமை, கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல்நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம். ஒன்றுகூடுதல், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு, ஏவல் செய்வினை, கண்திருஷ்டி போன்றவற்றிற்கான பரிகாரங்கள் இவற்றுடன் ஜாதகக் குறிப்பைக் கொண்டு எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவித்தல், பரிகாரம் செய்தல் போன்றவற்றுடன் சிறியோருக்கு இலவச பாலகிரக யந்திரங்கள் செய்து கொடுக்கப்படும்.





காலசர்ப்பதோச நிவாரண
நாகதோச நிவாரண
கலியாணதோச நிவாரண
கலியாணபொருத்த தோச நிவாரண
பில்லி சூனிய நிவாரணங்களுக்கான
பரிகாரம் செய்யப்படும்.





கணவன் மனைவி பிரிந்து போனவர்களை ஒன்றாகச் சேர்த்து வைப்பார். பிரிந்து போன பிள்ளைகளை ஒன்றாகச் சேர்த்து வைப்பார். லஷ்மி வசியம் செய்து கொடுப்பார். இறந்து போனவர்களின் ஆத்மசாந்தி அடைய பூசை செய்வார்.

**292 LONDON ROAD**
(NEAR BEST FOOD, OPPOSITE CHENNAI DOSA)
WEST CROYDON, CR0 2TG
LONDON, UK

Call for an Appointment 07459727208, 07404851846




REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL

AND SHOPFITTING Ltd.




168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய தீபாவளி
நல் வாழ்த்துக்கள்

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY




## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்..

சொத்துக்குவிப்புவழக்கில்ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு, நீதியானதோ அல்லது அநீதியானதோ என்பது ஒருபுறமிருக்க, அத்தீர்ப்பை வழங்கவிருக்கும் நீதிமன்றம் மாற்றப்பட வேண்டுமென இறுதி நேரத்தில் அவர் விடுத்த மனுவில் விடுதலைப் புலிகளால் தனது உயிருக்கு ஆபத்து நேரிடலாமென அவர் கூறிய கையாலாகாத காரணம் தான் மனதை புண்படுத்துகிறது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

நன்றி

*- உமா மகாலிங்கம்*

## சிறுகதைகள்..

கடந்த இதழ்களில் சிறுகதைப் போட்டியொன்று வைப்பதாக அறிவித்திருந்தீர்கள் அதைப்பற்றிய பிற அறிவிப்புக்களைக் காணோம் ? எப்போது அறியத்தருவீர்கள்?

*- சாம்பசிவம்*

## யாழ்.தேவி

இந்திய உதவியுடன் யாழ்.தேவி யாழ்ப்பாணம் சென்றுவிட்டாள். அம்மக்களுக்கு அது நல்ல பயனைக் கொடுக்கும். ஆனால் மக்கள் மனங்களில் அது குளிர்ச்சியை உண்டாக்குவது போல் தோன்றவில்லையோ. ஏதோ வழியில் தேங்காயை எடுத்து தெருவில் பிள்ளையாருக்கு அடிப்பது போன்ற ஒரு நிகழ்வுபோல் தோன்றுகிறது. அதைத் தான் செய்வதென்று அரசு தம்பட்டம் அடிக்கலாம். அதைக்கூடச் செய்ய அவர்களுக்கு துணிவில்லை. சிங்கள மக்கள், தங்கள் காசில் வடக்குக்கு ரயில் விடுகிறீர்களா என்று கேட்பார்கள் என்ற பயமாக இருக்கலாம்.

*- தங்கவேலு*

## நினைவுகள்

ஐ.பி.சி. நாள்தோறும் போரில் இழந்த வாலிபங்களை நினைவூட்டுவதாக ஒரு பாடலைப் போடுகிறார்கள். கேட்கும் போதெல்லாம் உள்ளம் பதறுகிறது. வேடுவன் ஒரு புறாவை நோக்கி அம்பு எய்ய ஆயத்தப்படுத்தும் போது ஒரு பெண் பார்த்துப் பதறும் ஒரு ஓவியம் தான் ஞாபகத்துக்கு வருகிறது. அந்தப் பெண்ணின் பதறல் எவ்விதத்திலும் புறாவைக் காப்பாற்றப் போவதில்லை. ஒரு வர வேண்டும். வேடன் தண்டிக்கப்பட வேண்டும். எப்போ வருவான்?

*- நாயகம்*

## கேட்பதற்கு யாரும் இல்லையா?.

சுன்னாகம் மின் உற்பத்திக் கழிவு கிணறுகளைப் பாதிக்கிறதா? இது தனியார் நிறுவனம் அல்லவே. அரசாங்கமே இப்படிப் பொறுப்பற்று இருந்தால் சுன்னாகம், ஏழாலை, மல்லாகம் மக்களை ஆபத்திலிருந்து கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.

*- கார்த்தி*

## கனடாவில் காணவில்லை

இங்கிலாந்தில் கலக்கிக் கொண்டு இருந்த நீங்கள் கண்டம் தாண்டி கனடாவிலும் பத்திரிகையினை வெளியிட்டு வருவதாக அறிந்து மகிழ்ந்த வேளையில் ***ஒரு பேப்பர்*** ஓரிரண்டு பேப்பர்களுடன் நிறுத்தி விட்டதாகவும் அறிந்தேன். தொடந்தும் வெளியிடலாமே ?

*- விஜி (கனடா)*

## நரம்பு மண்டலம்

கட்டுரையை விடப் படம் பெரிதாக உள்ளது. இருந்தாலும் மூளைக்கும் முள்ளந்தண்டுக்கும் உள்ள தொடர்பை எளிய முறையில் தந்தமைக்கு நன்றி. ஐம்புலன்கள் என்றால் அது முற்று முழுதாக மூளை தான் என்று எடுத்துக் காட்டியமை எமது ஐம்புலன்கள் என்று பிரித்துக் காட்டும் சிக்கலை விடுவிக்க உதவுகிறது.

*- சாந்தன்*

## லண்டனில் சங்கங்கள்.

லண்டனில் தமிழ் மக்களிடையே எத்தனையோ சங்கங்களும், மன்றங்களும் அமைப்புக்களும் தமிழ் பாடசாலைகளும் இருக்கின்றன. அதை விட புதிது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டும் இருக்கின்றன இவை என்ன செய்கின்றன ? எவ்வாறு இவர்களை எவ்வாறு தொடர்பு கொள்வது என்று இவற்றால் என்ன பயன் என அறிந்து உங்கள் வாசகர்களுக்கு அறியப்படுத்தலாமே..

*- நமசிவாயம் அகிலன்*

## காணாமல் போகும் *ஒரு பேப்பர்* !

அண்மைக் காலமாக ***ஒரு பேப்பர்*** ஐ காணக்கிடைப்பதில்லை. குறிப்பாக கிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் கிடைப்பதில்லை. பேப்பர் கடைகளில் வைக்கப்படுவதில்லையா அல்லது வைக்கப்பட்ட பேப்பர்களை வேறேதும் பயன்பாட்டுக்கு அள்ளி கொண்டு போறாங்களோ?

இதற்கு காரணம் என்னவென அறிந்து தொடர்ந்தும் கிடைக்க ஏதாவது செய்வீர்களா ?

*- தியாகராஜா*

## ஊரின் வாசம்

எம் பண்டிகைகளையும், ஊரின் காட்சிகளையும் ஞாபகப்படுத்தும் ஜெயபாலனின் சேவை தொடரட்டும். அவர் தமிழ் நடையும் நன்று. இடையிடை அவர் பயன்படுத்தும் வடமொழி எழுத்துக்களை தவிர்க்கலாம். அதற்காக சரஸ்வதியை சரசுவதி என்று எழுதத் தேவையில்லை. அவர் தன் குடும்பப் பெருமைகளை மறைமுகமாக என்றாலும் கொண்டு வருவது தவிர்க்கப்பட்டால் அவர் கட்டுரைகளின் தரம் மேலும் உயரும்

*- கணேசன்*

## வடக்கு – கிழக்குக்கு போக விசா வேணுமாமே ?

வடக்கு - கிழக்கிற்கு போவதென்றால் இனி வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்போர் இலங்கை அரசிடம் அனுமதி பெற்றுக் கொண்டுதான் போக வேண்டும் என்று அறிவுறுத்தல் வந்துள்ளது மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது. ஒரே நாடு ஒரே மக்கள் பிரிவினை எதற்கு என்று கோசம் போட்ட தமிழினவாதிகள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள் ? தமிழ் அரசியல்வாதிகள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள் ?

*- ராகவன்*

## ஜெயலலிதா

ஈழத்தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்த ஒரு தலைவி தண்டிக்கப் படும்போது எமது உள்ளத்தின் ஆழத்தில் ஏதோ உறுத்துகிறது. தண்டனையின் உள் நோக்கம் எதுவாக இருந்தாலும் சொத்துக் குவிப்பு விபரங்களைப் பார்க்கும்போது தண்டனை போதாது என்றே படுகிறது. இந்துத்தத்துவ வெறியர்கள் கை ஓங்குகிறது என்னும் போது ஆதங்கம் கூடுகிறது. உண்மையில் நாம் மகிழ்ச்சி அடைகிறாயோ, கவலைப் படுகிறோமோ?

*- காந்தன்*

***ஒரு பேப்பர்*** *தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....*
**Tel : 020 7043 4314**
*www.facebook.com/orupaper*
*Email: info@orupaper.com*

# தமிழ் அரசியற் கைதிகள் துன்புறுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் – அனந்தி

*தமிழ் அரசியற் கைதிகள் தொடர்ந்தும் அடைக்கப்பட்டு சித்திரவதைக் குள்ளாக்கப்படுவது தொடர்பில் வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் (எழிலன்) விடுத்த ஊடக அறிக்கை*

போர் முடிவடைந்து சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்பட்டுள்ளது எனக் கூறிக்கொள்ளும் இலங்கை அரசாங்கம் சந்தேகத்தின், பேரில் கைது செய்யப்பட்டு வருடக்கணக்கினில் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனைகள் ஏதுமின்றி விடுதலை செய்யவேண்டும் எனப்பல முறை வடமாகாணசபையில் பிரேரணை நிறைவேற்றியும் எந்தவொரு முன்னேற்றமும் காணப்பட்டிருக்கவில்லை.

1983ல் இருந்து இன்றுவரை சிறையில் தமிழ் இளைஞர்கள் மட்டும் படுகொலை செய்யப்பட்டும், துன்புறுத்தப்பட்டும் வருவது அனைவரும் அறிந்ததொன்றே. சிறையில் திடீர் திடீரென தமிழ் அரசியல் கைதிகள் மரணமடைவதும் அதற்காக அரச தரப்பினில் நியாயங்கள் கூறப்படுவதும் உண்மைகள் மறைக்கப்படுவதும் அடிக்கடி நடக்கின்ற விடயமே. இலங்கை தமிழரசுக் கட்சி மாநாட்டின் போதும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் இன்று வரை எந்த ஆக்க பூர்வமான பதிலும் கிட்டியிருக்கவில்லை. சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் படும் துன்பம் கொஞ்சம் நஞ்சமல்ல. சிலமாதங்களுக்கு முன்பு அனுராதபுரம் சிறைச்சாலையினில் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் சிங்கள கைதிகளுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாட்டால் சிறை உத்தியோகத்தர்களால் தமிழ் கைதிகள் மட்டும் தாக்குதலுக்குள்ளாகியமை பற்றி நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம்.

எனினும் தமிழ் அரசியல் கைதிகள் அமைதியாக தங்கள் விடுதலையை நோக்கி காத்திருந்தபோது சிங்கள கைதிகளுடன் அவர்களை சிறைச்சாலை அதிகாரிகள் அடைத்து வைத்தனர். இதையடுத்து அவர்கள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டு சாகும் வரை உண்ணாவிரதபோராட்டத்தை 8 நாட்கள் நடத்தியதை தொடர்ந்து அவர்களை பழைய படியே தமிழ் அரசியல் கைதிகளின் சிறையில் அடைப்பதாக கூறிவிட்டு இன்று வரை அந்த வாக்குறுதியை சிறைஅதிகாரிகள் நிறைவேற்றி இருக்கவில்லை என்பதை அறியமுடிகிறது.

கடந்த 5ம் திகதி அநுராதபுரம் சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் மத்தியில் சிங்கள கைதிகளை (போதைவஸ்து,கஞ்சா,அபின் கடத்தியகுற்றஞ்சாட்டிய கைதிகள்) அனுப்பி அவர்கள் பொய்யானகுற்றசாட்டுகளை இனத்துவேசமான சிறை அதிகாரி உபுல் தெனியநிசாந்தவிடம் தெரிவித்து சிக்க வைத்துள்ளனர். வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளை புலிகளா? எத்தனை சிங்களவரை கொன்றீர்கள்? எனக் கேட்டு மோசமாக தாக்கியுள்ளனர். இதனால் கை முறிந்து மயக்கமுற்று நடக்க முடியாமலும் கோரமாக தாக்கப்பட்டு மீண்டும் சிங்களக்கைதிகளின் சிறையில் அடைக்கப்பட்டு சிகிச்சை கூட வழங்காது வைத்திருக்கும் காட்டுமிராண்டித்தனம் தொடர்கின்றது. சட்டமும் நீதியும் இந்தநாட்டில் தமிழர்களுக்கு மட்டும் புதைகுழிதோண்டி புதைக்கப்பட்டுவிட்டதா? மனிதம் மரணித்தபூமியில் நீதியையும் நியாயத்தையும் நாங்கள் எங்கே தேடமுடியும்? நரகம் என்ற ஒன்று இருப்பது என்றால் அது சிறீலங்காவில் தமிழர்களுக்காக இருக்கும் சிறைக்கூடம் மட்டுமே என்பதே உண்மையாகும். போதிய உணவோ, மருத்துவமோ, சுகாதாரவசதியோ, சட்ட உதவியோ இன்றி நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறையில் வாடுவதை நாம் அனைவரும் கண்டும் காணாது மௌனம் காப்பது மனவேதனையை அளிக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகள் பாரபட்சமாக சிறையில் அடைக்கப்படுவது, துன்புறுத்தப்படுவது, சித்திரவதை செய்யப்படுவதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். சிங்களக் கைதிகள் தமிழ் அரசியல் கைதிகளை அடிப்பது, துன்புறுத்துவது, நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் தமிழ் அரசியல் கைதிகள் சிறைக் காவலாளிகளால் துன்புறுத்தப் படுவதும் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் காலவரையறை விதிக்கப்பட்டு சகல தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கப்பட வேண்டும். வடக்குகிழக்கு மக்களின் நல்லெண்ணத்தை இந்த அரசு பெற்றுக் கொள்ளவேண்டுமானால் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும். அவ்வாறில்லாமல் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப் பட்டிருந்தால் மக்களை அணி திரட்டி அகிம்சை வழி போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி வரும் என்பதையும் தெரிவிப்பதோடு அனைத்து தமிழ் உறவுகளையும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு குரல் கொடுங்கள் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

*அனந்தி சசிதரன் - வடமாகாணசபை உறுப்பினர்*

TrainingConnect
For British Citizenship and Indefinite Leave to Remain (ILR) | All Applicants after 28th October 2013
Home Office Approved Test | City & Guilds Approved Centre
Life in the UK Course B1 Speaking & Listening
- Settlement
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport/Naturalisation
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test

City & Guilds Approved Centre
OUR 100% COMMITMENT
We Train You until You Pass | FREE INITIAL ASSESSMENT
0207 099 2400
694-712 London Road, Hounslow, TW3 1PG
contact@trainingconnect.co.uk | www.TrainingConnect.co.uk

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, OCTOBER 17, 2014, ISSUE 228

## வாசலைத் திறந்தது ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தினால் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து ஐரோப்பிய நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இத்தடையானது முறையான வழிமுறைகளை பின்பற்றி கொண்டுவரப்படவில்லை எனத் தீரப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தடை தொடர்பாக மீள் பரிசீலனை செய்வதற்கு, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமையினால், தடை நீக்கம் உடனடியாக அமுலுக்கு வர மாட்டாது. இருப்பினும், இத்தீர்ப்பானது தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் மத்தியில் புது நம்பிக்கையினைத் தோற்றுவித்திருக்கிறது.

2006ம் ஆண்டில், விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த காலத்தில், இத்தடையானது முற்றிலும் அரசியல் நோக்கங்களுக்காகவே கொண்டு வரப்பட்டது. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இருபத்தியெட்டு நாடுகளில் பெரும்பாலான நாடுகளுக்கு இத்தடைபற்றி எதுவித கருத்தும் இருக்கவில்லை. அப்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்த பிரித்தானியாவின் அழுத்தங்கள் காரணமாக இத்தடை கொண்டுவரப்பட்டதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. இத்தடை மூலம், நடைமுறையிலிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பலவீனமடைந்ததும், சிறிலங்கா அரசாங்கத்தின் கை ஓங்கியமையும், அது பின்னாளில் தமிழர்தரப்பிற்கு மிகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியதும் அண்மைய வரலாறு. மேலும் இத்தடை காரணமாகவே ஐரோப்பாவில் பல தமிழ் அமைப்புகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை முன்னுதாரணமாகக் கொண்டே ஐரோப்பிய ஒன்றியம் இத்தடையினைக் கொண்டுவந்த்தாகவும். இது தவறான நடைமுறை என ஐரோப்பிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுடன், இவ்வழக்கிற்கான செலவுத் தொகையை விடுதலைப்புலிகள் தரப்பில் வழக்கினை பதிவு செய்தவர்களுக்கு வழங்குமாறும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற போர்வையில் நியாயமான உரிமைகளுக்காகப் போராட்டம் நடாத்தி வந்த தேசிய இனங்கள் அடக்கப்பட்டமை பற்றிய விவாதங்கள் நடைபெற்றுவரும் ஒரு காலகட்டத்தில், ஐரோப்பிய நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு முக்கியமானதாகக் கொள்ளலாம்.

இவ்வழக்கினை ஐரோப்பிய நீதிமன்றத்திற்கு கொண்டுவருவதிலும், அதற்கு ஆதரவாக வாதிடுவதற்கு தேவையான ஆவணங்களைத் திரட்டுவதிலும் பலரது பங்களிப்பு இருந்திருக்கும் என நம்பலாம்.

வழிகாட்டிகளாக செயற்பட்டிருக்கும் இவர்களது துணிகரமான, உறுதியான முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

## ஒரு பேப்பர்

*வணக்கம் !*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகளான எங்களுக்கு அடிக்கடி ஒரு குழப்பம் வாறது. அது என்னெண்டால்* ***ஒரு பேப்பர்*** *இல் வாற கட்டுரையள், ஆக்கங்கள் எங்களின்ரை வாசகர்கள் எதிர்பார்க்கிற தரத்தில் இருக்கிறதா ? அல்லது கூடியிட்டுதா ? குறைஞ்சிட்டுதா ? எண்டது தான் அந்தக் குழப்பம். இதை பற்றி ஒரு கருத்துக் கணிப்பு நடத்தினால் என்ன எண்டும் நாங்கள் நினைக்கிறனாங்கள். ஆனால் இப்பிடியான விசயங்களிலை கருத்துக் கணிப்பு நடாத்திறது இலேசான காரியமில்லை எண்டதாலை நாங்கள் அந்த முயற்சியிலை இன்னமும் இறங்கேல்லை.*

*சரியான அளவிலை (தரத்திலை) ஆக்கங்கள் அமையாவிட்டால், வாசிக்கிறதுக்கு ஒண்டும் இருக்காது. அதேநேரம் தரம் கொஞ்சம் அதிகரித்தாலும் இது என்ன பாடப்புத்தகம் மாதிரி அலுப்படிக்குது எண்டு, பேப்பர் மாவரிக்கவும் எண்ணை வடிக்கவும் போய்விடும். இப்பிடித்தான் நெடுக* ***ஒரு பேப்பர்*** *ஐ ஒண்டுக்கு இரண்டாக எடுக்கிற ஒரு அம்மாவைப் பிடிச்சு கருத்துக் கேட்டம், அவ சொன்னா தங்கச்சி மெற்றோ, ஈவினிங் ஸ்ராண்டர்ட் பேப்பருகளை விட ஒரு பேப்பர் திறம், அதை ஒண்டும் அடிக்கேலாது எண்டு. இதென்ன இந்த அம்மா அந்த இரண்டு இங்கிலிஸ் பேப்பருகளோடை ஒரு பேப்பரை ஒப்பிடுகிறா. அதுகள் இரண்டும் ஒசிப் பேப்பர்கள் எண்டதைத் தவிர வேறை என்ன ஒற்றுமை இருக்கு எண்டு மண்டையை குழப்பினால், அவவே சொன்னா இல்லைத் தங்கச்சி அந்த பேப்பருகள் ஸ்ரேப்பிள் பண்ணியிருக்கிறதாலை பேப்பரை தனியா எடுக்கக்கிள்ளை பேப்பர் கிளிஞ்சிடுது, அல்லது ஓட்டை விழுகுது. ஆனால்* ***ஒரு பேப்பர்*** *இல் அந்தச் சிரமமில்லை என்று சொன்னா. அது சரி பேப்பரை படிக்கிறதுக்கு ஏன் பக்கங்களை ஒவ்வொண்டாய் பிரிச்சு எடுக்கிறிங்கள் எண்டு கேட்க, அவ சொன்னா, உதுகளை ஆர் வாசிக்கிறது? நான் சொன்னது கத்தரிக்காய் பொரிச்சிட்டு எண்ணை வடிக்கிறதுக்கு பேப்பரை பாவிக்கிறது பற்றி. இதுக்கு மேலை அந்த அம்மாவுடன் என்னத்தைக் கதைக்கிறது. ஆனால் அந்த அம்மா மாதிரி இன்னும் கனபேர் இருக்கினம் எண்டது மாத்திரம் உண்மை.*

*இது பகிடிபோல இருந்தாலும் ஒரு சமூகப்பிரச்சினை பாருங்கோ. இஞ்சை பிறந்த பெடியளை விடுங்கோ, மற்றாக்களிலை கனக்கப்பேர் ஏதோ தமிழிலை கதைக்க எழுதத் தெரியாத ஆட்கள் மாதிரியும் ஆனால் தாங்கள் இங்கிலிசிலை விண்ணர்கள் மாதிரியும் திரியினம். சரி அவைக்கெண்டு இங்கிலிசிலை ஆக்கங்களை பிரசுரிச்சால், அது விளங்குதில்லை எண்டு சொல்லுகினம் மொத்தத்திலை வாசிக்கிற பழக்கமே கனபேருக்கு இல்லை எண்டதுதான் உண்மை போல இருக்குது. இப்ப நாங்கள்* ***ஒரு பேப்பர்*** *அடிக்கிறம் எண்டதுக்காக இதைச் சொல்லேல்லை. ஆனால் இதுவும் இண்டைக்கு இருக்கிற பிரச்சினை பாருங்கோ.*

*எங்கடை கணிப்பிலை இங்க கனபேருக்கு எழுத வாசிக்கிற விசயத்திலை ஒரு அளவிற்கு அங்காலை இல்லை எண்டது மாதிரித்தான் தெரியுது. சிலவேளை நாங்கள் நினைக்கிறது பிழையாகவும் இருக்கலாம். அப்பிடியெண்டால் நீங்கள் இதுபற்றி என்ன நினைக்கிறியள் எண்டு எங்களுக்கு தெரியப்படுத்துங்கோ.*

*வேறை என்ன?*

*சந்திப்பம்*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# The Constitution as a cause for the violence and bloodshed

By Basil Fernando

As the possibility of an election has become a "hot topic" of the day, with it has emerged the problem of the 1978 Constitution and the system of the Executive Presidency, as a sharp point of contest and debate in Sri Lanka. In the midst of this unfolding scenario, President Rajapaksa, in a much publicized speech, stated that he would be willing, more than any other person, to abolish the executive presidency if, the TNA and the diaspora give an undertaking that they will not demand a separate state. In doing so, he has tried to create a justification for continuing with the executive presidency, as a measure to stand against any moves for a separate state.

Meanwhile, Athureliye Rathana Thero, Member of Parliament, representing the Jathika Hela Urumaya Party, which is a partner in the coalition government, stated in a highly represented public gathering that if it was not for the 1978 Constitution it was most likely that the former JVP leader Rohana Wijeweera and the LTTE leader Velupillai Piripaharan may have ended up as members of parliament and the bloodshed that the country experienced in the past three decades could have been avoided. He stated this at a meeting where a draft for an alternative constitution was submitted for public discussion. The view over-expressed by several speakers during this meeting was that the 1978 Constitution was introduced purely to achieve the individual ambitions of its originator, former President J.R. Jayawardena and, presently, it serves only the personal interests of the incumbent President Mahinda Rajapaksa and his family. Athureliey Rathana Thero, also publicly apologized for voting with the government in passing the 18th Amendment to the Constitution.

While there are many issues of importance in this debate, one particular aspect of interest to all is the public identification of causes for the violence in the past several decades. How far the 1978 Constitution contributed to creating the background for this violence and the ensuing bloodshed is an important issue not only from the point of view of the debate on a possible election but also for understanding vital societal issues in Sri Lanka.

As for the President, to state that he is the person who wants this Constitution to be abolished more than anyone else is an admission on his part, that this Constitution is an evil one that needs to be abolished. As to how an evil constitution could contribute to create and sustain a unitary form of government is beyond comprehension. Thus, the President's own argument seems to sway in favour of that of his opponents – that there is no justification for not abolishing this Constitution.

Perhaps this is a moment when the nation can come to a greater self-understanding of the factors that have caused this peril. If such a self-understanding could be achieved, a firm foundation would be created that would guide the people who, in the future, will try and resolve the nation's problems.

Perhaps, the Sri Lankan electorate is beginning to understand how the extreme forms of violence that have prevailed in the country have been the creation of evil political manipulations of just a few persons enjoying the privileges of power and the possibilities of self-aggrandizement, purely for selfish gains. What this implies is that the people have been exposed to a politically criminal scheme to achieve the selfish aims of a few unscrupulous persons.

Perhaps this is a moment when the nation can come to a greater self-understanding of the factors that have caused this peril. If such a self-understanding could be achieved, a firm foundation would be created that would guide the people who, in the future, will try and resolve the nation's problems.

The debate, therefore, is one about "arising out of a catastrophe", and not about saving the country from a catastrophe, as President Rajapaksa wants to present it.


A constitution that causes lawlessness is the tragedy that the country is faced with. The selfish creators of the Constitution created lawlessness for their own "political survival". This lawlessness has virtually destroyed the independence of Sri Lanka's Judiciary and also the independence of the Legislature. Both these branches of government were a threat to the Executive Presidency. The people have thus been exposed to lose of the court as a place for resorting to settle their disputes and the parliament as a forum of public debate on matters that concern the nation. President Rajapaksa still argues that this is a necessary condition in order to maintain the unitary state. The Constitution also caused the displacement of all public institutions, including the premier institution for the enforcement of the rule of law, i.e. a competent and an independent policing system. Daily reports in the media reveal how low this institution has sunk.

The debate, therefore, is one about "arising out of a catastrophe", and not about saving the country from a catastrophe, as President Rajapaksa wants to present it.

The result of these and other problems created by the Constitution is that genuinely free and fair elections become impossible. This is perhaps the reason why President Rajapaksa cannot agree to abolish the existing constitutional framework for the executive presidency, though he publicly declares that he wants to abolish it more than anyone else.

Perhaps, the nation is beginning to emerge out of the control of the propaganda machinery, which has been attributing all its levers as consequences of "the war". The nation perhaps is beginning to see that "the war itself, was a product of the supreme law of the country" – the Constitution.

# The Indo-Lanka 13A



By Eelapalan

There is an uptick on the TNA pronouncements lately about India and her role in the 13th Amendment to Sri Lanka's constitution. A series of events perhaps contributed this: TNA delegation's meeting with the new Indian prime minister and now the NPC Chief Minister's letter to the Sri Lankan President invoking India's role as a guarantor of Tamil interests.

Important to analyze Justice C.V.Wigneswaran's letter to the Sri lankan president because it is a calculated step. It fits within the strategies outlined by TNA leadership in public. That is to show the world that 13A is not sufficient and then ask for help in correcting it. But unfortunately TNA leadership's worldview has shrunk just to Delhi. A frog-in-the-well world view.

The Chief Minister deserves credit for calling out the 13A for what it is. Impotent and hollow. Better late than never. He builds his case in the letter by highlighting "intransigence and the lack of political will and commitment on the part of the executive and the central government.". As The Hindu was eager to highlight, he also seeks India's active role.

If India had cared about the intent of the 13A, it would have intervened when the Sri lankan Supreme Court said the merger of the Northern and Eastern provinces was null and void. But it did not.

There are two aspects, if one were to look deeper, that are troubling.

The letter essentially targets the Sri lankan president Rajapakse as the stumbling block. The letter does not include the historical facts of the similar issues faced by his predecessor and the well established pattern of Sri Lanka neglecting at will any democratic and legitimate wishes of the Tamil people. The intransigence and lack of political will are not just a Rajapakse problem. It is a Sinhala Sri lanka problem. Rajapakse is just another manifestation. Varatharajah Perumal made his views known while the Indian military was still on the ground and even went as far as unilaterally declaring Independence. It is important to make this distinction between the current president and the state very clear. He is only a tool. So as not to confuse the Deputy with the Sheriff. To quote from that post a year ago,

"The farce that is 13A is unravelling as expected. and the Sinhala hardliners have drawn their redlines. If TNA is unable to make progress, it may take the path of supporting a regime change agenda that is underway in some quarters. It is a shifting of the problem. It is confusing the Sherif to a deputy as Bob Marley would say. "

The letter should not be the alibi for TNA's support for regime change early next year. It will certainly come up. Even if you replace a Rajapakse with a Ranil, nothing will change.

As said in another post last year on the eve of the NPC election results, is TNA being loud enough ?

"But the Sinhala Buddhist state has no reason to listen. It has no obligation to act. It never feels accountable, in any way, to the Tamils.

It will be no different this time. But despite the structural genocide against them, Tamil people have spoken loudly and clearly.

## Can TNA now speak as loudly and clearly as the people who voted for them?

So loudly that it reaches the ears of the powers that pushed for the election. Scream so they are unable to go back to sleep on the Tamil issue as they did in 2009."

How loud and clear is the Chief Minister being when he calls on India " as a guarantor of Tamil rights" to "actively participate and contribute in the negotiation process"?

There is no denying that India is indispensable when it comes to resolving the Tamil national question. But thinking that she is inherently supportive of Tamil rights and is motivated to see a Thirteenth Amendment Plus through is only wishful thinking.

The conflation of the Indo-Lanka Accord with the Tamils' interests is a dishonest act. The Indo-Lanka Accord has India's interests, and the 13A has Sri Lanka's interests. Neither has the Tamils' interests. More often than not, Eelam Tamils' interests and India's interests don't align. Please see this post under the India's regional policy section for India's view of the 13th Amendment.

13A is a consequence of the Indo – Lanka Accord. That is the one and only relationship. India only has a moral obligation, if any, to see the 13A through. What matters to India the most is the exchange of letters that preceded the accord. An account by the then Indian ambassador JN.Dixit captures the importance of the letters.

"I pointed out that India's co-operation with Sri Lanka to solve the ethnic problem was predicated on Sri Lanka giving positive responses on these important concerns of India."

And the Indo-Lanka Accord technically binds India with more obligations and with little room for it to intervene if the Accord is not faithfully implemented by Sri Lanka. And India has consistently and faithfully kept to its part of the obligations under the accord. Namely:

There is no denying that India is indispensable when it comes to resolving the Tamil national question. But thinking that she is inherently supportive of Tamil rights and is motivated to see a Thirteenth Amendment Plus through is only wishful thinking.

1.1 Desiring to preserve the unity, sovereignty and territorial integrity of Sri Lanka:

1.5 Conscious of the necessity of strengthening the forces contributing to the unity, sovereignty and territorial integrity of Sri Lanka, and preserving its character as a multi ethnic, multi lingual and multi religious plural society in which all citizens can live in equality, safety and harmony, and prosper and fulfill their aspirations:

This language is still pervasive in all Indian official communications. That all citizens live in equality, blah, blah.

The binding resolutions of the Accord only focus on the formation of the Provincial Councils for the Northern and Eastern provinces and the eventual referendum. There is nothing in there about its smooth functioning or if it functions at all.

If India had cared about the intent of the 13A, it would have intervened when the Sri lankan Supreme Court said the merger of the Northern and Eastern provinces was null and void. But it did not.

On the contrary, the Indian establishment has demonstrated multiple times that not going beyond 13A is even a higher policy priority than seeing the full implementation of the 13A. India worked to undermine any possible opening to such an eventuality through a UN process. It diluted the resolutions against Sri Lanka and then voted against the International Independent Investigations ensuring such a path stays shut for the Tamils.

The binding resolutions of the Accord only focus on the formation of the Provincial Councils for the Northern and Eastern provinces and the eventual referendum. There is nothing in there about its smooth functioning or if it functions at all.

As the previous post showed through Dr. Destradi's work that India knew the Norwegian effort would not succeed as well.

Sri Lanka has a much better read of the Indian position than the TNA leadership does. Or is it that the TNA leadership is afraid to spell out the real truth to the people?

The intransigence and lack of political will are not just a Rajapakse problem. It is a Sinhala Sri lanka problem. Rajapakse is just another manifestation.

Mavai and the CM continuing to pick on the Northern Provincial Council (NPC) members who are trying to move the UN process towards investigation of Genocide are actually reflecting the Indian worry more than anything else. The Tamil Nadu Assembly has passed far reaching resolutions on the Tamil genocide, sanctions against Sri lanka and on the referendum. Rather than rallying the people behind those initiatives and welcoming the NPC resolutions, as the UN team itself did in September, the TNA leadership is busy worrying about not making Delhi upset. With this TNA trajectory, Eelam Tamils are unfortunately stuck behind the agendas of regime change and fighting for the full implementation of the 13A. Not much more.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
அஜந்தா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை தவறானது

## ஐரோப்பிய நீதிமன்றம் தீர்ப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தினால் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சேர்க்கப்பட்டுள்ளமை, முறையான வழிமுறைகளைப் பின்பற்றி கொண்டுவரப் படவில்லை என அதனை நீக்கக்கோரி லக்ஸம் பேர்க்கிலுள்ள ஐரோப்பிய நீதிமன்றம் ஒக்ரோபர் 16ம் திகதி வியாழக்கிழமை உத்தரவு பிறப்பித் துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்ற அடிப்படையில் தனிநபர்கள் மற்றும் அமைப் புகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கட்டுப் பாட்டு நடவடிக்கைகளின் அடிப்படையில் விடு தலைப்புலிகள் அமைப்பிற்கும் அதனுடன் தொடர் புடையவர்கள் மீதாக தடை பொருத்தமற்றவை எனவும் அவற்றை ரத்து செய்யவும் ஐரோப்பிய நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ரத்து செய்திருந்தாலும், பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நீக்கப்படவில்லை என்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.**

விடுதலை புலிகள் அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கப்படுவதில் கையாளப்பட்டி ருந்த நடைமுறையில் தவறுகள் இருக்கின்ற கார ணத்தால், இந்த முடிவை எடுத்துள்ளதாக ஐரோப் பிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு என்று இந்தியாவில் அறிவிக்கப்பட்டிருந்த முடிவின் அடிப் படையில் ஐரோப்பிய ஆணையகத்தில் முடி வெடுத்திருந்ததாகவும், அது முறையல்ல எனவும் இத்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களின் பின்னர் இத்தீர்ப்பின் முடிவு நடைமுறைக்கு வரும் எனவும் கட்டுபாடு கள் அவசியம் என்றால் ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக இரண்டுமாதங் கள் பத்துநாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவா தப் பட்டியலில் இருந்து நீக்குவதா, வைத்திருப் பதா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் இரண்டு மாதங்களில் முடிவெடுக்க வேண்டும். அவ்வாறு முடிவு எடுக்கும் வரை, பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பெயர் நீக்கப்படாது என இத்தீர்ப் பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விடுதலைப் புலிகள் அமைப்பு உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்ட ஒரு அமைப்புதானே தவிர சர்வதேச சட்டங்களின் அதனை பயங்கரவாத அமைப்பாக வரையறுக்க முடியாது என அந்த அமைப்பின் சார்பாக முன் வைக்கப்பட்ட வாதத்தையும் நீதிமன்றம் நிராகரித் திருந்தது.

இவ்வழக்கு விசாரணை தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்பின் செலவு உட்பட அனைத்து செலவு களையும் ஐரோப்பிய ஒன்றியமே பொறுப்பெடுக்க வேண்டும் எனவும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவாக இருந்த நெதர்லாந்து, இங்கிலாந்து, மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழு தமது சொந்தச் செலவுகளை ஏற்க வேண்டும் எனவும் ஐரோப்பிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான கட்டுப் பாட்டு நடவடிக்கைகளை ரத்து செய்திருந்தா லும், பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நீக்கப்பட வில்லை என்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

சுவிற்சலாந்தில் வசிக்கு தமிழ்த் தேசிய செயற் பாட்டாளர் லதன் சுந்தரலிங்கம் அவர்களே ஐரோப் பிய ஒன்றியம் விதித்த தடையை எதிர்த்து 2011 இல் வழக்கினை தொடுத்திருந்தார். வழக்கு விசாரணை இவ்வாண்டு பெப்ரவரி மாதம் முதல் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் விடுதலைப் புலிகள் சார்பாக நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த வழக்கறிஞர் விக்டர் கோப் முன்னிலையாகி வாதாடி வந்தனர்.

மேற்படி தீர்ப்புத் தொடர்பாக கருத்து வெளி யிட்டுள்ள மனிதவுரிமை சட்டவாளர் திரு. அருண் கணநாதன், "இது தமிழ் மக்களுக்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு சட்டரீதியான வெற்றி. இத் தீர்ப்பானது விடுதலைப்புலிகளுடன் தொடர்புடை யதாக குற்றஞ்சாட்டப்படும் புலம் பெயர் தமிழர் கள் விடயத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும். விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இதுவரை வழங் கப்பட்ட தீர்ப்புகளையிட்டான ஐயப்பாட்டையும் இது ஏற்படுத்துகிறது" என்றார்.

**மூன்று மாதங்களின் பின்னர் இத்தீர்ப்பின் முடிவு நடைமுறைக்கு வரும் எனவும் கட்டுபாடு கள் அவசியம் என்றால் ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அவர் மேலும் குறிப்பிடுகையில், " ஐரோப்பிய சபைக்கும் இது மேலும் சுமையை அதிகரிப்ப துடன். இன்னும் மூன்று மாத காலத்துக்குள் இந்த தீர்ப்பை எதிர்கொள்வதற்கு மேலும் சாட்சியங்கள் தேவைப்படும். ஆனால் இது மிகவும் சிரமமான பணியாக இருக்கும்." என்றார்.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## சிலப் பாராட்டை எதிர்பார்க்காதீர்கள்!

ஒருவர் ஒரு சிறப்புச் சொற்பொழிவிற்காகத் தன் னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார். ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி விளக்கமாக பேச வேண்டிய சொற்பொழிவு அது. அது சம்பந்தமாக நிறைய ஆராய்ச்சிகள் செய்து, நிறைய நூல்கள் படித்து, அதன் அனைத்து அம்சங்களையும் விளக்கி கேட்பவருக்கு எந்தவொரு சந்தேகமோ, குழப் பமோ வராத அளவு தன் பேச்சு இருக்கும்படி தயார் செய்து முடித்தார். நிகழ்ச்சியில் பேசும் முன் ஒத் திகை பார்த்து, சொற்பொழிவு எப்படி இருக்கிறது என்ற கருத்தை அறிந்து கொள்ள விரும்பிய அவர் ஒரு நண்பரை அழைத்து அவரிடம் பேசிக் காட்டி னார். கணீரென்ற குரலில் அருவியாக கருத்தான வார்த்தைகளைக் கொட்டி மிகச் சிறப்பாகப் பேசி விட்டு தன் நண்பரின் அபிப்பிராயத்தை அவர் கேட்டார்.

நண்பர் அவரை இரக்கத்துடன் பார்த்து சொன் னார். "பாவம், உனக்கு சுருக்கமாகச் சொல்லத் தெரியவில்லை."

அவர் விக்கித்துப் போனார்.

சிலருக்கு பாராட்ட மனம் வராது. எல்லா நல் லவற்றிலும், எல்லா சிறப்புகளிலும் ஏதாவது ஒரு குற்றம் கிடைக்காதா என்று கஷ்டப்பட்டு தேடு வார்கள். அப்படித் தேடினால் எதிலும் எப்போதும் ஓரிரு சில்லறைத் தவறுகள் அல்லது குறைபாடுகள் கண்டிப்பாகக் கிடைக்கும். அப்படிக் கண்டுபிடிப் பதை மாபெரும் குற்றங்களாகச் சொல்லி மகிழ் வார்கள். மற்றவர்களின் சந்தோஷங்களை ஒரேய டியாக வடிய வைத்து விடுவார்கள்.

திருவிளையாடல் திரைப்படத்தில் தருமியாக வரும் நாகேஷ் சொல்லும் வசனம் போல் "குற்றம் கண்டுபிடித்தே பெயர் வாங்குபவர்கள்" நிறைய பேர் இருக்கிறார்கள். அடுத்தவர்களின் சாதனை களை இவர்களால் ரசிக்க முடியாது. அடுத்த வர்களின் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள மனம் இவர் களுக்கு வராது. பலரும் பாராட்டினாலும் இவர்கள் வித்தியாசப்பட்டு விமரிசிப்பார்கள். அப்படி மாறு படுவதாலேயே அவர்களின் கவனத்தை ஈர்க்க முயற்சிப்பார்கள். அதுவும் பிரபலங்களை விமர் சிப்பது என்றால் இவர்களுக்கு தனி உற்சாகம் வந்து விடும். அவர்களை விமரிசிப்பதாலேயே அவர் களை விட இவர்கள் உயர்ந்தவர்கள் என்கிற நினைப்பில் இருப்பார்கள். தங்களை வித்தியாச மான அறிவுஜீவிகளாகக் காட்டிக் கொள்ள நினைப் பார்கள்.

குறைகள் கண்டிப்பாக சுட்டிக் காட்டப்பட்டால் தான் அவற்றைத் திருத்திக் கொள்ள முடியும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. அப்படி திருத்திக் கொள்ளும் போது தான் மனிதன் முன்னேறுவதும், பக்குவம் அடைவதும் சாத்தியமும் கூட.

ஆனால் நிறைகளை ஒரேயடியாகப் புறக்கணித்து விட்டு, குறைகளை பூதக்கண்ணாடி வைத்து தேடுவது என்பது நேர்மையான விமரிசனத் தன்மை அல்ல. மாறாக அது விமரிசிப்பவனின் தரத்தின் சிறு மையை சுட்டிக் காட்டிவிடும்.

வாழ்க்கைக் கனவுகளை நனவாக்க நாம் எடுத்து வைக்கும் ஆரம்ப அடிகள் மிக மென்மையா னவை. நமக்கு நம் மீதே முழு நம்பிக்கை ஏற்பட்டி ருக்காத காலமது. நம் ஆரம்ப முன்னேற் றங்கள் எப்படி இருக்கின்றன என்பதை அடுத்தவர் வாய்வழியாக சில சமயம் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளத் தோன்றும். அப்படிப்பட்ட சமயங்களில் இது போன்றவர்களின் கருத்தைக் கேட்கும் தவ றைச் செய்து விடாதீர்கள். கேட்காமலேயே தங்கள் கருத்தைத் தெரிவிக்கும் தன்மை இவர்களுக்கு உண்டு. அப்படி தெரிவித்தாலும் அதை அலட்சியப் படுத்தப் பழகிக் கொள்ளுங்கள். ஏனென்றால் இவர் கள் கருத்து, விதைத்தவுடன் ஊற்றப்படும் வெந் நீராக அமைந்து விடும். அந்தக் கனவு விதைகளை ஆரம்பத்திலேயே அழித்து விடும்படியான அமில மாக இவர்கள் விமரிசனம் அமைந்து விடலாம். மன உறுதி மட்டும் இல்லா விட்டால் உங்கள் தன்னம் பிக்கை அப்போதே காணாமல் போய் விடும்.

எத்தனையோ திறமைகள் முளையிலேயே இவர் களால் கிள்ளி விடப்பட்டிருக்கின்றன. அதிலும் இவர்களில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து விட்டால் மற்றவர்களின் உற்சாகத்தை யும், துடிப்பையும் கண நேரத்தில் காணாமல் போகும்படி பார்த்துக் கொள்வார்கள்.

இவர்கள் பேச்சுகள் எல்லாமே குறைகளையும், பலவீனங்களையும் சார்ந்ததாக இருக்கும். பேச்சு கள் மட்டுமல்லாமல் பார்க்கின்ற விதமும், சொல் கின்ற தோரணையும் கூட கிண்டல் நிறைந்ததாக இருக்கும். இவர்களை அலட்சியப்படுத்தி தூர நகர் வதே புத்திசாலித்தனம். எப்பாடுபட்டாவது இவர்க ளிடமிருந்து பாராட்டைப் பெற்று விடலாம் என்று நினைப்பது மலைக் கல்லில் கிணறு தோண்டுவ தைப் போல் பலன் தரமுடியாத செயல்.

அதே போல ஒன்றைப் புரிந்து கொள்ளும் சக்தி யற்றவர்களிடமும் அதைக் குறித்த பாராட்டை நாம் எதிர்பார்க்கக் கூடாது. அறிஞர் அண்ணா அழகாகக் கூறுவார். "செவி பழுதுற்றவன் அருகில் சென்று சிதம்பரம் ஜெயராமன் என்ன அழகாய்ப் பாடினா லும் அவன் 'இவருக்கு என்ன ஆயிற்று? இவர் வாய் ஏன் இப்படி கோணிக் கொள்கிறது' என்றல்லவா நினைப்பான்?". நகைச்சுவையாகத் தோன்றினா லும் சில நேரங்களில் நாமும் அதே போன்ற முட் டாள்தனத்தைச் செய்து விடுகிறோம்.

எதையும் பாராட்டவும், விமரிசிக்கவும் கூட அடிப்படைத் தகுதி இருந்தால் மட்டுமே அந்த பாராட்டு, விமரிசனமும் அர்த்தமுள்ளதாக இருக்க முடியும்.

எனவே பாராட்ட மனமில்லாதவனிடமிருந்தும், பாராட்ட தகுதி இல்லாதவனிடமிருந்தும் பாராட்டை எதிர்பார்க்காதீர்கள். முன்னவன் பாராட்ட மாட் டான். பின்னவன் பாராட்டு பொருளில்லாதது மாறாக உள்நோக்கம் இல்லாத ஒருவன், உள்ளதை உள்ளபடி சொல்ல முடிந்தவன், உங்களைப் பாராட்டாமல் விமரிசித்தாலும் கூட அது உங் களுக்கு உபயோகமானதாக இருக்கும்.

மேலும் படிப்போம்....

- என்.கணேசன்

# நிறைவேற்று அதிகாரமுள்ள அதிபர் முறையும், தமிழர்களின் அரசியல் உரிமைகளும்




**கோபி**
*ஒரு பேப்பர்*

கடந்த ***ஒரு பேப்பர்*** இல் இப்பத்தி சிறிலங்காவின் அதிபர் தேர்தல் பற்றியதாகவே எழுதப்பட்டது. இம்முறையும் அது தொடர்பாகவே எழுதப்படுகிறது. இலங்கைத் தீவு தொடர்பான நடப்பு அரசியல் அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவிருப்பதாக எதிர்பார்க்கப்படுகின்ற இத்தேர்தல் பற்றியதாக அமைந்திருக்கிறது. அரசியல் கட்சிகளினதும், அதன் தலைவர்களின் நடவடிக்கைகளும் இத்தேர்தலை ஒட்டியதாகவே அமைந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இதுவொரு முக்கியத்துவமில்லாத விடயமாக இருப்பினும், சில தமிழ்த்தரப்புகள், குறிப்பாக தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை இத் தேர்தலை எதிர்கொள்கின்ற முறை இத்தேர்தலுக்கும் அவசியமில்லாத முக்கியத்துவத்தை வழங்கியிருக்கிறது. இத்தேர்தலையிட்டான வெளித்தரப்புகளின் எதிர்பார்ப்பும் இதற்கு ஒரு காரணம் எனலாம்.

கடந்தபோன இரண்டு வாரங்களில் நடைபெறும் சம்பவங்களையும் அரசியல் தலைவர்களது பேச்சுக்களையும் வைத்துப் பார்க்கும்போது, ஏற்கனவே இவர்கள் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்துவிட்டார்களோ என எண்ணுமளவிற்கு நகர்வுகள் மேற்கொள்ப்படுவது தெரிகிறது. ஆதலால் வரும் ஆண்டில் இத்தேர்தல் நடைபெறுவது ஒரளவிற்கு உறுதியாகிவிட்டது. இவ்விடயத்தில் புலம்பெயர் நாடுகளிலுள்ள சில தமிழ் குழுக்களும், தனிநபர்களும்கூட அக்கறை காட்டுகிறார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் லண்டனுக்கு வந்திருந்த ரணில் விக்கிரமசிங்க லண்டனில் உள்ள சில உதிரித் தமிழ்க்குழுக்களைச் சந்தித்து ஆதரவு கேட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் வேடிக்கை என்னவெனில் முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்து முடிந்த சில நாட்களிலேயே சிறிலங்கா தூதரகங்களுக்கு காவடி எடுத்து, கோத்தபாய இராஜபக்சவின் அனுக்கிரகத்திற்கு காத்திருந்தவர்களே இப்போது இரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்து ‘ஆட்சி மாற்றம்’ (Regime Change) ஏற்படுத்த துடிக்கிறார்கள். இரணில் விக்கிரமசிங்க லண்டனில் நின்ற அதே காலப்பகுதியில் லண்டனுக்கு வந்திருந்த தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் மாவிட்டபுரம் சேனாதிராசாவும் இரணில் விக்கிரமசிங்கவை சந்தித்ததாக சில தகவல்கள் வெளியாகியிருந்தாலும் அவற்றை உறுதி செய்ய முடியவில்லை. கூட்டமைப்பின் லண்டன் கிளையை சேர்ந்தவர்கள் ரணிலை சந்தித்ததாக பிறிதொரு தகவல் தெரிவித்தாலும் அதனையும் உறுதி செய்ய முடியவில்லை.

லண்டனில் இரணில் தமிழ்க்குழுக்களை சந்தித்தது தொடர்பாக கொழும்பு ஊடகமொன்றினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன், ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத்தலைவராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்டமையால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரணிலை சந்திக்க மறுத்துவிட்டதாகக் கூறியிருக்கிறார். நான் அறிந்தவரையில் சுரேன் சுரேந்திரனுக்கும் சஜித் பிரேமதாசவிற்கும் தனிப்பட்ட பகைமையிருக்க வாய்ப்பில்லை. ஆனால் இந்தியாவின் ‘கருணையினால்’ பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையிலிருக்கிற கூட்டமைப்பிற்கும், அதன் புலம்பெயர் சகாக்களான உலகத் தமிழர் பேரவைக்கும் பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக நீக்கக் கோரும் சஜித் பிரேமதாசவிற்கும் இடையில் ஒவ்வாமை இருப்பதில் ஆச்சரியமில்லை. இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சியின் மீட்சிக்கு சஜித் பிரேமதாசா இன்றியமையாதவராக இருக்கிறார் என சிங்களத் தேசியவாதிகள் கூறிவருவதனை இத் தமிழ்த் தரப்புகள் அறியும் என நம்பலாம்.

இரணில் விக்கிரமசிங்கவுடனான தமிழ்க்குழுக்களின் சந்திப்புகள் பற்றி கொழும்பு அறிந்து வைத்திருக்கிறது என்பதனை உறுதி செய்யும் வகையில், இவ்வாரம் கிளிநொச்சிக்கு பயணம் செய்த மகிந்த இராஜபக்ச அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது நாடு கடந்த அரசாங்கத்திற்கும் இரணில் விக்கிரமசிங்கவிற்கும் சந்திப்பு நடந்ததாகக் கூறியிருக்கிறார். நாடுகடந்த அரசாங்கத்திற்கு நெருக்கமான சிலர் இவ்வாறான சந்திப்புகளில் ஈடுபட்டமை உண்மைதான். எனினும் இவர்கள் உருத்திரகுமாரனின் அனுமதியுடன் இரணிலை சந்தித்தார்களா அல்லது தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டார்களா என்பது தெரியவில்லை.

### ◆ பதின் மூன்று பிளஸ் இல்லை

இரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைப்பதன் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்படுவதை விரும்பும் சில தமிழர்களிடம் இரணில் விக்கிரமசிங்க எத்தகைய தீர்வினை முன்வைக்கிறார் எனக் கேட்டபோது, அவர் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்திற்கு அதிகமான அதிகாரங்களுடைய மாகாண சபை முறைமையை ஏற்படுத்துவார் எனத் தாம் நம்புவதாகவும், ஆனால் எத்தகைய தீர்வு என்பதனை இப்போதே குறிப்பிட்டு சிங்கள மக்களின் வாக்குகளை இழக்க அவர் விரும்பவில்லை எனக் கூறுகிறார்கள். அதாவது சிங்கள மக்களினதும் மற்றய இன மக்களினதும் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதன் பின்னர், பெரும்பான்மையான சிங்கள மக்களின் விருப்பத்திற்கு எதிராக மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரம் தருவார் என்பது இவர்களது நம்பிக்கை. இதனிடையே ஒக்டோபர் 13ம் திகதி கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு செவ்வி வழங்கிய இரணில், தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் பதின்மூன்றாம் திருத்தச் சட்ட மூலத்துக்கு அதிகமாக எதுவித அதிகாரமும் வழங்கப்போவதில்லை எனக்குறிப்பிட்டுள்ளார். ஆக இரணில் என்ன கூறினாலும் அது சிங்கள மக்களை திருப்திப்படுத்தவே தவிர அது அவரது உண்மையான நிலைபாடு என்பதுதான் அவரை ஆட்சிக்கு கொண்டுவர விரும்பு தமிழர்களின் வாதமாக இருக்கிறது. இவ்விடத்தில், சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்கிற தீர்வையை தாம் வேண்டுவதாக கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை, குறிப்பாக சுமந்திரன் அடிக்கடி கூறி வருவதனையும் நினைவிற் கொள்ளவும்

### ◆ நிறைவேற்று அதிகார அதிபர் முறையை ஒழித்தல்

சிறிலங்காவின் அதிபர் தேர்தலில், தமிழர்களுக்கான அரசியல் உரிமைகள், சுயாட்சி போன்ற விடயங்களில் பேச்சளவிலாவது நெகிழ்ச்சித்தன்மை காட்டும் ஒருவர் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் அறவே இல்லை என்பதனால், சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளத் தக்க சிலவிடயங்களை முன்வைத்து எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரை ஆதரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி போன்றவை தயாராக இருக்கின்றன. இறுதிக்கட்ட பேரம் பேசல்களில் முன்னேற்றம் ஏற்பட்டால் முஸ்லீம் கொங்கிரஸ் கட்சியினரும் இவர்களுடன் இணையக் கூடும்.

> **நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை கொண்டு வருவதற்கு முன்னதாகவே தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுவருவதும், அதற்கெதிராக இளைஞர்கள் போராடிய வரலாற்றினையும் மறந்து விட்டு ஜனாநாயகத்தை நிலைநாட்டப் போவதாக இவர்கள் கூறுவது வெளித்தரப்புகளைத் திருப்திப்படுத்தவே தவிர இதில் வேறெந்த முகாந்திரமுமில்லை.**

பதினெட்டாம் திருத்தச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியபோது அமைதிகாத்த கொழும்பு தாரண்மை வாதிகள் நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பது பற்றி இப்போது கோரிக்கை விடுப்பது வேடிக்கையானது. இத் திருத்தச்சட்ட மூலம் வழியாகவே ஒருவர் இரண்டு தடவைக்குமேல் ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. புதிதாக ஜனநாயக வழிமுறைக்குள் செல்லும் ஆபிரிக்க நாடுகள் கூட ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக இருபதனை மறுக்கும் சட்டங்களை கொண்டுவரும் போது, இந்நாடுகளுடன் ஒப்பிடும்போது ஓரளவு நீண்ட ஜனநாயக பாரம்பரியத்தினை கொண்டிருக்கும் இலங்கைத் தீவில் ஜனநாயக விதிமுறைகள் தொடர்ந்து மீறப்பட்டு வருகின்றன. இதனைச் சீர் செய்வதுதான் தமது தலையாய கடமை என்பது போலவும், இதற்காகத்தான் இவர்களை தமிழ் மக்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பினார்கள் என்பது போலவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்துகொள்கிறது.

> **தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இதுவொரு முக்கியத்துவமில்லாத விடயமாக இருப்பினும், சில தமிழ்த்தரப்புகள், குறிப்பாக தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை இத் தேர்தலை எதிர்கொள்கின்ற முறை இத்தேர்தலுக்கும் அவசியமில்லாத முக்கியத்துவத்தை வழங்கியிருக்கிறது.**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை கொண்டு வருவதற்கு முன்னதாகவே தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுவருவதும், அதற்கெதிராக இளைஞர்கள் போராடிய வரலாற்றினையும் மறந்து விட்டு ஜனாநாயகத்தை நிலைநாட்டப் போவதாக இவர்கள் கூறுவது வெளித்தரப்புகளைத் திருப்திப்படுத்தவே தவிர இதில் வேறெந்த முகாந்திரமுமில்லை. இதற்கிடையில் தமிழ் மக்கள் ஈழக் கோரிக்கையை கைவிட்டால் தான் நிறைவேற்று அதிகார அதிபர் முறையை மாற்றுவதாக மகிந்த இராஜபக்ச கிளிநொச்சியில் வைத்து கூறியிருக்கிறார். கூட்டமைப்பு தான் ஈழக் கோரிக்கையை கைவிட்டு விட்டதாக கற்பூரம் கொழுத்திச் சத்தியம் செய்தாலும் (தாம் ஒற்றையாட்சி முறையையே வேண்டுவதாக ஒரு சத்திய கடதாசியினை கூட்டமைப்பு நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது) இதுதான் அவருக்கு துருப்புச் சீட்டு. அதாவது சிங்களத் தேசியவாதத்தின் வாக்கு வங்கியிலேயே அவர் நம்பி இருக்கிறார். அவர்களும் நிறைவேற்று அதிகார முறையை நீக்குவது பற்றி அக்கறைப்படப் போவதில்லை.

**ஒரு பேப்பர்**
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ................ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran .............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................ 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS Supermarket.... 020 8297 9432
Best Food .............. 020 8692 9811

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food .............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar ............... 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan .................. 020 8514 1744
Angels .................. 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple 020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas .................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................. 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ...... 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C ......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret .......... 020 8571 4434

# JSN HEAT SUPPLIES LTD

MERLYN · KUDOS · hansgrohe · Hudson Reed · KUDOS · GROHE · GRUNDFOS

## WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS



**SINGLE LEVER BASIN MIXER**
LIMITED OFFER
**£12.90**
inc. VAT



**SINGLE LEVER BATH/SHOWER**
LIMITED OFFER
**£28.00**
inc. VAT



**NEPTUNE SINGLE LEVER SINK MIXER**
LIMITED OFFER
**£18.90**
inc. VAT





SPECIAL OFFER
Thermostatic
2 way outlet
LIMITED OFFER
← **£169**
inc. VAT
**£149** →
inc. VAT

**GENUINE 78% DISCOUNT ON ALL PANEL RADIATORS**
LIMITED OFFER





1200mm
6MM SAFETY GLASS
CLEAR SEALED LIFETIME GUARANTEE
SLIDING DOOR
**£180** inc. VAT

**COMPACT FURNITURE PACK**
550x300mm basin unit, 500 x 300mm WC unit, Siamp Tru-Flow concealed Cistern, Rak compact pan & standard seat.



**£240**
Tap included
inc. VAT





**LED LAMP BULB WITH FITTING FIRE-RATE DOWN LIGHT**
Starts from
**£14**
inc. VAT



**FAST FIT 8.5KW ELECTRIC SHOWER**
Starts from
**£65**
inc. VAT

## JSN HEAT SUPPLIES LTD


- PLUMBING
- ELECTRICALS
- BOILERS
- RADIATORS

*ALL AT DISCOUNT PRICES*

AQUALISA · Roca · Armitage Shanks · MAIN · GROHE · Hudson Reed · Vaillant · AQUALUX SHOWER SURROUNDS · mira SHOWERS · Glow-worm · ARISTON · Ideal Standard · KESTON · saneux MANUFACTURERS OF FINE BATHROOMS



**TEL: 020 8427 0553**



**WALL AND CEILING PANELS**
STARTING FROM
**£22 + VAT**



**KITCHEN AND BATHROOM FREE DESIGN AND QUOTATION. FITTING SERVICE AVAILALBLE.**

**ALL KINDS OF BOILER CONTROLS AND PARTS AVAILABLE AT SPECIAL PRICES**





• BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

162 PINNER ROAD, HARROW HA1 4JJ   TEL: 020 8427 0553

# வதைபடும் மக்களும், போலிகளின் ஊர்வலமும்




‘ஈழத்தைக் கைவிட்டால், சனாதிபதி முறைமையை ஒழிக்கத்தயார்’..... இப்படிச் சொல்பவர் யார்?.

அவர் வேறு யாருமல்ல. 18 வது திருத்தச் சட்டத்தினூடாக மூன்றாவது முறையாக சனாதிபதியாக வர விரும்புகின்ற மகிந்த ராஜபக்சவே இதனைக் கூறுகின்றார்.

இலங்கையில் ஈழத்தைப்பற்றி பேசமுடியாதவாறு, 83 இல் கொண்டுவரப்பட்ட 6 வது திருத்தச் சட்டம் விலங்கிட்டு விட்டது.

வடமாகாணசபையானது ஆண்டுவிழா காணும் இந்நேரத்தில், ஈழம் கேட்பதால்தான் நிறைவேற்று சனாதிபதி ஆட்சி முறை இருக்கிறதென்று மகிந்த ராஜபக்ச கூறுவது, நிழலோடு யுத்தம் புரிவது போலுள்ளது.

சனாதிபதி ஆட்சியை அகற்றுவேனென, சனாதிபதி தேர்தலில் குதித்து வென்ற எவருமே அந்த முறைமையை ஒழிக்கவில்லை. ஏனெனில் அந்த அதிகாரத்திற்கு அவ்வளவு மகாசக்தி.

இலங்கையிலுள்ள எந்தத் தமிழ் தேசியக் கட்சிகளும், ஒரு தேசிய இனத்தின் அதியுயர் பிறப்புரிமையான பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமையைக் கோரவில்லை.

அதுமட்டுமா... ஐ.நா.வில் தீர்மானம் கொண்டுவரும் அமெரிக்காவும், சுப்பிரமணிய சுவாமியைத் தூதனுப்பும் இந்தியாவும் இதனை ஏற்கவில்லை.

ஆனாலும் இலங்கையில், இரு இறைமையுள்ள தேசங்கள் (NATION) இணைந்த கூட்டாட்சியை, கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் முன்வைக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டமைப்பினரைப் பொறுத்தவரை, இந்தியாவிற்குச் சென்று திரும்பியவுடன் 13 வது திருத்தச் சட்டத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்கிறார்கள். அரைகுறையாக இருப்பதை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்கிறார்கள். சிலர் சமஸ்டியே தீர்வென்கிறார்கள். முழு நாட்டிற்குமான சிங்களத்தின் இறைமையை ஏற்றுக் கொண்ட சமஸ்டியா? என்று கேட்டால், அதனை பேச்சுவார்த்தை மேடையில் பார்க்கலாம் என்கிறார்கள்.

சென்ற வாரம் இலண்டனில் நடைபெற்ற சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய மாநாட்டில் பேசிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்கள், கூட்டமைப்பின் தீர்வு என்னவென்று தனக்கும் தெரியவில்லை என்றார். அத்தோடு 13 இல் ஒன்றுமில்லையென்று தெளிவாகச் சொன்னார்.

அதேவேளை, தாங்கள் பிரிவினையை கோரவில்லை என்று நீதிமன்றத்திற்கு சத்தியக் கடதாசியும் கொடுத்து விட்டனர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்.

யாழ். மே தினக் கூட்டமொன்றில், சிறி லங்காவின் தேசியக் கொடியையும் உயர்த்திக் காட்டி விட்டார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வினைத் தேடுகிறோமென, தமிழரசுக் கட்சியின் வெளியுறவுத்துறைப் பேச்சாளர் ஆ.யு. சுமந்திரன் அவர்கள் மூச்சிற்கு முன்னூறு தடவைகள் கூறி விட்டார்.

கூட்டமைப்பின் பெரும்பான்மையான மாகாணசபை உறுப்பினர்கள் சம்பந்தன் முன்னால் பதவிப்பிரமாணம் செய்த போது, நல்லிணக்க - அடிபணிந்த - அபிவிருத்தி அரசியலின்படி, மேன்மைதங்கிய மகிந்த ராஜபக்சவின் முன்னால் நின்று, குடும்ப சமேதராக சத்தியப் பிரமாணம் செய்தார் விக்கினேஸ்வரன் அவர்கள்.

இவ்வாறாக, மக்களின் அங்கீகாரம் பெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை, தமிழரசுக் கட்சி ( கூட்டமைப்பு) எப்போதோ கைவிட்டு விட்டது. அவர்களைப் பொறுத்தவரை அது கெட்ட கனவு.

அதேவேளை, 2009 இற்கு முன்னர் ‘சிங்களம் திருந்தாது’ என்று தத்துவ விளக்கமளித்தவர்கள், இப்போது சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறும் பக்குவத்தைப் பெற்றுள்ளனர். இந்தியாவும், அமெரிக்காவும் ஈழ மக்களின் இரட்சகர்கள் என்று கூறிப் புதிய அவதாரமெடுத்துள்ளார்கள்.

இவையெல்லாவற்றையும் மறந்த, அல்லது கருத்தில் கொள்ளாத சனாதிபதி, ஈழத்தை கைவிட்டால் சனாதிபதி நாற்காலியை உடைக்கின்றேன் எனக்கூறுவது முழங்காலிற்கும், மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போடுவது போலுள்ளதென சாமான்ய மக்களும் கேட்கின்றனர்.

இதில் வேடிக்கையான பகுதி என்னவென்றால், இந்தியா கொடுத்த காசிற்காக ‘யாழ்தேவியையும் ஆரம்பித்து வைக்க வேண்டும். அதேவேளை தமிழ் மக்களுக்கு தான் ஒன்றும் செய்யவில்லையென்று பெளத்த சிங்களப்பேரினவாதிகளுக்கும் கூற வேண்டும். இந்த அங்குரார்ப்பன வைபவங்களில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கலந்து கொள்ளாமல் தவிர்த்ததும், மகிந்தருக்கு நல்ல வாய்ப்பாக அமைந்து விட்டது.

ஆக மொத்தம் இந்தியாவிடமும், சிங்கள மக்களிடமும் நல்ல பெயரைச் சம்பாதித்து விட்டார் மகிந்த ராஜபக்ச.

யாழ் தேவியை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்ற சனாதிபதி, பாண் கி மூனிற்கு உறுதியளித்த 13 வது தீர்வுப் பொதியைக் கூட சுமந்து செல்லவில்லை.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

இந்திய 13 இலுள்ள காணியுரிமை தன்னிடமே உள்ளதென, கிளிநொச்சியில் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். விடுதலைப்புலிகளின் தமிழீழ வைப்பகத்தில், மக்களால் அடகு வைக்கப்பட்டிருந்த நகைகள் சிலவற்றை மீள அளிக்கும் வைப்பவத்தில் தமிழில் பேச முயற்சித்துள்ளார்.

கூட்டமைப்பினை வைக்கோல்- நாய் கதைக்கு ஒப்பிட்டு, ஒரு பியோனைக்கூட நியமிக்க முடியாமல் அல்லாடும் வடமாகாண சபையின் நிஜத் தோற்றத்தை மூடி மறைத்தார் சனாதிபதி.

மாகாணசபைக்கு , 13 வது திருத்தச் சட்டத்திலுள்ள குறைவான காவல்துறை அதிகாரத்தை யாவது தாருங்கள் எனக் கேட்டால், இராணுவத்தில் தமிழ் இளையோரைச் சேர்க்கின்றோம் என திசை திருப்பல் விளையாட்டில் ஈடுபடுகிறது இப்போதைய அரசு.

காவல்துறை உரிமை கோரலுக்கு, மகிந்தர் போட்ட ‘செக்மேட்’ தான் இராணுவ ஆட்சேர்ப்பு.

13 தான் சர்வ ரோக நிவாரணி என்று தாளம் போடும் சோனியா முதல் மோடிவரையான இந்தியத் தலைவர்களும், ஐ.நா.சபைத் தீர்மானத்தில் மாகாணசபைத் தேர்தலை நடாத்தும்படி நாண்டு கொண்டு நின்றவர்களும், குறைந்தபட்சம் இதுபற்றிக்கூட பேசுவதில்லை.

இவற்றுக்கு அப்பால், இன்னொரு சர்வதேசப் படமொன்றும் வடக்கில் ஓடிக்கொண்டிருக்கிறது.

அங்கு கூட்டமைப்பினரைச் சந்தித்த அமெரிக்கப்பிரதிநிதிகள், ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு நன்மை உண்டா? என்று கேட்டுள்ளார்.

அமெரிக்க வற்புறுத்திய மாகாணசபையால் எதுவித பிரயோசனமும் இல்லாமல் கடுப்பில் இருக்கும் கூட்டமைப்பினருக்கு, அமெரிக்க கருத்துக் கந்தசாமிகளின் ‘நோட்டம்’ எரிச்சலைக் கொடுத்திருக்கும்.

அதேவேளை 13+ இற்கும் 13- இற்குமிடையே பூச்சியம் இருப்பதை பலர் மறந்தாலும் ஆட்சி மாற்ற நாயகன் இரணில் மறக்கவில்லை. ஆதலால்தான், வெற்றி பெற்றால் பூச்சியமான 13 ஐ நிறைவேற்றுவேன் என்கிறார்.

தானே சனாதிபதி தேர்தல் களத்தில் குதிக்கப் போவதாக பிரகடனம் செய்துள்ள இரணிலை ஆதரிக்கும் மன நிலையில், கூட்டமைப்பினர் உள்ளார்களாவென்று ஒபாமா நிர்வாகம் அறிய ஆவல் கொண்டுள்ளது. அதுதான் அமெரிக்காவின் ஆட்சி மாற்ற ‘யாழ் தேவி’ பயணம்.

தமது புதிய பயணத்திற்காக, சரத் பொன்சேக்காவை ஏன் ஆதரித்தோமென்று இப்போது விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார்கள் கிழக்குக் கூட்டமைப்பினர். இனிவரும் தேர்தலில் யாரையோ ஆதரிக்கப் போவதற்கான முன்னுரையாக இது இருக்கும்போல் தோன்றுகிறது.

இந்த சனாதிபதி தேர்தல் மேடையில் இன்னொரு தமிழ் - சிங்கள புரட்சி நாயகன் ஏறப்போவதாக செய்திகள் வருகின்றன. அவருக்கு ஆதரவாக, புலம்பெயர் அமைப்புக்களை கருத்தியல் ரீதியாக ஒன்று திரட்டும் பணியும் ஆரம்பமாகிவிட்டது.

அவுஸ்திரேலியாவிலிருந்து இக்களத்தில் குதிக்கப்போகிறார் ஜே.வி.பியின் முன்னாள் மத்திய குழு உறுப்பினரும், முன்னிலை சோசலிசக் கட்சியைச் சேர்ந்தவருமான குமார் குணரெட்னம்.

வழமை போன்று பிரதான தேசிய இன முரண்பாட்டினை இரண்டாம்பட்சமாக்கி, தத்துவார்த்த ரீதியாக பேசுவதுபோல் பாவனை காட்டும் பெரும்பாலான இலங்கை இடதுசாரிகளின் வரிசையில் இவரையும் சேர்க்கலாம்.

தமிழ்த் தேசிய இனத்தின் பூரணமான சுய நிர்ணய உரிமையை தமக்கேற்றவாறு வளைத்தும் - நெளித்தும், அதேவேளை தென்னிலங்கை மக்கள் மத்தியிலுள்ள கட்டமைக்கப்பட்ட சிங்கள மேலாதிக்க பேரினவாத சிந்தனைப்போக்கினை மாற்ற இயலாமலும், ஒட்டுமொத்த புரட்சிக்கனவில் ஒரு தேசிய இனம் அழிக்கப் படுவதை இவர்கள் வேண்டுமென்றே அனுமதிக்கிறார்களா என்று கேட்கத்தோன்றுகிறது.

*‘17 இல் தோழர் லெனின் தலைமையில் நிறைவேற்றிய சோசலிசப் புரட்சியை,*

*2014 இல் சீனா அறுவடை செய்கிறது.’*

என்று கவிதை எழுத வேண்டும் போலிருக்கிறது.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper



# புதிதாய் உருப்பெற்று தெளிவாய் நடைபோடு



சுகி
*(ஒரு பேப்பருக்காக)*

காலம் சில வேளைகளில் அருமையான மருந்தாகுகின்றது. பலவிடயங்களை அறிந்து கொள்ளவும், அவ் அறிதலில் இருந்து பல சிக்கலான கேள்விகளுக்கு விடைகளை அனுபவத்தில் வாயிலாக தெரிந்து கொள்ளவும் வழிவகுக்கின்றது. இன்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு எமக்கிருந்த அனுபவத்தின் வாயிலான அரசியல் அறிவுக்கும், இப்ப உள்ள அனுபவத்தின் வாயிலான அரசியல் அறிவுக்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. நாம் நடந்து வந்த பாதையில் ஒரு காலத்தில் இந்தியாவை எம் தாய் நாடாக வரித்துக்கொண்டு அது இல்லாமல் எமது போராட்டத்தில் அணுஅளவு கூட நகர முடியாது என்றும் எமக்கொன்று என்றால் ஒட்டு மொத்த இந்தியாவும் எமக்கு ஆவண செய்யும் என்றும் கண்மூடித்தனமாக நம்பியிருந்த காலம் ஒன்று உள்ளது.

அந்த கண்மூடித்தமான நம்பிக்கையை பொய் என்பதை திலீபன் தனது மெய் உடம்பை வருந்தி எமக்கு உணர்ந்தினான். விடுதலை புலிகளுக்கு இந்தியா ஒன்றுமே செய்யப்போவதில்லை என்று நன்கு தெரிந்திருந்திருந்தும், மோட்டுத்தனமாக அவர்கள் எமக்கு ஏதும் செய்வார்கள் என்று நம்பியிருந்த எமக்கு அதை புரியவைக்க அவன் புறபட்டு, நாம் மறக்கமுடியாதபடி அதை நினைவில் நிறுத்திப்போனான்.

இந்தியா மட்டுமல்ல அந்த வரிசையில் பல நாடுகளையும், அவர்கள் எந்தெந்த வழியில் எப்படி செயற்படுவார்கள், எது அவர்களை எம்மில் அக்கறை கொள்ள வைக்கிறது. நாம் அழிவின் உச்சத்திற்கு போனாலும், எப்படி அதை பார்த்தும் பார்க்காத மாதிரி அவர்களால் இருக்க முடியும் என்பதையும் எமது அனுபவத்தின் வாயிலாக நிறைய விலை கொடுத்து அறிந்து கொண்டோம்.

இன்னும் அறிவதற்கு தற்கால நடக்கின்ற இஸ்லாமிய நாடுகளுக்கிடையான போரையும், ISIS 1999 இல் உருவாகுவதற்கு பின்தளமாக நின்ற நாடுகளையும், தற்போது மேற்குலக மீடியா சொல்லும் செய்திகளையும் எப்பிடி, என்ன விதமான எண்ணத்தை மக்கள் மத்தியில் உருப்பெற வைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். இது மட்டு மல்ல ஈராக்கின் மீது போர் தொடுக்க வேண்டாம் என்று நூறாயிரம் மக்கள் லண்டனின் வீதியில் இறக்கி போராடிய போது நீயூக்கிளிய ஆயுதங்கள் இருப்பதாக மீடியாவைக் கொண்டு செய்தி பரப்பி, போர் தொடுத்து பிறகு எல்லாம் முடிந்த பின் அங்கு அப்பிடி ஒன்றும் இல்லை என்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது தடை கொண்டு வந்ததும் ஒரு விதமாக சைக்கோலோஜிக்கல் வோர் தான். கொண்டு வந்த வருடம் நடந்த நினைவெழிச்சி நாளுக்கு மஞ்சள் புடவை கட்டியவர்களை விரல் விட்டு எண்ணுமளவிற்கு மக்களை அது பயப்படுத்தியது, கட்டுப்படுத்தியது. முள்ளிவாய்க்காலின் பின்பும் கூட தமிழர்களின் பலம் வெளிநாட்டில் வாழும் தமிழரிடம் கணிசமான அளவு தங்கியுள்ளது என்று, அந்த பலத்திலும் பல ஊடருப்புக்கள், பிரிவுகள் உண்டாகின. ஒரே நோக்கம், ஒரே இலக்கு உள்ளவர்களே ஒருவரை ஒருவர் விலத்தி போகும் அளவிற்கு நம்பிக்கையீனங்களும், தலைமைக்கான போட்டியும் ஆரம்பித்து காட்டிக் கொடுப்புகளும், கசப்புகளும் மலிந்தன.

வழக்கம் போல காலம், இப்போது அதையும் ஒரு தெளிவுக்கு கொண்டு வந்து விட்டது. சின்ன சின்ன விடயங்களில் நாம் எமது கவனத்தையும், நேரத்தையும் போக்கிக்கொண்டிருந்தால், பெரிதாக எல்லோரும் சேர்ந்து முன்னெடுக்க வேண்டிய விடயங்களுக்கு கவனம் குறைந்து விடும். பிரித்தாளும் தந்திரம் என்பது சில நாடுகளுக்கு கைவந்த கலை. எமது ஒற்றுமையைப்பற்றி எம்மைத்தவிர வேறு ஒருவரும் அக்கறை கொள்ள போவதில்லை. பிரிந்து ஆளுக்கொரு பக்கமாக போய்கொண்டிருந்த நாம் களைந்து ஓய்ந்து சேர்ந்து வேலை செய்யும் நேரம் பற்றி சிந்திக்கும் காலத்தில் நிற்கின்றோம்.

மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பது போல, இங்குள்ள பெற்றோர் 11+ , நல்ல பாடசாலை, நல்ல பல்கலைக்கழகம் என்று, தலையை உடைத்துக் கொண்டிருக்க பிள்ளைகளோ வளர்ந்து தமது நேரம் வர தமது அடியையும், வேரையும் தேடத்தொடங்குகிறார்கள், நாம் யார்? ஏன் இந்த நாட்டில் இருக்கின்றோம், எமது நாடு எது? என்று கேள்வி மேல், கேள்வி எழுப்புகிறார்கள், எமது மொழியை படிக்கவேண்டும், எமது கலாச்சாரம் பற்றி அறிய விரும்புகிறார்கள். அண்மையில் இங்குள்ள பல்கலைகழகம் ஒன்றில் ஒரு தவணை தமிழ் மொழியை கற்பிக்கப் போவதாக அறிவித்திருந்தார்கள், ஆனால் ஓரிரு நாளிலே அது பற்றி விசாரித்த போது அது நிறைந்து விட்டதாகவும் அடுத்த தவணைக்கு பெயரை பதிந்து வைக்கும் படியும் அறிவுறுத்தினார்கள்.

> **மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பது போல, இங்குள்ள பெற்றோர் 11+, நல்ல பாடசாலை, நல்ல பல்கலைக்கழகம் என்று, தலையை உடைத்துக் கொண்டிருக்க பிள்ளைகளோ வளர்ந்து தமது நேரம் வர தமது அடியையும், வேரையும் தேடத்தொடங்குகிறார்கள்**

நம்பிக்கைதான் எமது ஆணிவேர். முடியாது என்றால் முயன்று பார்க்கும் எண்ணம் கூட எழாமல் போய்விடும். இந்த நாட்டில் 20 வருடத்திற்கு முன்பு செய்யாத, எண்ணிப்பார்க்க முடியாத எத்தனையோ வகையாக வேலைகளிலும், தொழில்களிலும் இப்போ எமது தமிழர் மக்கள் கொடிகட்டி பறக்கிறார்கள். இது வெள்ளைகாரர் தான் செய்யமுடியும் என்று நினைத்திருந்தால் முயன்று பார்த்திருக்க முடியாது.

விழுந்து எழுந்தவன் மீண்டும் விழாமல் இருப்பது எப்படி என்பதை எழும் போது கற்றுக்கொண்டிருப்பான், காட்டிப்கொடுப்புக்களால் அழிந்தவன், இனி கூட்டுச்சேரும் போது அவதானமாக இருப்பான், அடுத்த மாதம் எமது புனிதர்களுக்கான மாதம்.

நாம் புதிதாய் உருப் பெறுவோம். தெளிவாய் நடைபோடுவோம்.






# பி.பி.சி தமிழோசை: லண்டனிலிருந்து டெல்லிக்கு




## தே.இரவிசங்கர்

பிபிசியின் உலகசேவையின் ஒருபகுதியான, தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்திற்கான பன்மொழி ஒலிபரப்புகளில் ஒன்றாக லண்டனிலிருந்து இயங்கிவரும் தமிழோசை அடுத்த ஆண்டளவில் இந்தியத் தலைநகர் டெல்லியிலிருந்து ஒலிபரப்பாகவிருக்கிறது. பிபிசியின் செலவுக்குறைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்திய மொழிகளில் ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகள் டெல்லிக்கு மாறப்படவுள்ளன எனத் தெரியவருகிறது. இந்நடவடிக்கை மூலம், லண்டனில் பணியாற்றும் தமிழோசையின் பணியாளர்கள் அனைவரும் பதவியிழப்பர். இருப்பினும் இவர்கள் இந்தியாவிலிருந்துபணிபுரியவிரும்பினால், வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு மீள விண்ணப்பிக்க முடியும் எனத் தெரியவருகிறது. ஆனால் இந்தியக் குடியுரிமை இல்லாதவர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியுமா என்பது தெரியவில்லை.

1941ம் ஆண்டு மே 3ம் திகதி பிபிசி தமிழோசை ஆரம்பிக்கப்பட்டது. தொடக்கத்தில் வாரத்தில் இரண்டு நாட்கள் பதினைந்து நிமிட ஒலிபரப்பாகிவந்த தமிழோசை பின்னர் வாரத்தில் ஐந்து நாட்கள் நாளொன்றுக்கு அரை மணி நேரம் ஒலிபரப்பானது. தற்போது வாரத்தில் எல்லா நாட்களும் கிறெனெச் நேரப்படி மாலை 3.45 மணியிலிருந்து 4.15 மணி வரை அரைமணி நேரம் ஒலிபரப்பாகிறது. இந்தியா, இலங்கை, மற்றும் கனடா போன்ற புலம்பெயர்நாடுகளில் தமிழ் மக்கள் மத்தியில் இவ்வானொலி பிரபலமாக இருப்பினும் பிரித்தானியாவில் உள்ள தமிழர்கள் இவ்வானொலியை செவிமடுப்பது அரிதாகவே உள்ளது.

எண்பதுகளில் ஈழத்தில் போர் உக்கிரமடைந்த காலத்தில் பிபிசி தமிழோசையே ஒரே ஒரு நம்பகத்தன்மை கொண்ட வானொலியாக இருந்து வந்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை 'லங்கா புவத்' என்ற அரச செய்திச் சேவையின் பொய்ச் செய்திகளை ஒலிபரப்பியதும் இதற்கு ஒரு காரணம். போரின் நெருக்கடிகளிலும், மின்சாரமின்மை, மின்கலங்களுக்கு (பற்றரி) தடை என்பனவற்றுக்கு மத்தியிலும் சைக்கிள் டைனமோக்கள் மூலம் வானொலியை இயக்கி பி.பி.சி வானொலியை ஈழத்தமிழ்மக்கள் கேட்டுவந்தனர். தமிழோசையின் அப்போதைய பொறுப்பாளர் சங்கர் அண்ணா என அன்பாக அழைக்கப்படும் சங்கரமூர்த்தி, ஆனந்தி அக்கா என அன்பாக அழைக்கப்படும் மூத்த ஒலிபரப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம் ஆகிய இருவரும் அக்காலத்தில் மக்களின் பேரபிமானம் பெற்ற ஒலிபரப்பாளர்களாக இருந்தார்கள். இவர்களது குரலைக் கேட்க இரவு 9மணிக்கு வானொலியை சிற்றலை வரிசைக்கு திருப்புவது ஈழத் தமிழர்களது வழக்கமாகவிருந்தது.

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில், ஐபிசி போன்ற புலம்பெயர் வானொலிகள், தமிழ்நெற் இணையதளம் ஆகியவை செயற்பட ஆரம்பித்ததும் தாயகச் செய்திகளுக்காக பிபிசி தமிழோசையின் அரை மணி நேரச் செய்திகளுக்காக காத்திருப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது. குறிப்பாக பிபிசியில் பணிபுரிந்த மூத்த ஒலிபரப்பாளர் ஏ.சி.தாசீசியஸ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அனைத்துலக ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் - தமிழ் (ஐ.பி.சி), இருபத்தினான்கு மணி நேர வானொலியாக பணியாற்றியது. தாயகச் செய்தியாளர்களின் துணிகரமான முயற்சிகளால் செய்திகள் உடனுக்குடன் வெளியிடப்பட்டமையால், செய்திகளுக்கு பிபிசி தமிழோசைக்காக காத்திருக்க வேண்டிய நிலை மாறியது.

அண்மைய வருடங்களில் பிபிசி தமிழ்ச் சேவை, ஒரு பிரதான செய்தி ஊடகம் என்ற நிலையிலிருந்து ஒரு மாற்று ஊடகம் என்ற நிலைக்கு வந்து விட்டதோ என்று எண்ணத் தோன்றுமளவிற்கு அதன் நடவக்கைகள் அமைந்திருக்கின்றன. மையத் தமிழ் ஊடகங்களில், குறிப்பாக புலம்பெயர்நாடுகளில் இயங்கும் ஊடகங்களில் முதன்மை பெறாத தரப்புகளுக்கு பிபிசி தமிழ்ச் சேவை முக்கியத்துவம் வழங்கி வருகிறது. அதிலும் சிறிலங்கா ஆயுதப்படைகளுடன் துணைக்குழுக்களாக இயங்கியவர்களின் பிரதிநிதிகளுக்கும், வெளிப்படையான புலி எதிர்ப்பாளர்களுக்கும் தமிழோசையில் கருத்துக்கூறும் வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இது தமிழோசையின் நடுநிலைத்தன்மையை வெளிக்காட்டுகிறது என்ற கருத்து மக்கள் மத்தியில் நிலவினாலும், முக்கிய நிகழ்வுகளை அது புறக்கணித்து வருவது தமிழோசையின் மீது அவர்களுக்கு விசனத்தை ஏற்படுத்துகிறது. புலம்பெயர் நாடுகளில் நடைபெற்ற பல முக்கிய தமிழர் நிகழ்வுகளுக்கு தமிழோசையில் உரிய இடம் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. அதேசமயம் புலம்பெயர் நாடுகளில் உள்ள புலி எதிர்ப்பாளர்களால் நடாத்தப்படும் 'இலக்கியச் சந்திப்பு' போன்ற சிறு நிகழ்ச்சிகளுக்கு இன்றும் தமிழோசை மிகுந்த முக்கியத்துவம் வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பிபிசி தமிழோசை குறிப்பிட்டளவு முக்கியத்துவம் பெறவில்லை, பொதுவில் அதிகம் அறியப்படாத ஒரு ஒலிபரப்பாகவே இருந்து வருகிறது. அதுவும் தனியார் தொலைக்காட்சி வலையமைப்புகள், பண்பலை வானொலிகள் இருபத்தினான்கு மணிநேரமும் இயங்கிக்கொண்டிருக்க, தமிழோசையின் அரைமணி நேர ஒலிபரப்பிற்காக காத்திருக்க வேண்டிய அவசியம் தமிழ்நாட்டு மக்களுக்கு இல்லை. ஆனால் பிபிசி தமிழோசையை கேட்பவர்களின் தொகை இந்தியாவில் அதிரித்து வருவதால் பிபிசி இந்திச் சேவையைப்போன்று தமிழ்ச் சேவையும் டெல்லிக்கு மாற்றப்படுவதாக பிபிசி உலக சேவையின் பேச்சாளர் ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். இருப்பினும் இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களுக்கும் தமது சேவையை தொடரவிருப்பதாகவும் அந்தப் பேச்சாளர் கூறியிருக்கிறார்.

பிபிசி தமிழோசை டெல்லிக்கு கொண்டு செல்லப்படுவதற்கு எதிராக மக்களைத் திரட்டும் முயற்சிகளில் பிபிசி தமிழ்ச் சேவையில் பணிபுரிவர்கள் சிலர் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. டெல்லிக்கு கொண்டு செல்லப்படுவதன் மூலம் தமிழோசையின் நடுநிலைத்தன்மை பாதிக்கப்பட்டு விடும் என்பதே இவர்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கும் காரணமாகும். தமிழோசையில் அமையா அமைய முறையில் பணிபுரியும் விக்கினராஜா என்பவர் இந்த முயற்சிகளுக்கு ஆதரவாக unsolicited வகையிலான மின்னஞ்சல்களை அனுப்பிவருகிறார். மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க Online petition ஒன்று செப்ரெம்பர் 26ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கைக்கு ஆதரவாக இதுவரை 371 பேர் மாத்திரமே பதிவு செய்துள்ளனர். இப்பட்டியலில் பிபிசி தமிழோசையின் மிக நீண்டகாலமாகவே அமையா அமைய அடிப்படையில் பணியாற்றும் மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன், மற்றும் திருநாவுக்கரசு விக்கினராஜா அவரது மனைவி கலாதேவி விக்கினராஜா ஆகியோரும் அடங்குகின்றனர். நிரந்தப் பணியார்களாகப் பணியாற்றுபவர்களின் விபரங்கள் இப்பட்டியலில் காணப்படாத போதிலும் அவர்களும் இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவினைத் தேடும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். இருப்பினும் இந்த முயற்சிக்கு பெருத்த ஆதரவு மக்கள் மத்தியில் காணப்படவில்லை. தமிழ் தேசிய அமைப்புகளும் இவ்விடயத்தில் பெரிதாக அக்கறை காட்டவில்லை. இதனால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்படும் அமிர்தலிங்கம் பகீரதன், மற்றும் சில தமிழ் உள்ளுராட்சி உறுப்பினர்களின் உதவியை இவர்கள் நாடியுள்ளனர்.

தமிழோசை டெல்லியிலிக்கு இடம்மாற்றப்படுவது பற்றி ***ஒரு பேப்பர்*** க்கு கருத்து வெளியிட்ட நீண்டகாலமாக இயங்கி வரும் முன்னணி தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர் ஒருவர் "பல வருடங்களாகவே பிபிசி தமிழோசையானது இந்திய ஆட்சிமையத்தின் நலன்னை முன்னிறுத்திச் செயற்பட்டு வருகிறது. ஆகவே அது டெல்லிக்கு செல்வதனால் புதிதாக என்ன மாற்றம் ஏற்றுபட்டு விடப்போகிறது" எனக் கேள்வி எழுப்பினார்.

**எது எப்படியோ தகவல் தொழில்நுட்பம் அபரிதமாக வளர்ச்சி கண்டுள்ள இன்றைய நிலையில், ஒரு ஊடகம் அண்மையில் இருந்தால் மட்டுமே அதனை அதன் தலைமைப்பணியகத்தினால் நெறிப்படுத்த முடியும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை.**

தற்போது நிரந்தரப்பணியாளர்களாக இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பத்தாண்டுகளுக்கு மேலாக குடும்பத்துடன் லண்டனில் வாழ்வதனால் அவர்கள் மீளவும் இந்தியாவுக்கு திரும்பி, இந்திய வேதனத்தில் பணிபுரிவதை விரும்பவில்லை. இதனால் அவர்கள் டெல்லிக்கு இடம் மாற்றப்படுவதை எதிர்த்து வருவதாக பிபிசி தமிழோசை பணியாளர்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணிவரும் பெயர் குறிப்பிட விரும்பாத இன்னொரு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் ***ஒரு பேப்பர்*** க்கு தெரிவித்தார். தமது தாய் நாட்டுக்கு திரும்பிச் சென்று அங்கிருந்து பணிபுரிவதற்கு கிடைத்துள்ள வாய்ப்பையிட்டு மகிழ்வடைவதனை விடுத்து அவர்கள் இவ்வாறு எதிர்க்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்தார். ஆனால் இப்பணியாளரகள் மீள நாடு திரும்ப விரும்பினால் கூட லண்டன் வாழ்க்கைக்கு பழகிவிட்ட இவர்களது பிள்ளைகள் நாடு திரும்ப விரும்பவில்லை என்ற விடயத்தையும் அவ் அரசியல் செயற்பாட்டாளர் தெரிவித்தார்.

எது எப்படியோ தகவல் தொழில்நுட்பம் அபரிதமாக வளர்ச்சி கண்டுள்ள இன்றைய நிலையில், ஒரு ஊடகம் அண்மையில் இருந்தால் மட்டுமே அதனை அதன் தலைமைப்பணியகத்தினால் நெறிப்படுத்த முடியும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. அதுவும் இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு எனப் பரப்புரை செய்து வந்த பிபிசி தமிழோசையினர், தாம் இந்தியாவிற்கு சென்றால் தம்மால் நடுநிலையாகச் செயற்பட முடியாது போய்விடும் எனக் குறிப்பிடுவது நேர்மையான வாதமாகப் படவில்லை.

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency
079 4764 1876
079 1225 3418

# சீனாவிலும் இந்தியாவிலும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள்




**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

இந்தியாவும் சீனாவும் மக்கள் தொகை அடிப்படையில் இரு பெரும் நாடுகள். சீனாவில் பொதுவுடமை ஆட்சி என்னும் பெயரில் மோசமான அரச முதலாளித்துவ ஆட்சி நடக்கின்றது. இந்தியாவில் மக்களாட்சி என்ற பெயரில் ஒரு ஆட்சி முறைமை இருக்கின்றது. மக்களாட்சி முறைமை சரியாக நடப்பதற்கு தேர்தலில் போட்டியியும் கட்சிகளுக்குள் ஒரு மக்களாட்சி முறைமைப்படியான முகாமையும் தலைமைத் தேர்வும் இருக்க வேண்டும். இந்தியாவின் பல கட்சிகளுக்குள் அப்படி ஏதும் இல்லை. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் பொதுவான ஒன்று இருக்கின்றது என்றால் அது ஊழல்தான். சீனாவின் தற்போதைய அதிபர் ஜி ஜின்பிங்கும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும் தமது நாடுகளில் ஊழலை ஒழித்துக் கட்டுவோம் என வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதாக வெளியில் காட்டிக் கொள்கின்றார்கள்.

### ◆ ஊழலற்ற நாடுகளின் பட்டியல்

ஊழலற்ற நாடுகளின் பட்டியலில் டென்மார்க்கும் நியூசிலாந்தும் முதலாம் இடத்திலும், பின்லாந்தும் சுவிற்சிலாந்தும் மூன்றாம் இடத்திலும் நோர்வேயும் சிங்கப்பூரும் ஐந்தாம் இடத்திலும் இருக்கின்றன. சீனா 80வது இடம், இலங்கை 91-ம் இடம். இந்தியா 91வது இடம். பாகிஸ்தானும் இரசியாவும் 127-ம் இடம். ஜேர்மனி 12-ம் இடம் ஐக்கிய இராச்சியம் 14-ம் இடம் ஐக்கிய அமெரிக்கா 19-ம் இடம். ஜப்பான் 18-ம் இடம், பிரான்ஸ் 22-ம் இடம். 175 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியிலின் கடைசி இடத்தில் ஆப்கானிஸ்த்தான், வட கொரியா, சோமாலியா ஆகிய நாடுகள் இருக்கின்றன.

முன்னாள் சீனத் தலைமை அமைச்சர் (2003-2013) வென் ஜியாபோ அவர்கள் அவரது தாயார், மனைவி, சகோதரர், மைத்துனர்கள் மகன், மருமகள், மேலும் பல உறவினர்கள் நண்பர்கள் என்ற ஒரு பெரும் குழாமைக் கொண்ட ஒரு பெரும் வலை அமைப்பின் பெயரில் பெரும் சொத்துக்களை குவித்தார். அவர்களின் சொத்துக்களின் பெறுமதி பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் என நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை அம்பலப்படுத்தியது. இதைத் தொடர்ந்து நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் கணனிகள் மீது சீனாவில் இருந்து கள்ளத்தனமாக இணைய வெளியில் ஊடுருவித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன என நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை குற்றம் சாட்டியது. சுவிற்சலாந்து நாட்டின் முன்னணிச் சஞ்சிகையான Schweizer Illustrierte இன் 1991-ம் ஆண்டு நவமபர் மாதம் 11-ம் திகதிக்கான பதிப்பில் ராஜீவ் காந்தியின் பெயரில் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்கள் ( இந்தியா ரூபா பெறுமதியில் இரண்டு இலட்சம் கோடிக்கு மேல்) சுவிஸ் வங்கியில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இவை இரு நாடுகளிலும் உயர் மட்டத்தில் உள்ள முறைகேடுகளை எடுத்துக் காட்டுகின்றது.

### ◆ இந்தியாவில் மாமூலாகிவிட்ட மாமூல்

இந்தியாவில் எதுவும் நடக்க வேண்டுமென்றால் கையூட்டு(மாமூல்) கொடுத்தால்தான் நடக்கும். இது இந்திய வாழ்க்கை முறையின் ஒரு தவிர்க்க முடியாத அம்சமாகிவிட்டது. 2010-ம் ஆண்டு 2G அலைக்கற்றை ஊழல், பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டி ஆகியன உலகின் மிகப்பெரிய ஊழல்களாக அறிவிக்கப்பட்டன. 2011 இல்

Uttar Pradesh NRHM scam - INR10,000 crore (US$1.81 billion)

ISRO's S-band scam - INR200,000 crore (US$36.2 billion)

NTRO scam - INR800 crore (US$144.8 million)

ஆகியவை பெரும் ஊழல்கள். இது தவிரப் பல ஊழல்கள் 2010இல் நடந்தன.

2012இல் நடந்த ஊழல்கள்:

- Andhra Pradesh land scam - INR100, 000 crore (US$18.1 billion)
- Forex derivates scam - INR32, 000 crore (US$5.79 billion)
- Service Tax and Central Excise Duty fraud - INR19,159 crore (US$3.47 billion)
- Gujarat PSU financial irregularities - INR17,000 crore (US$3.08 billion)
- Maharashtra stamp duty scam - INR640 crore (US$115.84 million)
- MHADA repair scam - INR100 crore (US$18.1 million)
- Highway scam - INR70 crore (US$12.67 million)
- Flying Club fraud - INR190 crore (US$34.39 million)
- Jammu and Kashmir Cricket Association scam INR50 crore (US$9.05 million)
- Punjab paddy scam - INR18 crore (US$3.26 million)
- Uttar Pradesh stamp duty scam - INR1200 crore (US$217.2 million)
- Uttar Pradesh horticulture scam INR70 crore (US$12.67 million)
- Uttar Pradesh palm tree plantation scam - INR55 crore (US$9.96 million)
- Uttar Pradesh seed scam - INR50 crore (US$9.05 million)
- Patiala land scam - INR250 crore (US$45.25 million)
- Tax refund scam - INR3 crore (US$543,000) million

### ◆ நிலக்கரி ஊழல் - காங்கிரசு ஆட்சி இந்தியாவின் கரிகாலம்

2005-ம் ஆண்டு முதல் 2006-ம் ஆண்டு வரை நிலக்கரி சுரங்க உரிமைகளை ஏலம் விடாமல் தனியார் நிறுவனங்களுக்கு இந்திய அரசு வழங்கியதில் ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரம் கோடி ரூபாய் (Rs1,860,000,000,000) இழப்பு ஏற்பட்டிருப்பதாக அரச கணக்காய்வாளரும் கட்டுப்பாடாளாரும் (Controller & Auditor General) சமர்ப்பித்த அறிக்கை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த ஊழலில் அப்போதைய தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதாக இந்திய எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. 2005இலும் 2006இலும் இந்திய நிலகரித் துறை மன்மோகன் சிங்கின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

### ◆ Coalgate ஊழல் இந்தியாவின் கரிகாலம்

இந்தியப் பாராளமன்றம் தொடர்ந்து மூன்று தடவைகள் முடக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆளும் காங்கிரசு கட்சியின் தலைவி சோனியா காந்தி தனது கட்சிப் பாராளமன்ற உறுப்பினர்களுக்கு தற்காப்பை விடத் தாக்குதல் மேலானது என்று அறிவுறுத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊழலை ஒழிக்கிறேன் பேர்வழி என்று வந்த அன்ன ஹசாரே கும்பல் காணமல் போய் விட்டது. அவனவன் அரபு வசந்தம் அது இது என்று ஊழல் ஆட்சியாளர்களை விரட்டும்போது இந்திய இளைஞர்கள் சினிமா மற்றும் கிரிக்கெட் மோகத்தில் ஆழந்து கொண்டு யார் காலில் விழுந்து வேலை தேடுவது என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### ◆ நிறுத்த முடியாத ஊழல் சுற்று

ஒருவர் தேர்தலில் வெற்றி பெறவேண்டுமானால் நிறையப் பணம் செலவு பண்ண வேண்டும் என்பது இந்தியத் தேர்தலில் வெளிப்படையான ஒன்று. அப்படித் தேர்தலில் போட்டியிட்டு வென்றவர் தான் செலவழித்த பணத்தை மீளப் பெறவும் அடுத்த தேர்தலில் வெற்றி பெற செலவழிக்க நிறையப் பணத்தை சேகரிக்கவும் முறைகேடான வழியில் பணம் சேர்க்க வேண்டும். இந்த மாதிரியான ஒரு சுற்றில் இந்திய அரசியல் வாதிகள் அகப்பட்டுள்ளனர்.

### ◆ நரேந்திர மோடியில் ஊழல் பலியாடு

தனது ஆட்சியில் ஊழல் செய்பவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள் என்பதற்கு முதலாவது புள்ளிவிபரமாக நரோந்திர மோடிக்கு கிடைத்திருப்பவர் செல்வி ஜெயலலிதா. இவர் காஞ்சி மடாதிபதியை கைது செய்யாமல் விட்டிருந்தால், சசிகலா கும்பலை விட்டு சோ ராமசாமி, சுப்பிரமணிய சுவாமி போன்றோருடன் கைகோத்திருந்தால், 2014-ம் ஆண்டு நடந்த இந்தியப் பாராளமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைத்திருந்தால் இவர் தண்டிக்கப்பட்டிருப்பாரா ? ஊழலுக்காக பாரதிய ஜனதாக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட , முன்னாள் கர்நாடக முதல்வர் எடியூரப்பா தேர்தல் வெற்றிக்காக மீண்டும் மோடியின் கட்சியில் இணைக்கப்பட்டார்.

### ◆ சீன மெகா ஊழல்

2013-ம் ஆண்டு சீன அரசு சீனாவின் அரை நூற்றாண்டுக்கு மேலான பொதுவுடமை ஆட்சியில் மோசமான ஒரு ஊழலுக்கு எதிரான வழக்கைத் தாக்கல் செய்தது. இதில் 9.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஊழல் விசாரணை செய்யப்பட்டது. பலர் தண்டிக்கப்பட்டனர். சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையால் பாதிப்படைந்த பலர் 2014-ம் ஆண்டு ஜுலை ஓகஸ்ட் மாதங்களில் தற்கொலை செய்து கொண்டனர். சீனப் பொதுவுடமை ஆட்சியினர் 1970களின் பிற்பகுதியில் இருந்து சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி தமது நாட்டை நகர்த்தத் தொடங்கியதில் இருந்து சீனாவில் ஊழல் பெருகத் தொடங்கியது. சீனப் பொதுவுடமைக் கட்சியின் மேல் மட்டத்தில் இருப்பவர்களின் அனுமதியுடன் வர்த்தக முயற்சிகள் ஆரம்பிக்க முடியும் என்ற நிலையில் அவர்களின் மகன்கள் புது வர்த்தக முயற்சிகள் ஆரம்பிக்க அனுமதிகள் வழங்கப்பட்டன. இதனால் கட்சியின் உயர் மட்டத்தினரின் வாரிசுகள் பெரும் செல்வந்தர்களாகினர். இவர்கள் ஆட்சியாளர்களின் குஞ்சுகள் என அழைக்கப்பட்டனர். இதுவே சீனாவின் ஊழலின் ஆரம்பமாக அமைந்தது.

### ◆ ஊழல் ஒழிப்பும் பழிவாங்கல்களும்

2012-ம் ஆண்டு டிசம்பரில் இருந்து சீனாவில் கட்சியிலும் ஆட்சியிலும் உயர் மட்டத்தில் இருந்தவர்கள் 500இற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இவர்களைக் கைது செய்ததால் ஏற்பட்ட வெற்றிடங்கள் அதிபர் ஜி ஜின்பிங்கிற்கு வேண்டப்பட்டவர்களால் நிரப்பப்பட்டனர்.

சீனாவிலும் இந்தியாவைப் போலவே ஊழல் ஒழிப்பு என்பது ஆட்சியில் இருப்பவர்களிற்கு எதிரானவர்கள் மீதான ஒரு பழிவாங்கல் நடவடிக்கையாகவே பார்க்கப்படுகின்றது

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்
BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN



BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES
Chartered Accountants and Business Recovery Professionals
▶ Accountancy / Audit
▶ Tax Solutions
▶ Company Formation
▶ Confidential Tax Consultancy
▶ Investigations / Tax Mitigation
▶ Bankruptcy / IVA
▶ Liquidations
▶ Business Startup & Consultancy
▶ Solicitors Rules Audit
▶ Payroll / VAT / Book keeping

# Implications of ‘War on Terror’ on the media in Si Lanka




**By Bharati Rajanayagam**

*Editor, Sunday Thinakkural*

*(A paper submitted by Bharathi Rajanayagam for the International Association of Tamil Journalists' Annual conference on 11th October in West London.)*

As the conference title suggests, there is a close nexus between the war on terror declaration and the function of the media. Media coverage of human rights issues in conflict situations within the context of war on terror is an important subject for discussion and research.

It is evident that in the post September 11 era, the world is facing a new type of war, almost entirely different form previous wars in modern history. As scholars would say the basic conflict structure is not a confrontation between nation states, but rather one between an international coalition of states and a loosely constructed and less nation state-based antagonist.

The U.S president Bush expressed soon after the September 11 attack that “I will seize the opportunity to achieve big goals. There is nothing bigger than achieve peace”, and declared ‘war on terror’.

Most of the governments gave their unconditional support to Bush. Bush said, “who is not with me is against me” and the cluster bombs in Afghanistan left no doubt that he meant what he said. Many governments saw the ‘war on terror’’ a great opportunity and crush separatist movements in their countries using the war on terror discourse and in the name of ‘global war on terror’. President Bush saw ‘terrorism’ as evil, which can be treated by killing terrorists everywhere in the world.

It was not a surprise that the Sri Lankan government which was fighting against LTTE, found the ‘war on terror’ declaration as a golden opportunity to win the war. The U.S embassy in Sri Lanka also issued a statement in October 2001 that, “Sri Lanka the little Island would not be left out in U.S’s fight against terrorism. Recent attacks in New York and the Pentagon in Washington had provoked worldwide revolution against terrorism and strengthened the resolve of the international community towards fighting the global plague. Our commitment to assist to Sri Lanka in its fight against terrorism is undiminished and will continue. We also reiterate our support for the position of the Sri Lankan government against the establishment of an independent Tamil Eelam.”

This U.S’s statement came little after the Sri Lankan President Chandrika Kumaratunga called for an extra support to fight terrorism and criticized the west for its double standards in tackling the problem.

Bush said that, he was going to war in order to bring peace. He outlined why it was necessary for the U.S government to launch a war against the state and people of Iraq. “We seek peace. We strive for peace and sometimes peace must be defended” this is how Bush remarked.

It was in the premise of the ‘war on terror’ that the president Chandrika Kumarathunga's so called “War for Peace’ strategy and current President Mahinda Rajapaksha’s so called ‘Humanitarian War’ were pursued.

The consequences of these so called wars within the context of ‘global war on terror’ severely impacted democratic process of the country in all dimensions. The media was and continues to be one of the most affected sectors as a result of these wars. It affected all aspects of the dynamics of news production of human rights reporting.

There are a number of factors that hamper human rights reporting in Sri Lanka. Among these factors, media suppression is the main constraint. Lack of access to information, ethnic division, interest of the ownership and a lack of professionalism also have been identified as common constraints in Sri Lanka.

Global war on terror discourse and its associated policies have been enabling the consecutive Sri Lankan governments in Sri Lanka to comfortably curb media’s freedom and punish journalists in the name of ‘war for peace’ and ‘humanitarian war’.

Majority of journalists who cover the conflict issues had to face a number of constraints. There have been numerous instances of journalists receiving death threats, or being harassed, arrested, attacked, abducted or killed. Many journalists have been threatened at gun point just for the reason that they reported the truth.

Since 2005, 34 journalists have been murdered, not a single murderer has been sent to prison, and up to 25 journalists a year are fleeing the country. Many media institutions have been bombed and burnt. Generally the journalists have been the target; however threats, murders and abductions are not confined only to Tamil journalists. Not a single perpetrator has been brought to justice. Sri Lanka is ranked 162nd out of 179 countries in its 2013 press freedom index.

Although, there are provisions in the constitution to protect the freedom of expression in Sri Lanka, there are also legal regulations and statues which limit the media freedom. There are a number of instances in the legislation that encourage secrecy and weaken the liberal flow of information.

The result is that many have stopped reporting and some have fled the country for their own security. They have to report on news according to the instructions of the instructions of the editors and owners of newspapers, such as avoiding news that antagonises the paramilitary groups, army and certain politicians, which causes a negative effect on their professional dignity, practice and increases insecurity. This has restricted the media to pay its role to promote democratisation and consequently created a serious democratic deficit negatively impacting on the promotion and protection of human rights.

On the other hand, this situation has created a situation, where interest among Tamil students to become journalist and study journalism has drastically declined in Sri Lanka in the post war period, and consequently the Tamil journalism in Sri Lanka is in a crisis. This has created an acute shortage for talented journalists and affected the standards of journalism.

Currently journalists are following three types of censorship: firstly, when journalists themselves decide whether the news item which they are reporting will threaten them, and where they do not report on such an item if there is a threat to them; secondly, when censorship is imposed by their institution; and, thirdly, when the censorship is imposed by the government.

For example, since the end of armed war in May 2009, the Tamil Newspapers in Sri Lanka have almost stopped reporting the events and happenings in the Tamil diaspora as a result of self-censorship caused by threats, intimidation and legal actions Prevention of Terrorism Act. As you may be aware, the Sri Lankan government recently banned a number of Tamil Diaspora Organizations linking them with terrorism under U .N. Security Council Resolution 1373 of 2001.

Freedom of expression is one of the basic pillars of a democratic society. The professional journalism in a free media society is essential to inform both decision-makers and the people about existing realities concerning the conflict issues. Furthermore, the professional journalism can be instrumental in conflict resolution, where the information it disseminates is reliable, protecting and promoting human rights and representing diverse views. It is a kind of media that reduces conflict and fosters human security. Currently, there is a dire need in Sri Lanka to establish a media platform that provides free flow of information exposing human rights violations, giving the citizens the opportunity to make informed choices about their future while providing a watchdog function.

> Global war on terror discourse and its associated policies have been enabling the consecutive Sri Lankan governments in Sri Lanka to comfortably curb media’s freedom and punish journalists in the name of ‘war for peace’ and ‘humanitarian war’.

This is where the role of internet media becomes important. However, the growth and professionalism of the internet media are not satisfactory. Of course, there are a lot of Tamil Diaspora media websites coming out. But they lack the standards of journalism and professionalism. They often report rumour as facts and often fall in the trap of propaganda, and create panic, misunderstanding and suspicions among the Tamil people. Most of these websites are operated by a single person without any journalistic experience and skills.

I would like to end this speech by appealing to the Tamil diaspora to extend their hands to the Tamil Media Alliance to strengthen and develop the Tamil media in Sri Lanka by means of trainings, technical support, best practices etc. Media is the cornerstone of success of the Tamil people in Sri Lanka and their positive socio-economic and political change.

**Roselyne cottage** 3 Croydon Lane, Banstead SM7 3AS

**Wedding Marquee Venue** In 7 acre Land, up to 490 Guests

**for Reservation 07711361144 Vasan**







More than 250 cars can be parked Round tables, Banquting chatrs and covers also avilable Kitchen facilities are avialable

# Grotesqueries

By Tisaranee Gunasekara

The signs proliferate. After the announcement of an early budget with a pared down debate came the reduction in gas prices. The President himself proclaimed the reduction, as if it was his ‘personal’ gift to the consumers.

Even a short term price reduction, especially in such essentials as electricity, fuel and gas, is nothing to scoff at. But the sheer blatancy of the tactic demonstrates, yet again, how the Rajapaksas regard the electorate – an unintelligent and immature mass which can be manipulated into any collective idiocy. In Rajapaksa eyes Lankan society, from the top to the bottom, possesses almost no safeguards against lies and deception. So there is no need to bother with subtle and clever; the gross will do, with a rudimentary packaging, such as patriotism or international conspiracy.

Take, for instance, the latest twist in the Sajin Vaas Gunawardena-Chris Nonis saga.

The supposed investigation into the reported assault is not yet over (has it even begun?) but Minister Keheliya Rambukwella has already given the verdict. No one was assaulted; only a heated argument happened. Ergo, Dr. Nonis is lying. In any case, Dr. Nonis should not have been at that party. He was not invited; he gate-crashed: “It was a private party and Dr. Nonis had not bee invited…..” In this official version, if anyone is at fault, it was Dr. Nonis; if he did not go where he was not invited, if he did not get inebriated, nothing would have happened. He would still be our High Commissioner in London, defending the Rajapaksas to the hilt, assuring the world that in Sri Lanka the rule of law and justice flourish.

Minister Rambukwella also admonished the media for getting worked up about a mere miscellany: “If this incident happened during an official function it will be a matter of concern for the people, the Government and the media. There is no need to be agitated as it was a private matter that took place at a private residence.”

If Dr. Nonis departs silently, perhaps he will be left in peace. But if he seeks justice, more falsehoods will be fabricated, including about his past and present activities. Witnesses will be found willing to testify that Dr. Nonis was the slanderer and the boor and Monitoring MP Gunawardena was being a veritable Sir Galahad, gallantly defending the fair name of a lady. And if the Rajapaksas win another term, by whatever means necessary, there might even be witnesses willing to swear that they saw Dr. Nonis mercilessly assaulting MP Gunawardena!

At the annual convention of the British Conservative Party, British Foreign Secretary reportedly told Dr. Nonis, “Now you understand why we are pushing against Sri Lanka over human rights violations”

Will Dr. Nonis remember the innumerable Tamil, Muslim and Sinhala victims of Rajapaksa injustice? Will he realise at least now that abuse and impunity breed greater abuse and greater impunity, until general insecurity becomes the norm?

### Tribal Economics

Last week, the government blocked MP Wijedasa Rajapakhse from bringing a private member’s motion, mandating 80% pictorial-warnings on cigarette packets.

A Bill to the effect was approved by the parliament unanimously, some time back. But then the Ceylon Tobacco Company went to courts. The courts overturned the parliamentary decision and decided on 60% pictorial-warning.

When Wijedasa Rajapakshe tried to introduce the motion on 80% pictorial-warning, the regime maintained that the last word should belong to the judiciary. “Acting Health Minister Lalith Dissanayake said there was a court ruling in this regard and therefore, as a mark of respect for the judiciary, this bill could not be passed into law in the House.”

This of course is the polar opposite of what the regime said during Impeachment Days. Then, UPFA ministers and parliamentarians took up arms to defend parliamentary supremacy. No one is above the parliament, they insisted, time and again. The judiciary has no right to interfere in parliamentary matters or override parliamentary decisions.

So the parliament is supreme when the Rajapaksas want the parliament to be supreme; the judiciary is supreme when the Rajapaksas want the judiciary to be supreme. What matters is not constitution or law or tradition, but familial wants, needs and interests.

### The Tribe rules.

Tribal economics is a necessary corollary of tribal politics. As Roger Owen pointed out, monarchical republics based on ‘personalised presidential power’ cannot be sustained without certain fundamental changes in the existing power-structures. These include control over the economy, the judiciary and the army. In Sri Lanka many of these preconditions are being realised. If the Rajapaksas win the presidential election, the slide will become unstoppable.

In 2012, even as the Impeachment Crisis was heading towards its nadir, the Rajapaksas introduced several clauses via the Appropriations Bill, tailor-made to undermine parliamentary control over Finances. One clause gave the President a veritable carte blanche to obtain loans up to Rs.1,295 billion in 2013. Another clause empowered the Finance Minister (i.e. the President) to withdraw funds allocated for specific purposes in the Budget or from the Consolidation Fund, without parliamentary approval; all he had to do was to get his decisions rubber-stamped by the cabinet.

The 1978 Constitution is very clear on the matter – the parliament and not the president controls finances. It was one of the few balancing provisions in a constitution which gave the executive too many powers. So the Rajapaksas, in their conscious pursuit of absolute power, sought to remove this democratic leaven, not constitutionally, but via a sleight of hand.

When this attempt was challenged, the Supreme Court ruled that some clauses were indeed unconstitutional and that “the 2013 Appropriations Bill should be amended to make parliamentary approval necessary for securing loans”. In other words, the judiciary tried to uphold parliamentary supremacy in matters of finance. But the Rajapaksas ignored the ruling, with the full backing of the UPFA majority in parliament. The government introduced an amendment to the clause which protected the presidential carte blanche. It merely stated that the president should give a report to parliament, once the loans are obtained. When the Opposition protested, the government said that it was acting according to the AG’s interpretation of the Supreme Court ruling. Thus the AG was placed above the parliament, the courts and the constitution. Since the AG functions under the President (a change wrought by the Rajapaksas in 2010), this effectively meant making the president supreme.

When a modern democracy succumbs to tribal rule, grotesqueries become the norm.

According to the 2015 Allocations Bill, 63.2% of the national budget will be allocated for the ministries under the two Rajapaksa brothers, Mahinda and Basil.

*Courtesy: Colombo Telegraph*




Contact:

**David Eva**
OR
**Ernest Sri**

258- High Street North
Manor Park, London E12 6SB

Tel: **020 8475 0755**
Fax: **020 8470 4755**
Mob: **07803 600 543**

THE MORTGAGE ORGANISATION

AUTHORISED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

அனைவருக்கும் எமது
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

RESIDENTIAL MORTGAGES & COMMERCIAL MORTGAGES

**Commercial Loans**

- Petrol Stations
- Hotels, Restaurants & Takeaways
- Convenience Shops
- Pharmacies, Development Finance
- Dentist & GP Surgeries
- Vehicle Finance

**Residential Mortgages**

- Re-Mortgages
- Buy to Let
- Bridging Loans
- Right to Buy
- Help to Buy



Loans can be arranged for leasehold and freehold businesses

MORTGAGES AVAILABLE FOR NON UK CITIZENS

How will a ‘YES’ make you feel ?

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE

# KIDS பேப்பர்

## யார் புத்திசாலி



ஒரு முனிவரிடம் இரண்டு சீடர்கள் இருந்தனர். இருவரும் பலசாலிகள், புத்திசாலிகள். ஒருமுறை தங்களில் யார் புத்திசாலி என்பதில் இவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது.

இந்தச் சண்டை முனிவரிடம் வந்தது. அவர் சீடர்களிடம் 'சீடர்களே... இன்று ஏனோ எனக்கு அதிகமாகப் பசிக்கிறது. சமையல் முடிய தாமதமாகும்போல் தெரிகிறது. நீங்கள் இருவரும் அங்கேயிருக்கும் மரத்தில் பழங்களைப் பறித்து வாருங்கள்' என்றார்.

முனிவரிடம் மிகவும் பணிவாக நடந்து கொள்ளும் அந்தச் சீடர்கள் இருவரும் மரத்தை நோக்கி ஓடினர். ஆனால், அந்த மரத்தின் முன்பாக முள் செடிகள் இருந்ததால் அவர்களால் அந்த மரத்தை நெருங்க முடியவில்லை.

முதல் சீடன் சற்று பின்னோக்கி வந்தான். பின்னர் முன்னோக்கி வேகமாக ஓடினான். ஒரே தாண்டில் முள் செடிகளைத் தாண்டினான். அந்த மரத்திலிருந்த பழங்களை முடிந்த வரைப் பறித்தான். மரத்திலிருந்து இறங்கிய அவன் மீண்டும் ஒரே தாவலில் முள்செடியைத் தாண்டினான். முனிவரின் முன்னால் வந்து நின்றான். அவரிடம் பறித்துக் கொண்டு வந்த பழங்களைக் கொடுத்தான்.

இரண்டாமவன் ஒரு அரிவாளை எடுத்து வந்தான். முள்செடிகளை வெட்டி ஒரு பாதை அமைத்தான். அப்போது சில வழிப்போக்கர்கள் அலுப்போடு அந்தப் பக்கமாக வந்தனர். அவர்கள் இரண்டாம் சீடன் வெட்டி வைத்த பாதை வழியே சென்று, மரத்திலிருந்த பழங்களைப் பறித்துச் சாப்பிட்டனர். மரத்தடியில் படுத்து இளைப்பாறினர். இரண்டாவது சீடனும் தேவையான அளவு பழங்களைப் பறித்து வந்தான்.

இப்போது முனிவர் முதல் சீடனிடம், இரண்டாவது சீடன் தான் அதிபுத்திசாலி என்றார்.

முதலாமவன், 'சுவாமி, நீங்கள் இன்னும் எங்களுக்குப் போட்டியே வைக்கவில்லை. அதற்குள் அவனை எப்படிச் சிறந்தவன் என்று சொன்னீர்கள்' என்று கோபப்பட்டான்.

முனிவர் அவனிடம், 'சீடனே, நான் உங்களிருவரையும் பழம் பறிக்கச் சொன்னதே உங்களில் சிறந்தவர் யார்? என்று தெரிந்து கொள்ளத்தான். நீ மரத்தருகே இருந்த முள்செடிகளைத் தாண்டிக் குதித்து, இந்தப் பழங்களைப் பறித்தது வந்தாய். இது உன் சுயநலத்தைக் காட்டுகிறது. ஏனெனில், அதை நீ எனக்கு மட்டுமே தந்தாய். நான் மட்டுமே பலன் அடைந்தேன். இரண்டாம் சீடனோ முள் செடியை வெட்டிப் பாதையைச் சீரமைத்ததால், எனக்கு மட்டுமின்றி ஊராருக்கும் பழங்கள் கிடைத்தன. இன்னும் பல நாட்கள் இந்தப் பழங்கள் அனைவருக்கும் கிடைக்கும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கச் செய்பவனே அதிபுத்திசாலி' என்றார்.

## Colouring - 228




## Around the World

### - Malaysia -



Continet: Asia

Language: Malay (official), English, Chinese dialects, Tamil, Telugu, Malayalam

Population: 29.3 million

Capital: Kuala Lumpur

Currency: Malaysian ringgit

Main Religion: Islam, Buddhism, Taoism, Hinduism, Sikhism

Main exports: Electronic equipment, petroleum and liquefied natural gas, chemicals, wood products, rubber, textiles

### - Brazil -



Population: 198.3 million

Capital: Brasilia

Largest city: Sao Paulo

Major language: Portuguese

Major religion: Christianity

Main exports: Manufactured goods, iron ore, coffee, oranges, other agricultural produce

Monetary unit: Brazilian real

Largest city: Sao Paulo

Area: 8.55 million sq km

## நாள் ஒரு குறள்

*மருந்தாகித் தப்பா மரத்துஅற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின்.*

விளக்கம்:

பிறருக்கு உதவும் பெருந்தன்மை உள்ளவனிடம் சேரும் செல்வம், முழுப்பகுதியும் மருந்தாகிப் பயன்படும் மூலிகை மரம் போன்றது.

Wealth in the trust of the worthy, is a wholesome medicinal tree of lasting benefits.


## Friends

How good to lie a little while
And look up through the tree!
The Sky is like a kind big smile
Bent sweetly over me.
The Sunshine flickers through the lace
Of leaves above my head,
And kisses me upon the face
Like Mother, before bed.
The Wind comes stealing o'er the grass
To whisper pretty things;
And though I cannot see him pass,
I feel his careful wings.
So many gentle Friends are near
Whom one can scarcely see,
A child should never feel a fear,
Wherever he may be.

## Issue 227 Winner
## Jegathas Tharsi




Tharsi Jegathas



J.Samuel



Mukilan Arunendram



(226) Mukilan . A

## The Fox and the Crow



A Fox once saw a Crow fly off with a piece of cheese in its beak and settle on a branch of a tree. "That's for me, as I am a Fox," said Master Reynard, and he walked up to the foot of the tree. "Good-day, Mistress Crow," he cried. "How well you are looking to-day: how glossy your feathers; how bright your eye. I feel sure your voice must surpass that of other birds, just as your figure does; let me hear but one song from you that I may greet you as the Queen of Birds."

The Crow lifted up her head and began to caw her best, but the moment she opened her mouth the piece of cheese fell to the ground, only to be snapped up by Master Fox. "That will do," said he. "That was all I wanted. In exchange for your cheese I will give you a piece of advice for the future:

"Do not trust flatterers."

## Moral Saying

- Honesty is best policy.
- Charity begins at home.
- Riches are for spending.
- The hand that rocks the cradle rules the world.
- Knowledge is power.
- He is strong who conquers himself is might

Tharsi, St.John Fisher School, 8 Years Old.



அனைவருக்கும் எமது தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

www.poojasweets.com

Best Quality Vegetarian Food for Any Occasions!



5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!

...tempting?

discover a new heaven on earth:

ORDER ON LINE

FOR NEXT DAY DELIVERY
ANYWHERE IN THE UK!*

We also do International deliveries*
*Terms apply. See online for details

POOJA
SWEETS & SAVOURIES

The Taste That You Will Love, The Quality That You Can Trust

TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com

KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com

DUNN
SHIPPING LTD.



நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளித்திருநாள் வாழ்த்துக்கள்

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்....

இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை

Door to Door Delivery

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்

இலங்கையில் சகல இடங்களுக்கும் நேரடியாக விநியோகம்

இரண்டு நாட்களில் கொழும்பிற்கான துரித தபால் சேவை

- VEHICLE SHIPPING
- FURNITURE SHIPPING
- EXPRESS LETTER SERVICE
- PACKING SERVICE
- RELOCATION SERVICE
- MAN AND VAN SERVICE
- PACKING MATERIALS
- EUROPEAN PARCEL SERVICE

Unit 1024, Cheetham Hill, 202 -208 Manchester, M8 8LW

No: 04, 12,Jenner Avenue, London,W36EQ

750, Greenford Road, Greenford, UB6 8QQ

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

Tel : 020 8842 2020 | Mob : 07949 361 434 | M : 07949 361 313

Mail : info@dunnshipping.co.uk
Web : www.dunnshipping.co.uk



JR Print
www.jrprint.com
- experience of the power -

25 YEARS EXPERIENCE IN THE PRINTING INDUSTRY
QUICK, QUALITY & AFFORDABLE SERVICE

CALL US FOR
QUOTATION & QUERIES:
0208 503 643

www.jrprint.com
www.jrdigitals.com




59-61
Hoe Street,
Walthamstow
London
E17 4QR
0208 503 643
jrprintuk@gmail.com

**Staff Wanted**
Urgently

An experienced
**Heidelberg two colour**
machine minder
required to work part
time or full time.
Please contact
**Ravi 079 39 998730**

Digital Printing
High Quality Offset Printing
Occational Invitations
Wide Format Printing
Signboard Soulutions
Vehicle Wrapping & Signs
Web Design &
E-commerce Solutions & more

---

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# sarasas
## SOUTH INDIAN RESTAURANT

- தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
- உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
- சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
- நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே





* Outdoor catering * Function hall * Party orders

புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது



# SARASAS CATERING

We make 30 different Types of Dosa

எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்

630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com

FREE CAR PARKING UPTO 100 CARS

**Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)**

# வட மாகாண சபை: கடந்து வந்த வருடம் தந்த பாடங்களும் இனிச் செய்ய வேண்டியவையும்

– குமாரவடிவேல் குருபரன்

*(யாழ்ப்பாணம் உதயன் பத்திரிகையின் 12 அக்டோபர் 2014 திகதிய வட மாகாண சபையின் ஒரு வருட பூர்த்தி விஷேட (சூரியகாந்தி) பதிப்பில் இக்கட்டுரையின் சுருங்கிய வடிவம் வெளியானது. அதன் முழுமையான வடிவம் இது)*

ஐ. நா பொதுச் சபையின் 69ஆவது கூட்டத் தொடரில் செப்டம்பர் 25, 2014 அன்று ஆற்றிய உரையில் வட மாகாண சபைத் தேர்தலை நடாத்தியமையை வடக்கிற்கு சனநாயகம் திரும்பியமைக்கான சான்றாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார். தமிழர்களுக்கு சனநாயக அதிகாரம் வழங்கிவிட்டேன் என்று சர்வதேசத் திடம் பறை சாற்றுவதற்கு வட மாகாண சபைத் தேர்தலையும் அதன் நிலவுகையையும் ராஜபக்ஷ தொடர்ந்து பாவித்து வருகிறார். வட மாகாண சபைத் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் ஐ. நா பொதுச் செயலாளர் பான் கி மூன் வட மாகாண சபைத் தேர்தல்கள் அரசியல் மீளிணக்கத்துக்கான வாய்ப்பை வழங்குவதாக ஊடக அறிக்கையில் தெரிவித்தார். இந்தியா அடிக்கடி தாம் தான் இந்தத் தேர்தலை நடத்தப்படுவதற்கான காரணகர்த்தா எனப் பெருமை பேசி வருகின்றது. எங்கள் தலைமைகளும் அதற்கு அடிக்கடி நன்றி சொல்லி வருகின்றனர். தேர்தல் நடந்து முடிந்த கையோடு இந்த தேர்தல் வெற்றி 1977இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீது பெற்ற வெற்றியிலும் பார்க்க முக்கியமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் தெரிவித்தார். இந்தப் பத்திரிகையும் (உதயன்) தேர்தல் வெற்றிற்குப் பின்னரான தனது அடுத்த நாள் பதிப்பில் 'தமிழர் அரசு' ஒன்று மலர்ந்து விட்டதாக பறை சாற்றி தமிழர்களை மகிழ்ச்சிப்படுத்தியது.

இந்த மாதத்தோடு வட மாகாண சபை தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருடமாகிறது. எதனை சாதிக்கக் கூடியதாக இருந்தது, எதிர்கொண்ட சவால்கள் என்ன, கற்ற பாடங்கள் என்ன என்பன பற்றி வட மாகாண அரசு தனக்கு வாக்களித்த மக்களுக்கு நேர்மையாக அறிக்கையிட வேண்டும். தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளுடன் ஒப்பிட்டு அடுத்த கட்டம் என்ன என்பது பற்றியும் கூற வேண்டும். பெரிதாக எதனையும் சாதிக்க முடியவில்லை என்றால் அது ஏன் என்பதனை ஆவணப்படுத்த வேண்டும். அது எமது அரசியலின் அடுத்த கட்ட நகர்வுக்கு முக்கியம். ஜனநாயக பொறுப்புக் கூறல் என்ற வகையில் இது முக்கியமானது. இச் சிறு கட்டுரையில் வட மாகாண சபையின் கடந்த ஒரு வருட இயங்குகை எமக்கு அளிக்கும் சில படிப்பினைகள் பற்றி சில அவதானிப்புக்களை முன்வைக்கிறேன். இனிச் செய்யத்தக்கவை எவை என்பதையும் இறுதியில் குறிப்பிடுகின்றேன்.

வட மாகாண சபையின் ஒரு வருட கால அனுபவம் தரும் முக்கிய பாடம் ஒன்றே: மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரிடமும் அமைச்சரவையிடமும் நிறைவேற்றுத் துறை அதிகாரங்கள் இல்லை மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநரிடமே அந்த அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன சட்டவாக்க அதிகாரங்களும் பெரிதாக இல்லை. எமது மக்களின் நாளாந்த, உடனடிப் பிரச்சனைகளுக்கு மாகாண சபை முறைமையை வைத்துக் கொண்டு பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது. (வட மாகாண சபையால் செய்ய முடிந்ததெல்லாம் எமது மக்களின் குரலாக அவ்வப்போது சில தீர்மானங்களை நிறைவேற்றியமையே. இது தேவை தான். ஆனால் இதை மட்டுமே சாதனையாக கருத முடியாது). எதை நாம் சட்டத்தில் அறிந்து வைத்திருந்தோமோ அதை இன்று நடைமுறையில் அனுபவித்துள்ளோம். இதைத் துணிகரமாக வட மாகாண சபை சொல்ல முன் வர வேண்டும். ஆடத் தெரியாதவனுக்கு கூடம் சரியில்லை என்று எதிர்க் கட்சி நக்கலடிக்குமே என்று பயப்படுவதில் பிரயோசனம் இல்லை. கூடம் சரியில்லை என்பது தான் உண்மை. உண்மை உண்மையாக உரைக்கப்பட வேண்டும். உலகத்தாருக்கு கேட்கும் வரைக்கும் உரத்துச் சொல்லப்பட வேண்டும்.

### வட மாகாண சபையின் 'ஆளுநர் பிரச்சனை'.

மாகாண சபையின் நிறைவேற்றுத்துறையில் ஆளுநர் பரம்பொருளுக்கு நிகரான நிலையைக் கொண்டுள்ளவர். மாகாணப் பொதுச் சேவையின் முழுக் கட்டுப்பாடும் ஆளுநரிடமே. மாகாணப் பொதுச் சேவைக்கு ஆட்களை நியமிப்பது, நீக்குவது, ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதும் ஆளுநரின் அதிகாராதிற்குட்பட்டவை என மாகாண சபைச் சட்டம் (பிரிவு 32) தெரிவிக்கின்றது. ஆளுநர் இந்த அதிகாரங்களை மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கலாம். ஆனால் அந்த மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவை நியமிப்பவரும் ஆளுநரே. மாகாணத்தின் பிரதம செயலாளர் போன்றோர் (மத்திய) பொதுச் சேவை ஆணைக் குழுவின் அதிகார எல்லைக்கு உட்பட்டவர்கள். மாகாணப் பிரதம செயலாளருக்கு உத்தரவிடும் அதிகாரம் மாகாண முதலமைச்சருக்கு இல்லை என்பதை பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஷ் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் வழங் கப்பட்டுள்ள தீர்ப்பின் மூலம் உறுதியாகிறது. உண்மையில் இந்த வழக்கில் முதலமைச்சர் தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் முதலமைச்சருக்கு பிரதம செயலாளர் மீது அதிகாரம் உண்டு என வாதிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக இடைக்கால உத்தரவொன்று நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட பின்னர், தான் தாக்கல் செய்த சத்தியக் கடதாசியில், சர்ச்சைக்குரிய சுற்று நிருபத்தை திரும்பப் பெற்றுக் கொள்வதாக முதலமைச்சர் உயர் நீதிமன்றிற்கு தெரிவித்தார். அந்தக் கட்டத்திலேயே அந்த வழக்கு முடிவுற்றது என்று தான் கொள்ள வேண்டும்.

பிரதம செயலாளர் மட்டுமன்றி முதலமைச்சரின் செயலாளர், அமைச்சர்களின் செயலாளர்கள் எல்லோருமே இலங்கை நிர்வாக சேவை (SLAS) அதிகாரிகள். இவர்கள் மீதும் உண்மையான கட்டுப்பாடு அவ்வவ் அமைச்சர்களுக்கில்லை என்பதே உண்மை. SLAS அதிகாரிகள் மற்றும் மத்திய பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படுபவர்களைத் தவிர மீதமுள்ள மாகாணப் பொதுச் சேவை ஏற்கனவே குறிபிட்டது போல ஆளுநரின் நேரடி கட்டுப்படுக்குட்பட்டது. முதலமைச்சரின் நேரடி ஆணையின் கீழ், அவருக்கு மட்டும் பொறுப்புக் கூறும் ஒரு அரச ஊழியர் தானும் இல்லை என்பதே உண்மை. கிராம சேவையாளருக்கு கட்டளை இடும் அதிகாரம் கூட இல்லை என்று அடிக்கடிச் சொல்லக் கேள்விப்படுவது வெறும் வார்த்தை அல்ல உண்மை. இவை போதாதென்று சனாதிபதி பிரேமதாசா காலத்தில் நிறைவேற்றப்பட்ட அதிகார கைமாற்ற சட்டத்தின் (Transfer of Powers Act No 58 of 1992) பிரகாரம் மாகாண சபையால் நிவேற்றப்படும் சட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டது. பிரதேச செயலாளர்கள் பொறுப்புக் கூறுவது முதலமைச்சரிடம் அல்ல. அவர்களைக் கட்டுபடுத்துவதும் மத்திய அரசாங்கம் தான். வட மாகாண சபை தேர்தலுக்கு முன்னர், ஆளுநர், அரச சேவை உத்தியோகஸ்தர்களுக்கான கூட்டமொன்றில் 'தெரிவு செய்யப்பட மாகாண சபை நிர்வாகம் வந்த பின்னரும் நானே உங்களுக்கு கட்டளையிடுவேன், அதுவே சட்டம்' என அதிகாரத் தொனியில் ஞாபகப்படுத்தியதாக செய்தியும் உண்டு.

வட மாகாண சபையினது ஆரம்பம் தொட்டு தெரிந்தெடுக்கப்பட்ட மாகாண சபை நிர்வாகத்திற்கும் வடக்கு அரச சேவை உத்தியோகஸ்தர்களுக்கும் இடையே முரண்பாடான உறவுநிலை இருந்து வருகிறது. தமக்கு விசுவாசமாக அரச ஊழியர்கள் இல்லை என்ற வருத்தம் வடமாகாண சபைக்கு ஆரம்பத்திலிருந்து இருந்து வருகிறது. வட மாகாண சபை அரச ஊழியர்களை குறைகூறுவது மேற்சொன்ன காரணங்களுக்காக எய்தவன் இருக்க அம்பை நோவதற்கு ஒப்பானது. அரச ஊழியர்களில் சிலர் அதீத மத்திய அரசு விசுவாசத்தை தங்கள் சொந்த நலன்களுக்காக காட்டுகின்றனர் என்ற உண்மை ஒரு பக்கம் இருக்கவே செய்தாலும் தமது பதவியை ஆபதுக்குள்ளாக்காமல் அவர்களால் வட மாகாண அமைச்சரவையின் முழுமையான திட்டத்தை உள்வாங்கி அவர்களுக்கு ஒத்திசைவாக இயங்க முடியாது என்பதும் கடினமான நிதர்சனமே. உயர் பதவியிலுள்ள அரச உத்தியோகஸ்தர்கள் இப்படியான ஆபத்துக்களை எதிர்கொண்டு தமது சௌகரிய செயற்பாட்டு வெளிகளுக்கப்பால் வந்து செயற்படத் தயாராக வேண்டும் என்று சமூகம் அவர்களிடம் எதிர்பார்க்கின்றது. அப்படியான எண்ணம், சிந்தனை, முனைப்பு இல்லாமல் தமிழ்ச் சமூகம் தான் சந்திக்கும் ஆபத்துக்களிலிருந்து விடுபட முடியாது என்பதை அவர்கள் உணர வேண்டும். உயர் பதவி வகிக்கும் தமிழ் அரச உத்தியோகஸ்தர்கள் தத்தமது சமூகப் பங்களிப்பு பற்றி யோசிக்க வேண்டும். பொது நிர்வாக அலுவலர்கள் மட்டுமன்றி சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் பொதுப் பணியாற்றும் அனைத்து மத்தியதர வர்க்கத்தினரும் தமது வேலைத் தளம் சார்ந்து ஆற்றும் உத்தியோகபூர்வ காரியங்களின் அறவொழுக்கம் பற்றி சிந்திக்க வேண்டும். அது வங்கியாளர்களாக இருக்கலாம், நீதிபதிகளாக இருக்கலாம், பல்கலைக்கழக நிர்வாகிகளாக இருக்கலாம், பாடசாலை அதிபர்களாக இருக்கலாம். தமது மக்களையே ஒடுக்கும் அரச இயந்திரத்தின் ஏவலாளர்களாக அல்லாமல் தமது அதிகார எல்லைகுட்பட்டேனும் தமது மக்களுக்கு நன்மை செய்ய முடியாவிடினும் தீமையாவது விளையாமல் செயலாற்ற முடியுமா என்று சிந்திக்கத் தொடங்க வேண்டும். இதுவும் ஒரு வகையில் சாத்வீகப் போராட்டம் தான். இத்தகைய தேடல், சிந்தனைக்கு உதவும் வகையில் வட மாகாண அரசியல் தலைமைத்துவம் கருமமாற்ற வேண்டும். தமிழ் அரச ஊழியர்களோடு மோதுவது ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டமாக அமைந்து விடும் என்பதனை மனதில் கொள்ள வேண்டும். நிற்க.

வட மாகாணசபையின் 'ஆளுநர் பிரச்சனை' வெறுமனே நிறைவேற்றுத் துறை அதிகாரங்களைப் பிரயோகிப்பதில் மட்டுமல்ல. அண்மையில் நிதி மசோதாக்கள் சிலவற்றை வட மாகாண சபையில் நிறைவேற்றுவதிலும் இந்த ஆளுநர் பிரச்சனை வெளிப்பட்டது. முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கான மசோதாவை பின் வாங்கும் அளவிற்குப் பிரச்சனை இருந்தது. இதற்கு காரணம் நிதி மசோதாக்களை அவையில் சமர்ப்பித்து விவாதிப்பதற்குக் கூட ஆளுநர் அனுமதியை சட்டம் தேவைபடுத்துவதாலேயே ஆகும்.

### ஆளுநர் பிரச்சனையா ? 13 ஆம் திருத்தம் தான் பிரச்சனையா?

ஆளுநர் பிரச்சனையை கையாள வட மாகாண சபையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எடுத்துக் கொண்ட முயற்சி என்ன என்பதை சற்று பார்ப்போம். தேர்தல் பிரசாரத்தின் போது இராணுவ ஆளுனரை மாற்றி சிவிலியன் ஆளுனரை நியமிக்க வேண்டும் என்பது முக்கிய கோஷமாக்கப்பட்டது. 'சனாதிபதியின் முன் முதலமைச்சர் பதவியேற்பதன் மூலம் இணக்க அரசியலின் சில கூறுகளை நாம் சுவீகரிக்கத் தயார், பதிலுக்கு ஆளுநரை மாற்றுங்கள்' என்ற கூட்டமைப்பின் அணுகுமுறை முழுமையாக தோல்வியடைந்துள்ளது. வட மாகாண சபையின் 11 நவம்பர் 2013 அன்றைய அமர்வின் போது ஆளுநரைப் பதவி நீக்கச் சொல்லி மாகாண சபை உறுப்பினர், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார். ஆனால் அது அரசியலமைப்பில் சொல்லப்பட்ட செயன்முறைமையை (அரசியலமைப்பின் உறுப்புரை 154 (B)(4)) பின்பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போல தெரியவில்லை. (அரசியலமைப்பை வேண்டுமென்றே உதாசீனம் செய்தார், ஒழுக்கக் குறைவாக நடந்து கொண்டார், போன்ற விடயங்களில் எதை ஆளுநர் மீறினார் என்பதைச் சுட்டிக் காட்டி நிறைவேற்றப்பட்ட தீர்மானமாக இது தெரியவில்லை) அப்படி நிறைவேற்றியிருந்தாலும் ஆளுநரை நீக்குமாறு அதை வைத்துக் கொண்டு சனாதிபதிக்கு ஆலோசனை மட்டுமே வட மாகாண சபை கூறலாம். ஆளுநர் சனாதிபதி விரும்பும் வரை பதவி வகிக்கலாம் என்றே அரசியலமைப்பு கூறுகிறது.

ஆனால் இராணுவ ஆளுநர் தான் பிரச்சனையா? அல்லது ஆளுநர் என்ற நிறுவனத்திற்கு 13ஆம் திருத்தம் கொடுத்திருக்கும் அதிகாரங்கள் தான் பிரச்சனையா?

(தொடர்ச்சி 20ம் பக்கம்)


ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..

உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட...

Enrol them in Learna

• Individualised • Interactive • Inspiring

Maths & English Teaching for 4-16 years olds

FREE Assessment

We also prepare pupils for
• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics



LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# இஸ்லாமிய அரசுக்கு எதிரான கூட்டமைப்பிலும் குழப்பம்




**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

இது கூட்டமைப்புக்குள் குழப்பம் வரும் காலம் போல் இருக்கின்றது. ஐ.எஸ்.ஐ.எஸ் என்றும் ஐ.எல் என்றும் ஐ.எஸ் என்றும் அழைக்கப்படும் இசுலாமிய அரசுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்கா தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டமைப்பிலும்குழப்பம்ஏற்பட்டுள்ளது.இந்தக் கூட்டமைப்பில் ஐம்பதிற்கு மேற்பட்ட நாடுகள் இணைந்துள்ளன. இதிலும் ஒன்றிற்கு ஒன்று முரண்பட்ட நோக்கங்கள் கொண்டவர்கள் ஒன்றாக இணைந்து ஈராக்கிலும் சிரியாவிலும் செயற்படும் இசுலாமியஅரசுஎன்னும்தீவிரவாத அமைப்பிற்கு எதிராகத் தாக்குதல் நடாத்துகின்றனர்.

### ◆ வெளிநாட்டுப் போராளிகள்

ஐ.எஸ் என இப்போது அழைக்கப்படும் இசுலாமிய அரசுப் போராளிகள் ஈராக்கில் ஒரு வலுவற்ற அரச படைகளிர்கு எதிராகவும் சிரியாவில் ஒரு வலுமிக்க அரச படைகளுக்கு எதிராகவும் போராடுகின்ற வேளையில் சிரியாவில் அரச படைகளுக்கு எதிராகப் போராடும் மற்றப் போராளிக் குழுக்களுக்கு எதிராகவும் தாக்குதல் நடாத்துகின்றனர். இதனால் இசுலாமிய அரசுப் போராளி அமைப்பற்றிய பல ஐயங்கள் எழுந்தன. அல் கெய்தா 2014-ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் தமக்கும் இந்த அமைப்பிற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என அறிவித்தது. இசுலாமிய அரசு என தமது கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பை பிரகடனப்படுத்தியதில் இருந்து வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவிலும் இருந்து பல உறுப்பினர்கள் இசுலாமிய அரசு அமைப்பில் இணைந்து கொண்டிருக்கின்றனர். முன்பு அல் கெய்தாவின் கிளை அமைப்பான அல் நஸ்ரா அமைப்பில் பல வெளிநாட்டவர்கள் இணைந்தனர்.பல இசுலாமியத் தீவிரவாத அமைப்புக்கள் இசுலாமிய அரசின் தலைவர் அல் பக்தாடி இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் உளவாளி எனக் குற்றம் சுமத்துகின்றன.

### ◆ குர்திஷ் மக்கள் மீது தாக்குதல்

இசுலாமிய அரசுக்கு எதிரான கூட்டமைப்பின் நோக்கமான இசுலாமிய அரசைச் செயலிழக்கச் செய்யும் நோக்கம் இப்போது திசைமாறி கொபானி என்ற சிறு நிலப்பரப்பினுள் முடக்கப்பட்டுள்ளது. ஈராக்கில் அமெரிக்கா தலைமையினால் கூட்டமைப்புப் படைகள் இசுலாமிய அரசின் போராளிகள் மீது விமானத் தாக்குதல் நடாத்த குர்திஷ் மக்களின் பெஸ்மேராப் போராளிகள் தரைவழித் தாக்குதல் நடாத்தினர். இதனால் ஆத்திரமடைந்த இசுலாமிய அரசின் போராளிகள் சிரியாவில் உள்ள குர்திஷ் மக்கள் மீது கடும் தாக்குதல் நடாத்தினர்.

### ◆ குர்திஷ் மக்களின் முதுகில் குத்த இனி இடமில்லை

சிரியாவில் உள்ள குர்திஷ் மக்கள் மீது இசுலாமிய அரசு தாக்குதல் நடாத்தத் தொடங்கியவுடன் அவர்களைக் காப்பாற்றும் படி உருக்கமான வேண்டு கோள்கள் விடுத்தனர். அவர்களுக்குப் போதிய பயன் கிடைக்கவில்லை. பிரஸல்ஸில் உள்ள ஐரோப்பியப் பாராளமன்றத்துக்குள்ளும் இலண்டன் ஹித்துரு விமான நிலையத்தின் முனையம் இரண்டிலும் குர்திஷ் மக்கள் புகுந்து சிரியாவின் தமது மக்களைக் காப்பாற்றும் படி ஆர்ப்பாட்டம் நடாத்தினர். பயன் கிடைக்கவில்லை. கூட்டமைப்பு நாடுகளுடன் இணைந்து செயற்படும் குர்திஷ் மக்களுக்கு எதிராக துருக்கியப் போர் விமானங்கள் 2014 ஒக்டோபர் 14-ம் திகதி தாக்குதல் நடாத்தின. துருக்கிக்கும் குர்திஷ் மக்களுக்கும் நீண்ட நாள் பகை இருந்தது. 2012-ம் ஆண்டில் இருந்து ஒரு சமாதான முயற்ச்சி நடந்து வந்தது. அதை இந்தத் தாக்குதல் முறியடித்தது. கொபானியில் குர்திஷ் மக்களுக்கு எதிரான தாக்குதலைத் தடுக்க துருக்கி எந்தவித நடவடிக்கையும் எடுக்காதமையால் குர்திஷ் மக்கள் துருக்கிய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடாத்தினர். இதற்கு எதிராக துருக்கியக் காவற்துறையினர் கடுமையாக நடந்து கொண்டனர். ஐக்கிய அமெரிக்காவைப் பொறுத்தவரை கொபானி இசுலாமிய அரசுக்கு எதிரான போரில் ஒரு கேந்திர முக்கியத்துவம் இல்லாத ஒரு பிரதேசமாகும். இதனால் குர்திஷ் மக்களுக்கு மீண்டும் துரோகமிழைக்கப்பட்டது. சதாம் ஹுசேயின் காலத்திலும் குர்திஷ் மக்களுக்கு அமெரிக்கா மோசமான துரோகம் செய்தது.

### ◆ நேட்டோ நட்பு

நேட்டோ என்னும் படைத்துறைக் கூட்டமைப்பின் ஒரு உறுப்பு நாடான துருக்கி இசுலாமிய அரசுக்கு எதிரான போரில் பெரும் பங்கு வகிக்க வேண்டும் என அமெரிக்கா விரும்புகின்றது. ஆனால் துருக்கியின் நிலைப்பாடு வேறு விதமாக இருக்கின்றது. துருக்கி லிபியாவில் செய்தது போல் ஒரு விமானப் பறப்பற்ற பிரதேசத்தை துருக்கி ஒட்டிய சிரியாவில் பிரகடனப்படுத்த வேண்டும் என்கின்றது. அத்துடன் ஒரு தடைசெய்யப்பட்ட வலயத்தையும் உருவாக்க வேண்டும் என்கின்றது. இவை துருக்கி பகிரங்கமாக அறிவித்தவை. ஆனால் துருக்கியின் திரைமறைவு நோக்கம் மிக மோசமானதாக இருக்கின்றது. சிரியாவின் அலெப்போ ஈராக்கின் மொசுல் ஆகிய பிரதேசங்களை தனது நாட்டுடன் இணைக்க வேண்டும் என துருக்கி இரகசியமாக வலியுறுத்தி வருகின்றது. இதை அமெரிக்காவின் மற்ற நட்புறவு நாடுகள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஏற்கனவே எகிப்தில் மொஹமட் மேர்சி பதவியில் இருக்க வேண்டும் என துருக்கியும் மீண்டும் படைத்துறையினரிடம் ஆட்சி ஒப்படைக்க வேண்டும் என சவுதியும் அமெரிக்காவிடம் வலியுறுத்தினதால் இரு நாடுகளுக்கும் இடையில் திரைமறைவு முறுகல் ஏற்பட்டது.

### ◆ துருக்கியின் விரிவாக்கற் கனவு

துருக்கி உதுமானியப் பேரரசு என்னும் பெயரில் உலகில் பல நாடுகளை ஆண்ட ஒரு நாடு. உலக வரலாற்றில் நீண்டகாலம் தாக்குப் பிடித்த பேரரசு துருக்கியின் உதுமானியப் பேரரசாகும். முதலாம் உலகப் போரில் உதுமானியப் பேரரசு தோற்கடிக்கப் பட்ட பின்னர் துருக்கியின் சார்பில் அச்சு நாடுகளுடன் பரிஸ் நகரத்தில் பேச்சு வார்த்தை நடாத்திய துருக்கி குர்திஷ் மக்களும், கிரேக்க மக்களும் ஆர்மியினர்களும் தனது ஆட்சியின் கீழ் இருக்க வேண்டும் என வேண்டியது. அத்துடன் ஈராகின் மொசுல், டியர் பக்கிர் ஆகிய பிரதேசங்களும் சிரியாவின் அலெப்போ பிரதேசமும் துருக்கியின் ஆட்சியின் கீழ் வேண்டும் என வலியுறுத்தியது. முதலாம் உலகப் போரில் மோசமாகத் தோற்கடிக்கப்பட்ட துருக்கி இப்படி ஒரு வேண்டுகோளை வைத்தமையை அப்போதைய பிரித்தானியத் தலைமை அமைச்சர் மிகச்சிறந்த நகைச்சுவை என்றார். அமெரிக்க அதிபர் இதிலும் பார்க்க முட்டாள்த்தனமானது வேறு இருக்க முடியாது என்றார். இப்போது துருக்கி இசுலாமிய அரசுக்கு எதிரான போரில் சிரியாவின் அலெப்போவையும் ஈராக்கின் மொசுலையும் தனது நாட்டுடன் இணைக்க வேண்டும் எனக் கோரிக்கை வைப்பதையும் அதே மாதிரித்தான் பார்க்கப்படும் எனபதில் ஐயமில்லை.

அன்றும் இன்றும் குர்திஷ் மக்கள் துருக்கியின் மத்திய கிழக்கு நோக்கிய விரிவாக்கத்திற்கான தடையாகப் பாவிக்கப்படுகின்றனர். ஆனால் துருக்கி தனது ஆதிக்கத்தின் கீழ் மேற்படி பிரதேசங்கள் வந்தால் மட்டுமே ஈராக்கிலும், சிரியாவிலும் 'அமைதி' ஏற்படும் எனநம்புகின்றது.

### ◆ குர்திஷ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட கேர்குக் (Kirkuk) பிரதேசம்

குர்திஷ் மக்கள் பெரும்பானமையாக வாழ்ந்த எண்ணெய் வளம் மிக்க கேர்குக் பிரதேசத்தை துருக்கியிடம் இருந்து முதலாம் உலகப் போரில் பிரித்தானிய பிடுங்கிக் கொண்டது. அங்கு பிரித்தானியா தான் உருவாக்கிய எண்ணெய் உற்பத்தி நிலையங்களில் பணிபுரிய சுனி இசுலாமியர்களை அங்கு கொண்டு வந்து பெருமளவில் குடியேற்றி குர்திஷ் மக்களை சிறுபான்மையினராக்கியது. சதாம் ஹுசேயினிற்கு எதிராக குர்திஷ் மக்கள் அமெரிக்காவாலும் பிரித்தானியாவாலும் பாவிக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டனர்.

### ◆ கேர்குக் மீது கழுகுக் கண்கள்

2014-ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ் (இசுலாமிய அரசு) ஈராக்கியப் படைகளுக்கு எதிராகக் கடும் தாக்குதல் நடாத்திய போது குர்திஷ் போராளி அமைப்பான பெஸ்மேரா கேர்குக் பிராந்தியத்தைத் தமது கட்டுப்பாட்டின் கொண்டுவந்துவிட்டது. தற்போது குர்திஷ் மக்களிடமிருந்து கேர்க்குக் பிராந்தியத்தைப் பிடுங்கிக் கொள்ள இசுலாமிய அரசு, உள்ளூர் அரபுக்கள், ஈரான், துருக்கி ஆகியவை நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அலைகின்றன. குர்திஷ் மக்கள் மிகவும் கலக்கத்துடன் கேர்குக் பிராந்தியத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றனர்.

### ◆ அமெரிக்காவின் பயங்கரவாதிகள் ஏற்றுமதி

அமெரிக்காவின் மத்திய கிழக்குக் கொள்கையில் முக்கியமானவையாக உலக எரிபொருள் விநியோகம், இஸ்ரேலின் பாதுகாப்பு, மத்திய கிழக்கில் வேறு நாடுகள் ஆதிக்கம் செலுத்தாமல் பார்த்துக் கொள்வது ஆகியவை இருக்கின்றன. இதற்காக அமெரிக்கா 10 ரில்லியன் டொலர்களைச் செலவழித்துள்ளது. அமெரிக்கா இப்போது எரிபொருளில் தன்னிறைவு கண்டு விட்டது. இஸ்ரேலின் பாதுகாப்பை இஸ்ரேலே பார்த்துக் கொள்ளும் நிலை அதிகரித்து வருகின்றது. இவற்றால் அமெரிக்காவின் மத்திய கிழக்கிற்கான கேந்திரோபாயம் மாற்றமடைகின்றது. தற்போது மத்திய கிழக்கில் அமெரிக்காவின் முக்கிய கேந்திரோபாய நோக்கம் இசுலாமியத் தீவிரவாதத்தை ஒழித்துக் கட்டுவதாகும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள இசுலாமியர்களிடையே உள்ள தீவிரவாதிகள் தற்போது சிரியாவிலும் ஈராக்கிலும் உள்ள போராளிக் குழுக்களில் இணைகின்றனர். இதை முதலில் ஒரு பெரும் ஆபத்தாகப் பார்த்த ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகள் தற்போது இதை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதுகின்றன. தம் நாட்டில் உள்ள தீவிரவாதிகள் தற்போது ஏற்றுமதி செய்யப்படுகின்றார்கள். ஒரு இசுலாமியத் தீவிரவாதியை பிரித்தானியாவில் வைத்தோ அல்லது அமெரிக்காவில் வைத்தோ கொல்வது பல சட்டச் சிக்கல்களை உருவாக்கும். மாறாக இவர்களை ஈராக்கிலோ அல்லது சிரியாவிலோ ஒரு போர் முனையில் வைத்துக் கொல்வது இலகுவானதாகும். சிரிய மற்று ஈராக்கில் நடக்கும் உள்நாட்டுப் போர் மேற்கு நாடுகள் தமது நாடுகளைத் சுத்தப்படுத்தவே. இதில் தமக்கு விடுதலை கிடைக்கும் என குர்திஷ் மக்கள் கனவு காணக்கூடாது.



# வட மாகாண...

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

ஆளுநர் யாராக இருந்தாலும் முழுமையாக வழிநடத்தப் போவது ஜனாதிபதி தான் என்பது தெரிந்தும் முழு முறைமையை பிரச்சனைக்குட்படுத்தாமல் வெறுமனே யார் பதவியில் இருக்கிறார்கள் என்பதை மட்டும் பிரச்சனையாக்குவது போதாது. நாளையே தற்போதைய இராணுவ ஆளுநருக்குப் பதிலாக ஒரு சிங்களப் பேராசிரியரை ? ஏன் தனக்கு விசுவாசமான தமிழர் ஒருவரை சனாதிபதி நியமிப்பார் என்று வைப்போம். தற்போதைய ஆளுநரைப் போலவே அவரும் நடந்து கொள்வார் என்று வைப்போம். அப்போது என்ன சொல்லப் போகிறோம்? த.தே.கூ வட மாகாண சபைத் தேர்தல் காலத்திலேயே யார் ஆளுநர் என்பதை வைத்து பிரச்சாரத்தை முன்னெடுத்து, தனிநபர் தான் பிரச்சனை, முறைமை இல்லை என்ற மயக்கத்தை ஏற்படுத்தியது.

இராணுவ அதிகாரி வேண்டாம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் பிரச்சனை அடிப்படையில் 13ஆம் திருத்தத்தின் கட்டமைப்பு சார் போதாமைகளில் உள்ளது என்பதைச் சொல்லுவதே எமது அரசியல் தலைமையின் பொறுப்பு. நோயின் வெளிக்குணம் குறிகளுக்கு தீர்வை கேட்பது நோயை தீர்ப்பதாகாது. ஆளுனரை மாற்றுவதால் வட மாகாண சபைக்கு அதிகாரங்கள் கிடைக்காது. அதிகாரங்கள் அற்ற மாகாண சபைக்கு, 'முழுமையாக 13ஆம் திருத்தத்தை நிறைவேற்றுங்கள்' என்று கேட்பதில் பயனில்லை. காணி அதிகாரங்கள் கொஞ்சம் உண்டு என்று சொன்னவர்கள் உண்டு. ஆனால் எங்களது தலையாய பிரச்சனை காணி சுவீகரிப்பு. அதனைத் தடுக்க 13ஆவது திருத்தத்தின் ஊடாக வாய்ப்பில்லை (முழுமையாக நடைமுறைப்படுதினாலும் வாய்ப்பில்லை தான்). காவல் துறை அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை தான். நடைமுறைப்படுத்தினாலும் முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டது போன்று எமது மாகாணக் காவல் படை சீருடை அணிந்து நித்திரை கொள்ளத்தான் அதிகாரம் உள்ளவர்களாக இருப்பார்கள். இல்லாத அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்ற கதையை விட வேண்டும். ஒற்றையாட்சி தத்துவத்திற்கு உட்பட்டிருக்கும் 13ஆம் திருத்ததிற்கு பிளஸ் (13+) கேட்டும் பிரயோசனம் இல்லை. ஒற்றயாட்சிக்குள் பிளஸ் போட முடியாது பிளஸ் போட இடமில்லை என்று உயர் நீதிமன்றம் எப்பவோ தீர்ப்பளித்து விட்டது. வட மாகாண சபை எதிர் கட்சித் தலைவர் சொல்வது போல் செயல்திறன் இல்லாமையால் வட மாகாண சபையால் சாதிக்க முடியவில்லை என்பது தவறு. அரசாங்கத்தோடு சேர்ந்திருந்த முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானைக் கேட்டாலே விளங்கும் மாகாண சபை முறைமையின் வங்குரோத்து நிலை.

இரண்டாமாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் வட மாகாண சபை, தெளிவாக 13ஆம் திருத்தத்தால் ஒரு பயனும் இல்லை என்பதைச் சொல்ல வேண்டும். 13ஆம் திருத்தம் தான் அரசியல் தீர்வுக்கான பாதையில் இன்றுள்ள பிரதான தடைக்கல். முயற்சித்துப் பார்த்தோம்? பிரயோசனம் இல்லை என்று சொல்லுவது தான் வட மாகாண சபை தமிழர்களுக்கு செய்யக் கூடிய மிகப் பெரிய கைங்கரியம். இதைச் செய்து கொண்டு, சமாந்திரமாக, தேவையெனின் மாகாண சபைக் கட்டமைப்புக்கு வெளியில் நின்று கொண்டு, துணிந்து, தூரப் பார்வையுடன் புதிய பயணம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். மக்களின் நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான 'அவுட் ஒப் தி பாக்ஸ்' செயற்பாடுகள் / முயற்சிகள் தேவை. மாகாண சபை தந்த அரசியல் வெளியை, செல்வாக்கைப் பாவித்து மக்கள் மயப்பட்ட நிறுவனங்களை மாகாண சபைக்கு வெளியில் நிறுவ வேண்டும். அமைச்சர்களாக இருந்து கொண்டே அமைச்சுகளுக்கு வெளியில் வந்து செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். உதாரணமாக முதலமைச்சர் நிதியத்தை ஆளுநர் தடுத்தார் என்பதோடு விடாமல் நிதியத்தை மாகாண சபைக் கட்டமைப்புக்கு வெளியால் நிறுவுங்கள். நான்கு அமைச்சர்களையும் முதலமைச்சரையும் அதன் பொறுப்பாளர்களாக நியமியுங்கள். திட்டங்களை மக்கள் முன் பகிரங்கமாக வையுங்கள். கைதடி மாகாண சபை கட்டடத்திலேயே உத்தியோக பற்றற்ற அமர்வுகளை நடத்துங்கள். அந்தக் கட்டடத்தை மக்கள் பங்கு பற்றலுக்கு விடுங்கள். சாத்வீகப் போராட்டம் பற்றி அடிக்கடி அறிவிப்பு வருகிறது. உயிரை கொடுப்பதற்குத் தயார் என்றும் சொல்கிறார்கள். பெட்டிக்குள்ளிருந்தும் பெட்டிக்கு வெளியே சிந்திக்கலாம். நிதானமாக செயற்படுகிறோம் என்று சொல்லிக்கொண்டு ஒரே இடத்தில் பழைய பல்லவி பாடிக் கொண்டிருப்பதில் இருப்பதில் புண்ணியமில்லை. சாத்வீகப் போராட்டம் வெற்றியளிப்பதற்கு ஆக்கத் திறனான புதிய சிந்தனை தேவை. மக்கள் பங்குபற்றல் வேண்டும். திட்டமிடல் வேண்டும். பழையன கழிந்து புதிய மார்க்கம் வேண்டும்.

♦ ♦ ♦ ♦

பிற்குறிப்பு: இக்கட்டுரை 02 அக்டோபர் 2014 அன்று எழுதி முடிக்கப்பட்டது. 10 அக்டோபர் 2014 சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் எழுதிய கடிதம் முக்கியமானது. அக்டோபர் 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள விஷேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கு வர முடியாது என்று அறிவித்து எழுதிய அக்கடிதத்தில் தமது ஒரு வருட அனுபவத்தில் ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்கு உட்பட்ட 13ஆம் திருத்தம் ஒரு உள்ளடக்கமற்ற வெற்று நிறுவனம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கடிதத்தின் பந்தி 11ஐ முழுமையாகத் தருகிறேன்: 'நாம் ஒரு வருடம் பதவியில் இருந்து வந்துள்ள இன்றைய நிலையில் வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் கூட மாகாண சபை ஆட்சி முறைமை எமது ஒற்றையாட்சி முறைமையின் கீழ் ஒரு அதிகாரமற்ற ஓட்டை அமைப்பாகவே தென்படுகின்றது. தற்போதைய ஆட்சி முறையில் குறிப்பாக யுத்தத்திற்கு பின், நிலையான அரசியல் தீர்வு எதுவுமற்ற நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாகாண சபையானது அதிகாரமற்றதொன்றாகவே தென்படுகின்றது. 13ஆம் திருத்தத்தின் உண்மையான சுயரூபத்தை முதலமைச்சர் முழுமையாக வெளிக்கொணர்வதற்குத் தயாராக இருப்பதற்கான முதல் படியாக இதைக் கொள்ளலாமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## வயலில் இருந்து திரும்பியவள்...

கால்களில் கிடந்த மண்
பொருக்குகளை
தட்டிக் கொண்டிருக்கையில்
சிதைந்து ஓலமிடத் தொடங்கின
விளையாதுபோன பாட்டனின்
கனவுகள்.

கதைகளில் சொல்லாத
ரேகைகளில் கூறாத
விரல்களால் தீட்டாத
பாட்டனின் கனவுகள்
கூடி மொய்க்கத்தொடங்கின,

விளைந்த நெருக்கத்தில்
நான் அறியாத
பாட்டனின் முத்தமொன்றை
பரிசளித்தன,

உடல் சிலிர்க்க நடுக்கத்தோடு
முத்தம் வெளியேற்றிய
கண்ணீரை முகர்ந்தவை,
கால நாற்றங்களால் உணர்வடக்கிக்
கொண்டன,

கண்ணீர் வெளியேறிய
வெற்றிடத்தில்
பாட்டனின் வயல்
வளரத்தொடங்கியது.
விளையாத கனவுகள்
உணர்வுடைத்து இனி வேர்விடக்
கூடும்.

எனிலும்,
நான் இன்றே எனது வயலை
கொலை செய்துவிடப் போகிறேன்.!

- நெற்கொழு தாசன் (யாழில்)










# கால் நூற்றாண்டு கடந்தும் லெப்.கேணல் விக்ரரின் நினைவுகள்..



மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராமத்தில் 1963ம் ஆண்டு பிறந்த மருசலனின் பியூஸ்லஸ் என்ற தளபதி விக்ரர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கல்வி பயின்றவர்.

எமது விடுதலைப் போராட்டமானது பரந்து விரிந்து, ஆழ வேருன்றி பெருகிவிட்டதாக தனக்கே உரித்தான வளர்ச்சி கண்டு நிற்பதைக் உலகம் புரிந்து கொண்டுள்ளது.

அன்று எமது குரல்கள் அடங்கிக்கிடந்தன, எமக்கான குரல்களும் கேட்காது கிடந்தன, இன்று எட்டி நின்றவர்களும் எமக்காக குரல் கொடுகின்றனர். இது ஒரு கால மாற்றம் இந்த மாற்றத்தை எம் இனத்திற்கு பெற்றுத் தந்த பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் வரிசையில் அத்திவாரக் கற்களாகி நிற்கும் விக்டர் போன்ற வீரத்தளபதிகளை தமிழினம் மறக்காது.

**இன்றும் அன்றும் எமது தலைவர் அவர்களின் நேர்த்தியான வழிகாட்டலினால் மிக மிக உன்னத நிலையை எமது போராட்டம் சந்தித்து நிற்கிறது என்பது தெளிவாகின்றது.**

விடுதலைப் பயிரானது ஆதிக்க பாதங்களினால் மிதிபட்டுப் போய்விடுமோ, பேரினவாதிகளின் பெருமூச்சினில் கருகிவிடுமோ என்ற ஏக்கம் நிறைந்த காலங்களிலெல்லாம் தலைவருக்குப்பக்கபலமாக நின்று விடுதலைப்பயிரை உரமிட்டுப் பாதுகாத்துத் தந்த மூத்த தளபதிகளை வரலாறு நிச்சயம் பதிவு செய்யும்.

விடுதலைப்புலிகள் இராணுவ அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்கவோ அல்லது அரசியல் அழுத்தங்களுக்கு விலை போகக்கூடியவர்களோ அல்லர் என்பதை மிகப்பெரிய வரலாற்று சாதனை ஒன்றினூடாக சர்வதேச சமூகத்துக்கு சத்தியம் செய்து கொடுத்த சாதனையாளன் தளபதி விக்ரர். 12.10.1986 அன்று மன்னார் மாவட்டம், அடம்பன் பகுதியைச் சுற்றி வளைக்க வந்த நூற்றுக்கணக்கான சிங்களப் படையினரை எண்ணிக்கையில் குறைந்தளவு போராளிகளைக் கொண்டு முற்றிலும் பாதகமான சூழ்நிலையிலும், அதிகாலை வேளையிலும் இரண்டில் ஒன்று, ஒன்று அவன் அல்லது நாங்கள் என்ற துணிவு மிகுந்த வார்த்தைகளை எங்கள் தொலைத்தொடர்பு சாதனங்களூடாக வழங்கிவிட்டு களத்திலே நேரில் இறங்கி வியூகம் அமைத்து, ஊடறுத்து, சிதைத்து, சடலங்கள் ஆயுதங்களை அள்ளி, சிறைபிடித்து என்றவாறு தாக்குதலை நகர்த்தி "ஓட விடாதே", "பார்த்துப்பார்த்து விழுத்து", "ஹெலியை இறக்கவிடாதே", இறங்கிய ஹெலியை பறக்கவிடாதே" என்றெல்லாம் தனது சுடுவிரல் அசைவினால் நெறிப்படுத்தி நின்ற வெற்றிகரமான சூழ்நிலையின் இறுதிக் கணத்தில் தளபதி விக்டரின் தொடர்பை இழந்து நின்ற அன்றைய சோகம் நிறைந்த நினைவுகளை பகிர்வதில் மனம் நிறைவடைய மறுக்கிறது.

நாட்டுக்கு நாடு நடைபெற்ற யுத்தம்போன்று சர்வதேச யுத்த விதிகளுக்கு அமைவாக படையினரின் சடலங்களை ஒப்படைத்தும், சிறைக் கைதிகளை பரிமாற்றம் செய்தமையும் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்றுவரை விடுதலைப்புலிகள் கடைப்பிடித்துவரும் நடைமுறையினை சிறிலங்கா அரசும், சர்வதேசமும் புரிந்துகொண்டிருக்கும்.

சிறிலங்காப் படையினரை சிறைப்பிடித்தும், படையினரின் சடலங்களை மீட்பதும் தமிழ் மக்கள் மத்தியில் மெல்லமெல்ல துளிர்விட்ட விடுதலைப் போராட்டம் மீதான நம்பிக்கையினை மேலும் பலபடிகள் பாய்ந்து செல்ல வைத்த அற்புத நிகழ்வாகவே தளபதி விக்ரர் தலைமையிலான அன்றைய தாக்குதல் சம்பவம் அமைந்திருந்தது.

1983ம் ஆண்டு யாழ் திருநெல்வேலியில் சிங்களப் படையினருக்கு எதிரான கண்ணி வெடித் தாக்குதலில் முக்கிய பாத்திரம் வகித்த தளபதி விக்ரர் அவர்கள் தமிழீழப் பகுதியில் தலைவரின் நேரடி வழிகாட்டலில் நடைபெற்ற இராணுவத்திற்கு எதிரான தாக்குதலிலும் பங்கு பற்றியவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

1985ம் ஆண்டு மன்னார் பொலிஸ் நிலையத் தகர்ப்பின் போது பாதகமான சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாது எமது அணியினை நகர்த்தி இடையில் ஒன்று கூட்டி ஒழுங்குபடுத்தி மீண்டும் வேகமாய் நிதானமாய் நகர்த்தி "ராதா ஸ்ராட்", "குமரன் ஸ்ராட்" (லெப் கேணல் குமரப்பா) என்று ஆரம்பக் கட்டளைகளை அணித்தலைவர்களுக்கு வழங்கி குறுகிய நேரத்தில் பொலிஸ் நிலையத்தை வெற்றி கொண்டு ஒரே ஒரு போராளியின் வீரச்சாவுடன் ஏனையோரை கடல் கடந்து பத்திரமாக கரை சேர்ப்பது வரையில் தளபதியின் வழிகாட்டல் என்பது மறக்கமுடியாத நினைவாகி நிற்கிறது. அன்றைய வெற்றிகரத் தாக்குதலை பி.பி.சி செய்தியாளர் தெரிவிக்கும் போது விடுதலைப் புலிகளின் மதிநுட்பமும், துணிவும் நிறைந்த வெற்றிகரத் தாக்குதல் என வர்ணித்தார்.

மன்னார் மக்கள் அன்றைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தி தளபதி விக்ரருக்கு தங்கச் சங்கிலி பரிசளித்து கௌரவித்தனர். பெரும் மகிழ்வுடன் மக்களை வரவேற்கும் பண்பு. நிமிர்ந்து உயர்ந்த அழகிய தோற்றம், அன்புத் தலைவரை இதயச் சுவர்களில் சுமந்து நின்று வழிப்படுத்திய அன்றைய நாட்கள் மறக்க முடியாதவை.

எமது விடுதலை இயக்கம் பிரசவித்த அக்கினி குஞ்சு என்பது மகளிர் படையணியின் வளர்ச்சி பற்றி எமது தலைவரின் வாக்கிற்கு உயிர் கொடுத்த தளபதியாக விக்டர் அன்று செயற்பட்டார் எமது பெண் போராளிகளுக்கு முதன் முதல் களம் கற்றுக்கொடுத்து இன்று வியக்க வைக்கும் வளர்ச்சியை பெற்று நிற்கும் எமது விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் மூத்த சகோதரனாகவே திகழ்ந்தார். தனது சிறந்த நிறைவான குரல்வளத்தால், பாடும் திறமையால் போராளிகளின் மனதை மற்றுமொரு கோணத்தில் இடம்பிடித்தும் தளபதி விக்டருக்கு இருக்கும் இன்னும் ஒரு சிறப்பு அம்சம்.

கைத்துப்பாக்கியை அழகாக கழற்றி குறி தவறாது சுட்டிக்காட்டி, கமராவை கையாள்வதும், கலையை ரசிப்பதும் இயற்கையிலேயே அழகுணர்ச்சியுடன் பழகிவந்த தளபதி அவர்கள் எமது தலைவரால் வளர்க்கப்பட்டவர் என்பதில் நாம் பெருமையடைகிறோம்.

இன்று எமது விடுதலைப் போராட்டமானது ஆயிரம் படையினரை ஒரே நாளில் களத்திலிருந்து அப்புறப்படுத்திய வரலாற்று வளர்ச்சியை பெற்றுநிற்பதை உற்றுநோக்கும் போது மிகுந்த பக்குவத்துடன் எமது தாயக விடுதலைப் பயணம் நகர்ந்து செல்வதை இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடிகிறது.

இன்றும் அன்றும் எமது தலைவர் அவர்களின் நேர்த்தியான வழிகாட்டலினால் மிக மிக உன்னத நிலையை எமது போராட்டம் சந்தித்து நிற்கிறது என்பது தெளிவாகின்றது.

என்றுமில்லாதவாறு எழுட்சி கொண்டு எமது மக்கள் நிற்கும் இவ்வேளையில் தாயகப் பற்றுணர்வுடன் ஆயிரம் ஆயிரம் விக்ரர்கள் புதிது துதிதாக எழுந்து வரவேண்டும் இதுவே இன்றுள்ள வரலாற்றுத் தேவையாகும்.

*– இணையம்*

## எம்மினிய இளவல்களே எழுந்திருங்கள்... எழுந்திருங்கள்...

கார்த்திகைப் பூ மலரும்
காலமது வருகிறதுஞ்
கை கோர்த்துக் கை சேர்த்து
களங்களிலே நாம் சென்ற
காலங்களை எண்ணிப் பாருங்கள் !

உங்களுடன் கூட வந்தோரில்
பலரில்லை இன்று..
என்னுடன் கூட வந்தோரிலும்
பலரில்லை இன்று!

எங்கு சென்றார் என்று
எண்ணிப்பாருங்கள் விடை தெரியும்..
தாமரைப் பொய்கையிலே
பூப் பறிக்கும் காலமல்ல அது!

கல்லறைகள் அருகே
கண்ணீரைச் சொரியும்
காலமது வருகிறது..
கார்த்திகைப் பூ மலரும்
காலமது வருகிறது !

தமிழ் ஈழத் தேசமதன்
தேசிய மலராம்..
கார்த்திகைப் பூ மலரும்
காலமது வருகிறது..
எம்மினிய இளவல்களே ..
எழுந்திருங்கள்..எழுந்திருங்கள்!

கல்லறைகள் ஒவ்வொன்றும்
காதகரால் அழிந்தாலும்..எம்
நெஞ்சறைகள் மீது
நீங்கள் அன்றோ உள்ளீர்கள்..?

காத்திகைப் பூப் பறித்து—உம்
காலடியில் நாம் சொரிவோம்..
காத்திருங்கள் வீரர்களே..
கண்ணீரும் சேர்ந்துவரும்..!

பார்த்திருங்கள் பார்த்திருங்கள்..
பாசமுள்ள பெற்றோரும்.
நேசமுள்ள சோதரரும்..
சேர்ந்து வாழ்ந்த உறவினரும்..
கல்லறைகள் என்னும் உங்கள்
கோவிலுக்கு வரும் நாளைப்
பார்த்திருங்கள்..பார்த்திருங்கள்!

கார்த்திகைப் பூக்கள் எல்லாம்
உங்கள்..
கல்லறையைத் தேடிவந்து..
கனிவுடனே வணங்கும் அந்த
கார்த்திகை மாதம் வருகிறது..
பார்த்திருங்கள்..பார்த்திருங்கள்!
மாவீரரே பார்த்திருங்கள்!

- மு.வே.யோகேஸ்வரன்



அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்!!

- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Company Formation
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பகிரும் பகைநாடுகள்

பாகம் 163

*‘கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு*

*மாடல்ல மற்று பிற’*

என்கிறார் ஐயன் வள்ளுவர். இங்கு மாடென்பது செல்வத்தைக் குறிக்கும். ‘வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்வேகாதுகொள்ளத்தான்முடியாது கொடுத்தாலும் நிறைவின்றிக் குறைவுறாது’ கேடடையாத கல்வி என்னும் செல்வத்திற்கு நிகரானது வேறெதுவுமில்லை என்பது அக்குறளின் பொருள். அந்தக் கல்வியைப் பெண் குலத்திற்கு மறுக்கும் படு பிற்போக்குத்தனமான இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுவொன்றின் ஆயுததாரி ஒருவனால் சுடப்பட்டு மரணத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவள் ‘மலாலா யுசாவ்சாய்’ என்னும் இளமலர். பெயருக்கேற்ப மலர்ந்து சிரிக்கும் அப்பெண்மைக்குள் நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் திமிர்ந்த ஞானச் செருக்குமிருப்பதால் செம்மை நிறைந்த மாதரசியாய் பயங்கரவாதிகளின் அட்டகாசத்திற்கு நடுவே பாகிஸ்தானில் அவள் பெண் பிள்ளைகளின் கல்விக்காகத் தன் உயிரைப் பணயம் வைத்துப் போராடினாள். அவளின் அந்தத் தியாகத்திற்கு இப்போது உலகின் அதியுயர்ந்த பரிசான நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. அவளுடன் பரிசைப் பங்கிட்டுக் கொள்பவர் குழந்தைத் தொழிலாளர்களை விடுவிக்கப் பாடுபடும் இந்தியரான ‘கைலாஸ் சத்தியார்த்தி’. இரண்டுபகைநாடுகளைச்சேர்ந்தவர்களான ஒரு இஸ்லாமியப் பெண்ணும்?, இந்துமதத்தவரும் சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பங்கிட்டுக் கொள்வது மகிழ்ச்சியளிப்பதாயிருக்கிறது.

பெண்கல்விக்காகக் குரல் கொடுப்பது தமிழருக்கு புதிதல்ல.

*‘ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணி இருந்தவர் மாண்டுவிட்டார்*

*வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்’*

என்று பெண் கல்விக்கு ஓங்கிக் குரல் கொடுத்தவன் பாரதி. காலயிலெழுந்து படிக்கவும், பாடவும், மாலை முழுவதும் விளையாடவும் குழந்தைகளை ஊக்குவித்தவன் பாரதி. அவனது தாசனான பாரதிதாசனோ:

*‘தலைவாரிப்பூச்சூடி உன்னைப்பாடசாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை….*

*விலை போட்டு வாங்கவா முடியும் கல்வி வேளை தோறும் கற்று வருவதால் படியும்…*

*கடிகாரம் ஓடுமுன் ஓடு என்கண்ணல்ல அண்டை வீட்டுப் பெண்களோடு…*

*கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு பெண்கல்வி பெண்கல்வி என்கின்ற(து) அன்போடு’*

என்று பெண்குழந்தைகளை ஓர் தந்தையின் ஸ்தானத்தில் நின்று பள்ளி செல்லுமாறு வற்புறுத்துகிறார். அக்கவிதை மூலம் பெண் கல்விக்கு தமிழ்நாடு எப்போதோ முக்கியத்துவம் கொடுக்கத் துவங்கிவிட்டது என்பது புலனாகின்றது. இன்று பாரதி, பாரதிதாசன் போன்ற தமிழகக் கவிஞர்களின் கனவுகளுக்கும் அறிவுரைகளுக்கும் அகில பாரதத்திலும், பாகிஸ்தானிலும் தக்க அங்கீகாரம் கிடைத்துவருவதை மலாலாவும், கைலாசும் பெற்றிருக்கும் நோபல் பரிசு மூலம் உணர முடிகின்றது. நாமும் அந்த சமாதானப் பரிசை வென்ற போராளிகளை வாழ்த்துவோம். இரண்டு பெரிய நாடுகளால் இவ்வளவு காலமும் செய்து கொள்ள முடியாதிருந்த சமாதானத்தை அந் நாடுகளைச் சேர்ந்த இரண்டு தனிநபர்கள் செய்துகிடைத்த பரிசையும் பங்கிட்டுக் கொள்கிறார்கள். இனியாவது இவ்விரு நாடுகளும் தமக்கிடையேயுள்ள பகையை மறந்து தெற்காசியாவின் சமாதானத்திற்காகப் பங்காற்றுவார்களா?

### பெங்களூரு ஜெயிலில குழுகுழென்னு..

ஒரு படத்தில் நாகேஸ் பிக்பாக்கட் கள்வனாக வருவார். தனது சகபாடியுடன் பேசும்போது ‘பெங்களூரு ஜெயிலில ஒரு ஆறுமாசம் குழு குழென்னு இருக்க வச்சாங்கன்னா எவ்வளவு நல்லாயிருக்கும்’ என்பார். அந்தளவுக்கு மிதமான சுவாத்திய நிலை கொண்ட பெங்களூரை புரட்சித் தலைவி ஜெயலலிதாவும் அவருடைய சகபாடிகளும் தமது வழக்கு விசாரணைக்காக முன்கூட்டியே தெரிவு செய்ததும், விசாரணையின் முடிவில் அங்கேயே சிறையிலிருப்பதும் இந்தச் வெக்கையில்லாத சுவாத்திய நிலையைக் கருதித்தானோ தெரியவிலை.

சமீபத்தில் ஜெயலலிதாவின் சொத்துப் பட்டியலையும், அவரது வளர்ப்பு மகனான சுதாகரின் திருமணத்திற்காகச் செய்யப்பட்ட செலவுகளையும் இணையத்தில் பார்க்கக் கூடியதாயிருந்தது. மக்களின் தலைவர்கள் ஏன் இவ்வளவு கிரேஸித்தனமாக நடக்கிறார்களோ தெரியவில்லை. அவற்றையெல்லாம்பார்க்கும் போது ‘ஆசைக்கோரளவில்லை அகிலமெல்லாங் கட்டி ஆளினும் புவிமீதிலே…’ என்னும் தாயுமானவரின் பரசிவ வணக்கப் பாடலே நினைவுக்கு வருகின்றது. ஏழுகோடித் தமிழர்களின் முடிசூடா அரசியாய், பரந்த தமிழ்நாட்டைக் கட்டியாண்ட அந்தப் பெண்மணி தன்னால் கட்டியாள முடியாத அளவுக்குச் சொத்துக்களைச் சேர்த்து இறுதியில் சட்டத்தின் பிடியில் வேறு அகப்பட்டு நிற்கிறார். வளர்ப்பு மகனின் திருமணச் செலவுகளைப் பார்க்கும்போது பிரமிக்கவைக்கிறது.

தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்தபோது அங்கு கோவணத்துடன் திரிந்த மக்களைப் பார்த்துவிட்டுத்தானாம் மகாத்மா காந்தி எளிய கதராடையைத் தனது நிரந்தர உடையாக ஆக்கிக் கொண்டார் என்பார்கள். அந்த மகாத்மா பிறந்த தேசத்தில் இப்படியுமொரு ஆடம்பரத்தை நேசிக்கும் மக்கள் தலைவி இருப்பது வேடிக்கையாக இருக்கிறது. வளர்ப்பு மகனின் திருமணத்திற்காக அர்த்த மில்லாத செலுவுகளுக்காக வெல்லாம் லட்சக்கணக்கில் பணம் விரயமாக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவும் அவர்களது சொந்தப்பணமாகவே இருக்கட்டும். இருந்தாலும் இத்தகைய ஆடம்பரம் ஓர் திருமணத்திற்கு அதுவும் நாட்டுத் தலைவியின் வீட்டுத் திருமணத்திற்குத் தேவைதானா என்பதை மூக்கில் விரலை வைத்துச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. தலைவி ஜெயலலிதாவைச் சொல்லிக் குற்றமில்லை. ஓர் நடிகையாக இருந்து தலைவியான அவரால் தான் வாழ்ந்த ஆடம்பர வாழ்க்கையை உதற முடியாமற் போயிருக்கலாம். ஆனால் அவருடனிருந்த அவரது அடிவருடிகளாவது ‘அம்மா இது கொஞ்சம் ஓவராப் போவுதுங்க. கொஞ்சம் அடக்கி வாசிக்கலாமே! பின்னுக்குப் பிரச்சனைகளைக் கொண்டு வரக் கூடும்..’ என்றாவது அறிவுரை கூறியிருக்கலாம். நடந்திருப்பவைகளைப் பார்த்தால் இந்தியாவே ஸ்தம்பித்து நிற்குமளவுக்கு கண்மண் தெரியாத அளவில் சொத்துக்குவிப்பும் ஆடம்பரச்செலவுகளும் செய்யப்பட்டிருக்கிறது.

தாங்கள் செய்தது தவறல்ல என்று சட்டத்தின் முன் ஜெயலலிதா தரப்பு வாதாடினால் மட்டும்போதாது மக்களும் திருப்திப்படக் கூடிய விதத்தில் இத்தகைய செலவுகளும் சொத்துக்குவிப்பும் ஏற்படக் காரணமென்ன என்ற விளக்கத்தை அவர்கள் பகிரங்க அறிக்கையாக விலாவாரியாகச் சமர்ப்பிக்க வேண்டும். அப்படி அவர்களால் செய்ய முடியுமோ தெரியவில்லை.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

### இலங்கை ஜனாதிபதியின் வடஈழ விஜயம்

அண்ணனின் மாப்பிள்ளை ஊர்வலம் போகையில் கூடப்பிறந்த தங்கச்சி கோபித்துக் கொண்டு தன்வீட்டு வாசலில் கண்ணீருடன் நிற்பதைப் போன்று இலங்கை ஜனாதிபதியின் வடஈழ விஜயத்தை வடமாகாண சபை கவலையோடு பார்த்துக்கொண்டு நிற்கிறது. ஜனாதிபதி அண்ணனோ “நான் இவளுக்குச் செய்ததெல்லாம் போதாதா? வைக்கற் பட்டடை நாய். தானும் முன் நின்று எனது கலியாணத்தைச் செய்யாமல் நான் என்பாட்டில் செய்வதையும் ஆதரிக்காமல், தன் பிள்ளைகளையும் வரவிடாமல் தடுத்து வைத்திருக்கிறாள்..” என்ற தோரணையில் வடமாகாண சபையைத் திட்டித் தீர்த்திருக்கிறார். இந்தப் பனிப்போர் எப்போதுதான் ஓயுமோ தெரியவில்லை. வடமாகாண சபைக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப் பட்டாலன்றி இந்த போர் ஓயப்போவதில்லை. என்னதான் நாட்டின் தலைவனாக, ஜனாதிபதியாக இருந்தாலும் எவ்வித அதிகாரங்களுமற்று முடங்கிக் கிடக்கும் வடமாகாண சபைக்கு அவர் தம்மைக் கவனியாது துரோகமிழைத்தவோர் அண்ணனாகவே தென்படுகிறார். வடமாகாண மக்களை இராணுவத்தின் பிடியில் வைத்துக்கொண்டு அதிகாரம் செலுத்துவதோடல்லாமல், அதற்கேற்ப ஓர் முன்னைநாள் இராணுவ அதிகாரியையும் கவர்னராக நியமித்து எல்லாவற்றுக்கும் முட்டுக் கட்டை போடவைக்கும் இலங்கையதிபரின் வடஈழ விஜயத்தைப் பகிஸ்கரித்த வடமாகாண சபையின் செயலை, நியாயப்படுத்தப் போதிய காரணங்கள் இருந்தாலும், ஓர் இணக்க அரசியல் அணுகுமுறைக்கு முற்றிலும் பொருந்தாத, சாணக்கியத் தன்மையில்லாத போக்காகவே இதனைப் பார்க்க வேண்டியிருக்கிறது. தற்போது ஐநா மனிதவுரிமைக் கவுன்சிலால் போர்க்கால மீறல்கள் பற்றிய விசாரணைகள் ஆரம்பித்திருப்பதால் ஜனாதிபதியை வரவேற்க வடமாகாண சபை முற்படுவது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்று சிலர் வாதிடக் கூடும். இருப்பினும், பழிதீர்ப்பது ஒன்றையே நமது லட்சியமாகக் கொண்டு, மக்களின் குறுகிய கால நலன்களில் அக்கறையில்லாது செயற்படுவது சரிதானா என்றும் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஜனாதிபதியின் வடபகுதி வருகை தொடர்பான அழைப்பிதழை ஏற்க முடியாதென்று முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட விரிவானவோர் கடிதத்தை 11-10-14 வீரகேசரி மின் பதிப்பில் காணக்கூடியதாக இருந்தது. கடிதம் தக்க சட்ட, சம்பிரதாய, நிர்வாக நடை முறைகளைக் குறிப்பிட்டுக்காட்டி எழுதப்பட்டிருந்தாலும், கலியாணமொன்றுக்கு விடுக்கப்பட்ட அழைப்பை, குடும்பத்திலேற்பட்ட மனக்கசப்பான விடயங்களைக் காரணங்காட்டி நிராகரிப்பது போன்றவோர் செண்டிமெண்டலான கடிதமாகவே புலப்பட்டது. ஓர் மாகாண அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையே இருக்க வேண்டிய தொடர்பாடல் முறைமைகள் இப்படித்தான் இருக்க வேண்டுமா? அல்லது சற்று வேறுபட்டு அரசியல், சட்ட ரீதியான உத்தியோக பூர்வ அணுகு முறையுடன் இருக்க வேண்டுமா? என்பது சரியாகத் தெரியவில்லை.

**வடமாகாண சபைக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டாலன்றி இந்த போர் ஓயப்போவதில்லை. என்னதான் நாட்டின் தலைவனாக, ஜனாதிபதியாக இருந்தாலும் எவ்வித அதிகாரங்களுமற்று முடங்கிக் கிடக்கும் வடமாகாண சபைக்கு அவர் தம்மைக் கவனியாது துரோகமிழைத்தவோர் அண்ணனாகவே தென்படுகிறார்.**

அரசியலில் அனுபவப்பட்ட நிபுணர்கள் இதனையே சரியான வழிமுறையாக ஏற்கவும் கூடும். ஆனால் எனக்கு இப்படி எழுதுவது சரியான அணுகுமுறையாகத் தெரியவில்லை கூடியவரை சுருக்கமானதாகவும், ‘நான் கூறி நீங்கள் அறிய வேண்டியதில்லை’ என்பது போன்ற தேவையற்ற வாசகங்கள் அற்றதாகவும் இருப்பதே உரிய அரசியல் நடைமுறையாக இருக்கக் கூடுமென்று எனது சிற்றறிவுக்குப் படுகின்றது.

இப்போதுதான் ஆயுத அரசியலிலிருந்து ஜனநாயக அரசியலுக்குள் நுழைந்து நிர்வாகத்தைக் கையிலெடுத்திருக்கும் நாம் இன்னும் முன்னேற அதிக படிகள் உள்ளன போற் தெரிகிறது.

*தொடருவம்….*

கருத்துக்களுக்கு -
www.facebook.com/orupaper
@orupaper


அனைவருக்கும் தித்திக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

எல்லாளன் இப்பொழுது உங்கள் அருகாமையில்..



» Off Licence
» மீன் வகைகள்
» பலசரக்கு வகைகள்
» இறைச்சி வகைகள்
» இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்
» மரக்கறி வகைகள்

ELLALAN SUPER MARKET 020 8681 7485
234-236, London Road, Croydon CR0 2TF

அனைவருக்கும் எமது தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள்!

SRI KANTH & CO SOLICITORS



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

# தீர்ப்பு வந்த வேளை...! கடக்க வேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது!




**ச.ச.முத்து**

எல்லாவிதமான பாதைகளும் கதவுகளும் அடைபட்டாலும் ஏதோ ஒரு கதவு திறந்தே தீரும். அதுவும் தானாக திறக்காது என்பதுதான் கவனிக்க வேண்டிய உண்மையாகும்.

அப்படியான ஒரு சிறிய பாதை ஒன்றை இரண்டு சட்ட மாணவர்களும் (லதன், ரஜீவ்) அவர்களின் பின்பாக நின்ற ஒருசில தகைமையாளர்களும் திறந்து வைத்திருக்கிறார்கள்.

ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பு வியாழக்கிழமை வெளியான போது அதற்கு பின்பாக இருந்த இவர்களின் மூன்று வருட கடின உழைப்பும் தேசியத்தின் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையுமே வென்றதாக தோன்றியது.

அதிலும் அவர்கள் ஒவ்வொரு சிறு சட்ட நகர்வுக்காகவும்,சட்ட ஆதாரத்துக்காகவும் செலவழித்த நேரங்களும் முயற்சிகளும் தலைவணங்கத்தக்கவை. அவர்களை தவிர வேறு யாருக்குமே அவர்கள் வெல்வார்கள் என்ற நம்பிக்கை இல்லாத ஒரு சூழலே நிலவி இருந்தது.

அதிலும் ஒரு ஆதாரம் ஒன்றுக்காக இரண்டு கையொப்பங்களுக்காக அவர்கள் கேட்டதாக சொல்லியபோதும் எவருமே அதனை அத்தனை பெரிய அவசரமாக கருதியாக தெரியவில்லை அப்போது.

ஆனால் அவர்களிடம் இருந்தது தேசியத்தின் மீதான அளவற்ற நம்பிக்கை. அதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதில் சளைக்காத முயற்சி என்பனவே. அது வென்று இருக்கிறது இப்போது.

தீர்ப்பு வெளிவந்துவிட்டது. அது ஏற்படுத்தி இருக்கும் தாக்கங்கள் பற்றி மேலோட்டமாக பார்ப்பதே இந்த ஆக்கத்தின் நோக்கம்.

எமது மக்கள் எப்படி பார்க்கிறார்கள்... எமது எதிரி சிங்கள பேரிவனவாதம் இதனை எப்படி பார்க்கிறது... இந்த தீர்ப்பின் அடுத்த தரப்பான ஐரோப்பிய ஒன்றியம் எப்படி பார்க்கும், என்ன இனி செய்யும் என்பதை பார்ப்போம்.

இந்த தீர்ப்பு வெளிவந்ததும் ஏதோ தமிழீழமே நெருங்கிவந்து விட்டதுபோல எமது மக்கள் மத்தியில் ஒரு பேரலை, ஒரு எழுச்சி மனமெங்கும் தோன்றி இருக்கிறது. தெருவில் யாரை பார்த்தாலும் இதனை பற்றியதாகவே பேச்சும் சந்தோசமும் தெறிக்கிறது.

ஒன்றை புரிந்துகொள்ள முடிகிறது தெளிவாக.. இந்த விடுதலை அமைப்பு எமது மக்கள் மத்தியில் எவ்வளவுதூரம் ஆழ உள்நுழைந்து அவர்களின் மனமெங்கும் படர்ந்து வேர் ஊன்றி நிற்கிறது என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

இது அவர்களின் அமைப்பு என்ற எண்ணமே அவர்களின் நினைவெங்கும் கலந்து இருக்கிறது.. விடுதலைப் புலிகளை தடைசெய்து பூச்சாண்டி காட்டிய காலங்களிலேயே தேசியக் கொடியுடன் தொடர்ச்சியாக நின்றிருந்த இந்த மக்களுக்கு தமது அமைப்பின்மீதான தடையை நிறுத்தி ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது ஒரு மனோ ரீதியான எழுச்சி என்பதில் ஐயமே இல்லை..

தமிழகத்திலும் இந்தியாவின் பலபகுதிகளிலும் இருந்து எமது விடுதலைக்கான குரலாக ஒலிக்கும் எமது உறவுகளுக்கு இந்த தீர்ப்பு செய்தி ஒரு ஊக்கியாக நிச்சயம் இருக்கும். அவர்களின் குரல் இன்னும் செறிவாக இன்னும் பலத்து, உரமாக எழும்பவேண்டும் இந்த தீர்ப்பின் பின் என்று எதிர்பார்கலாம்.

இரண்டாவது, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பின்பான ஒரு காலத்தை உருவாக்கி அதற்குள்ளாக தமது தீர்வு எலும்பு துண்டுகளை புகுத்தி அரசியல் செய்ய நினைத்த அனைத்து பெரிய-சிறிய சக்திகளுக்கும் இந்த தீர்ப்பினை கேட்டதும் எமது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பேரெழுச்சி, மனோபலம் என்பன பெருத்த ஏமாற்றத்தை தந்திருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பின்பான ஒரு காலம் என்பது ஒருபோதும் இல்லை..இனி வரும் எந்தவொரு போராட்டமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் நீட்சியே.. தொடர்ச்சியேதான் என்பதை இநத தீர்ப்பின் மகிழ்வு துல்லியமாய் காட்டி நிற்கிறது. எம்மை அழித்தொழித்து இனஅழிப்பு செய்து அதன்பின்பாக எமது மக்களை அடக்கி வைத்து ஒரு ஆட்சியை நிரந்தரமாக செய்யலாம் என்று நினைத்திருக்கும் சிங்களபேரினவாதம் இந்த தீர்ப்பை ஒருபலத்த அத்ர்ச்சியுடனேயே நோக்குகின்றது..

அதனை அழித்துவிட்டதாக சிங்கள மக்களிடம் சொல்லி சொல்லி வாக்கு பெற்று அரசியல் செய்கிறார்களோ அது பொய் என்ற எண்ணம் சிங்கள மக்களிடம் வந்துவிடுமோ என்ற அச்சம் இப்போது சிங்கள ஆட்சியாளர்க்கு தோன்றி இருக்கிறது.

சர்வதேச ராஜதந்திர அரங்கில் பல சறுக்கல்களை சந்தித்துவரும் சிங்கள பேரினவாதத்துக்கு இப்போது சர்வதேச சட்ட அரங்கிலும் ஏற்பட்டு இருக்கும் இந்த சறுக்கல் ஏராளம் மனோ ரீதியான பின்னடைவுகளை கொடுக்கும் என்பது திண்ணம். நிச்சயமாகவே.

ஆனாலும் இதிலிருந்து மீள்வதற்கான அனைத்து குத்துகரணங்களையும், விண்ணாணங்களையும் நிச்சயமாக சிங்களம் செய்ய எத்தனிக்கும் என்பதை எதிர்பார்த்தே இருக்க வேண்டும்.

எதிரி எந்த முனைவரைக்குமே செல்லக் கூடியவன் என்பதை புரிந்து தயாராக இருத்தலே விடுதலைக்கான ஒரு மக்கள் என்ற முறையில் நம் கடமையாகும்.

மூன்றாவதாக, இதனை இந்த தீர்ப்பின் இன்னொரு தரப்பான ஐரோப்பியஒன்றியம் எப்படி பார்க்கும், அல்லது இனி என்ன செய்ய போகும் என்று பார்க்கலாம். அதற்கு முன்பாக ஒருமுறை தீர்ப்பை நன்கு.... கவனிக்க. மிக நன்றாக ஊன்றி கவனித்தால் இந்த தீர்ப்பு என்பது ஒரு தற்காலிக தளர்வு என்பதே தெரிய வரும். அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இது கவனிக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஆரம்பித்ததை இந்த தீர்ப்பு ஆராயவில்லை. 2009க்கு பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஏற்படுத்துவதற்கு காட்டிய காரணங்களையே இந்த தீர்ப்பு கேள்விக்குரியவை ஆக்கி அதனாலேயே அது சரியாக ஏற்படுத்தப்படவில்லை என்று தீர்ப்பளித்திருக்கிறது.

எமது தேசிய விடுதலை அமைப்பின் மீதான பயங்கரவாத முத்திரையையோ, அதன்மூலம் ஏற்படுத்தப்பட்ட அநியாயமான தடையையோ இது கேள்விக்குரியதாக்கவில்லை..

அந்த வகையில் நாம் நினைத்தது நடக்காது போனாலும் கூட ஒருவகையில் இது ஒரு முகவுரை என்றே எடுக்கலாம்.இனிவரும் காலங்களில் இந்த தீர்ப்பை மேற்கோள்காட்டியே அடுத்த தளைகளும் அகற்றலாம் என்ற நம்பிக்கையை இது கொடுத்திருக்கிறது.

ஆனால் இப்போது அது முக்கியம் அல்ல.. இன்னும் மூன்று மாதத்துக்குள் இந்த தீர்ப்புக்கு அமைய மீண்டும் காத்திரமான காரணங்களை முன்வைத்து மீண்டும் தடையை ஐரோப்பிய ஒன்றியத்தின் சில நாடுகள் கோரும் என்றே நூறுவீதம் எதிர்பார்க்கலாம்.

சரி, இரண்டு சட்டமாணவர்களும், அவர்களுக்கு பினபுலமாக நின்ற ஓரிரு தகமையாளர்களும் தமது விடா முயற்சியால் ஏற்படுத்தி இருக்கும் இந்த சிறு இடைவெளியை, சிறு ஒளியை எப்படி நாம் தக்கவைக்க போகின்றோம்.

எப்படி இதனிலிருந்து மேலெழும்ப போகின்றோம் என்பதில்தான் எமது தேசியத்தின் இருப்புக்கான போராட்ட உயிர்ப்பு தங்கி இருக்கிறது.

வெறுமனே நாங்கள்தான் இதனை செய்தோம் நாங்கள்தான் இதனை செய்தோம் என்று அமைப்புகள் போட்டிபோட்டுக் கொண்டு குறுஞ்செய்திகளை விதைப்பதில் கவனம் செலுத்துவதை விடுத்து ஆணித்தரமான செயற்பாடுகளுள் இனிமேல் தன்னும் இறங்காதுவிட்டால் இந்த வெற்றியும் நிச்சயமாக காக்கா பறித்த வடையாக பறிபோய்விடும்.

உடனடி வேலைத்திட்டமாக இந்த தடையை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சிகளை நிறுத்தும்படி அந்த அந்த நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இந்த தடையை நீக்கும் மனுவுக்கு எதிராக நின்ற நாடுகளே மீண்டும் இந்த தடையை ஏற்படுத்த புதிய ஆதாரங்கள், காரணங்களை கொண்டு வருவார்கள். இங்கிலாந்து, அயர்லாந்து, நெதர்லாந்து நாடுகளே அவை.

இதிலும் குறிப்பாக இங்கிலாந்தின் ஆளும்-எதிர் கட்சிகளில் நீக்கமற நிறைந்து ஏராளம் தமிழர்கள் அரசியல் செய்கிறார்கள். தமிழ் வாக்கு வங்கி என்ற ஒரு பெரும் தேவை இருப்பதால் இந்த தமிழர்களையும் தமக்குள் உள்வாங்கி இங்கிலாந்தின் ஆளும்கட்சி, எதிர்கட்சி என்பன இருக்கின்றன.

அதுபோக, ஏராளம் தமிழர்கள் தமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒரு கெளரவ நிலை கருதியோ வேறு தேவைகள் கருதியோ நெருங்கிய தொடர்பில் இருக்கிறார்கள்.

இப்போது இவர்கள் எல்லோர் மீதும் வரலாறு ஒரு பெரும் கடமையை சுமத்தி நிற்கிறது.

மீண்டும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றுக்கு இங்கிலாந்து இந்த தடைநீக்க தீர்ப்பு எதிராக செல்ல கூடாது என்ற அழுத்தத்தை இவர்கள் பிரயோகிக்க வேண்டும்.

இங்கிலாந்து இதிலிருந்து விடுபட்டால் மற்றைய நாடுகள் இதில் பெரய அக்கறை காட்டமாட்டாது. அது மட்டுமல்லாமல் இதன் கூடியதாக இங்கிலாந்தின் தமிழ் அமைப்புகள் இன்னுமொரு கோரிக்கையையும் வைக்க வேண்டும்.

இந்த மாதம் 13ம்திகதி பிரித்தானிய பராளுமன்றில் பாலஸ்தீனத்தை ஒரு தேசமாக கருதி வாக்களித்த கட்சிகளிடம் தமிழர்களின்மீதான சிங்களபேரினவாத இனப்படுகொலையை தீர்மானமாக நிறைவேற்றும்படி கோரவேண்டும்.

வெற்றிபெறுவது எவ்வளவு முக்கியமோ அந்த வெற்றியை தக்கவைப்பது அதனைவிட மிகமிக முக்கியம்.

ஒரு தவம்போல இதனை செய்து முடித்து இந்த வெற்றியை நம் எல்லோர் கைகளிலும் தந்து இருக்கிறார்கள்.

என்ன செய்யபோகின்றோம்..வெறும் சந்தோசத்துடனும், உரிமை கோரல்களுடனும் முடித்து விட்டு சும்மா கிடக்க போகின்றோமா..இல்லை.. இந்த வெற்றியை தக்க வைக்க உழைத்து இதனூடாக பல கதவுகளை திறக்க வைக்க போகின்றோமா..

எல்லாமே நம் கைகளில்தான்.

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா



# கெடுப்பதொழி



பகுத்தறிவு படைத்த மனிதருள் மட்டும் உருவாகும் கெட்ட குணம் பிறரைக் கெடுக்கும் எண்ணங்கள், இதற்கு அடிப்படைக் காரணமாக மனிதருள் உண்டாகும் ஏற்றத் தாழ்வுகள் தான் முன் நிற்பதை அறிவோம். வாழ்வில் வசதி படைத்தவர்கள், வசதியில்லாதவர்களைக் கண்டு கொள்வதில்லை. இயற்கையாக தாழ்த்தப்படும் இம்மக்கள் தம்மை அறியாமலே வசதி படைத்தவர்கள் மீது பொறாமைப்படுவது இயல்பு. இத்தகைய பொறாமை சில பல கெட்ட எண்ணங்களையும் தூண்டிவிடும். அதனால் ஔவையார் கெடுப்பதொழி என இரண்டு வார்த்தைகளால் இங்கிக் கேட்கிறார்.

இன்றைய பொழுதுபோக்கு சாதனமாக விளக்கும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் அனேக காட்சிகளில், இழையோடும் பழிவாங்கும் அம்சங்கள், பார்ப்பவர்களின் மனதை படிப்படியாக பழிவாங்கும் குணங்களுக்கு அடிமைப்படுத்தி விடுமென்ற அச்சம் இப்போது பரவலாக உணரப்படுகிறது. இக்காட்சிகளில் வரும் சம்பவங்கள் வெறும் கற்பனையாக இருந்தாலும் இவை நடைமுறைக் கருத்துக்களை அடிப்படையாக வைத்தே புனையப்படுவதால் தொடர்ந்து பார்க்கப் பார்க்க, பார்ப்பவர்களின் மனதையும் கெடுத்துவிடுமென்பதால், ஔவையாரின் ஆசைப்படி கெடுப்பதொழியென இக்காட்சிகளின் தயாரிப்பாளர்களைக் கேட்காமலே, ஒருவரின் விருப்பத்துக்கு மாறாக, இன்னுமொருவர் மீது உடலையோ, உள்ளத்தையோ கெடுதல் நினைப்பது குற்றவியல் சட்டங்களுக்கு உட்பட்டதென மனித உரிமைச் சாசனம் வெளிப்படையாகக் கூறினாலும், கற்பளிப்புகளும், கொலைகளும் தினசரி நடப்பதை கிடைக்கும் செய்திகள் மூலம் அறிகிறோம். இதற்கு மூல காரணமாக கெட்ட எண்ணங்களை ஒழித்துவிடு என ஔவையார் கேட்பதில் தவறில்லையே.

**தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் காட்சிகளில் பழிவாங்கும் அம்சங்கள், பார்ப்பவர்களின் மனதை படிப்படியாக பழிவாங்கும் குணங்களுக்கு அடிமைப்படுத்தி விடுமென்ற அச்சம் இப்போது பரவலாக உணரப்படுகிறது.**

சமீபகாலத்தில் உருவாகி விடும் இனங்களுக்கிடையே காணப்படும் சண்டைகளை ஊன்றிக் கவனித்தால், இதற்கு அடிப்படையாக அமைவது பொறாமைக் குணமென்றால் அது தவறாகாது. ஒரு இனம், மற்ற இனத்தை விட மேலோங்கி வளர்ந்துவிடக் கூடாதென்ற கெட்ட எண்ணமே இன்று உலகை ஆட்டிப்படைக்கும் சச்சரவுகளுக்கு மூல காரணமாக அமைவதை எவரும் மறுக்க முடியாது. இதற்கு நல்ல உதாரணமாக மத்தியதர நாடுகளில் அலைமோதும் அடங்காத போர்ச்சூழல், இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. ஆகவே கெடுப்பதொழி.

# கொலைகளைத் தூண்டும் தொலைக்காட்சி

தொலைக்காட்சி திரைகளில் காணும் காட்சிகளில் பொழுதுபோக்காக மகிழ்ச்சியைத் தரும் காலம் மாறி, கொலைகளைச் செய்யும் செயல்களுக்கு தூண்டப்படுவதை சமீபத்தில் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

16 வயதே நிரம்பிய ஸ்டீவன் மைல்ஸ் என்ற இளைஞன் தனது பொழுதுபோக்கை தொலைக்காட்சியில் ஒளிபரப்படும் தொடர் நாடகங்களை பார்ப்பதுண்டு. இவனைக் கவர்ந்த டெக்ஸர் (dexter) தொடர் நாடகம், அந்தக் கதையில் நடமாடும் நாயகனைப் போல தன்னை அறியாமல் மாறி விட்டதை அவனால் உணர முடியவில்லை. இவனது மன நிலைமையை உணர்ந்து கொண்ட, அவனது பள்ளித் தோழியான எலிசபெத் தொமர், இவனது நடவடிக்கைகளைக் கண்டு அதிர்ந்து அவனை நல்வழிக்குக் கொண்டு வர முயன்றுள்ளான் அவருடைய சக தோழிகளுடைய புத்திமதிகளையும் கேளாமல் இவனை நல்வழிப்படுத்த தனது நட்பைத் தொடர்ந்துள்ளான்.

டெக்ஸர் நாடகத்துடன் ஐக்கியப்பட்டுவிட்ட மைல்ஸ் ஒரு நாள் தனது படுக்கையறைக்குள்ளேயே அழகிய அந்தத் தோழியை கை, கால்களை துண்டு துண்டாக வெட்டி பொலித்தீன் பையினுள் மூடிக்கட்டி கட்டிலுக்கடியில் ஒழித்து வைத்ததன் அழுகிய நாற்றம் அயலில் உணரத் தொடங்க, இவனது கொலை அம்பலமானது கொலையை ஒப்புக் கொண்ட மைல்ஸ்க்கு 25 வருட சிறைத் தண்டனையை கில்பேர்ட் நீதிமன்றம் சமீபத்தில் விதித்தது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

தான் விரும்பிய காதலனை அடைய தடையாக இருந்த 60 வயது நிரம்பிய மீனா என்ற தாயை வெளிநாட்டிலிருந்து தருவித்த கொடிய நஞ்சான (Abrin) மூலம் குளிர்பானத்துடன் கலந்து கொலை செய்ய எத்தனித்த அவருடைய மகளான 37 வயது நிரம்பிய குன்றால் பட்டேல் கொலை செய்ய எத்தனித்த குற்றத்திலிருந்து தண்டனையை நவம்பர் 7ஆம் திகதி வரை காத்திருப்பதாக லண்டன் சவுத்வார்க் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்தக் கொலை எத்தணிப்புக்குத் தூண்டுதலாக இருந்த Breaking bad என்ற தொலைக்காட்சி இந்த இளம் பெண்ணின் மூளையை எவ்வளவு தூரம் கெடுத்துள்ளதை உணர்ந்து கொண்டால், விடிய விடிய தொலைக்காட்சிகளையும், வீடியோ விளையாட்டுக்களையும் கண்டு களிக்கும் இளம் பிள்ளைகளை ஓரளவுக்காவது கட்டுப்படுத்த பெற்றோர்கள் முன்வரவேண்டுமென அன்பாக வேண்டுகிறோம்.

# இதய ஆரோக்கியம்

தினமும் கிடைக்கும் மரணச் செய்திகளில் கூடுதலாக இதயம் சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தான் அதிகம். திடீரென உண்டாகும் நெஞ்சு வலியைக் குணப்படுத்த, உடனடியான சிகிச்சையை அளிக்காது போவதினால், மரணம் சம்பவிக்கும் எண்ணிக்கைதான் ஏராளம் அவரவர் உடலின் ஆரோக்கியத்தை அவரவர் தான் கண்காணிக்க வேண்டியது அவசியம். ஏனெனில் அவரவரது உடலின் ஆரோக்கியத்தை அந்த உடலுக்குரியவரால் தான் உணர முடியும். இதனால்தான் என்னவோ யாழ். கோண்டாவிலுள்ள ஒரு சித்தரின் கல்லறையில் 'உன்னையே நீ அறிவாய்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் பெரிதும் வளர்ந்துவிட்ட இக்காலகட்டத்தில் உடலின் ஆரோக்கியத்தை கண்காணிக்க பல மருத்துவ உபகரணங்கள் வந்து விட்டன. கைக்கடிகாரம் போன்ற (smart watch) உடலின் ஆரோக்கியத்தை கண்காணிக்க (Fitness monitor) போன்ற வரிசையில் அடுத்தபடியாக இரத்த ஓட்டத்தையும், இதய ஆரோக்கியத்தையும் கண்காணிக்க தோல் இணைப்பு (skin patch) கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கடந்த வாரம் வெளியாகியுள்ள (natural common cartons) அறிக்கையின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். 24X7 மணி நேரமும் தோலின் மேல் இணைக்கப்பட்டுள்ள இந்த மெல்லிய 5 சென்ரிமீற்றர் சதுர தோல் இணைப்புக்குள் 3600 Thomochromic திரவப் படிகம் அடக்கப்பட்டுள்ளது. உடலினுள் ஓடிக் கொண்டிருக்கும் இரத்தத்தின் உஷ்ண மாற்றத்தைப் பொறுத்து, இத்திரவப் படிகம் தனது நிறத்தையும் மாற்றிக் கொள்ளும் மாற்றமடையும் நிறத்தைக் கொண்டு, இதயத்தின் ஆரோக்கியத்தை கண்காணிக்க முடியுமென மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளார். இதயத்தின் சீரான இரத்த ஓட்டத்தைப் பேணவே, இத்தகைய மருத்துவ உபகரணங்கள் உதவப் போவதாக அறிக்கைகள் கூறுகின்றன. வருமுன் காப்பதே வைத்திய நெறிமுறை என்பதால் இப்புதிய கண்டுபிடிப்பு, மாரடைப்பால் உண்டாகும் மரண எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்குமென நம்பலாம்.







# எல்லாரும் கொண்டாடுவோம்

தீபாவளி வருகின்றது எல்லோரும் கொண்டாடுவோம் என்று தான் சொல்கிறேன். அதனை செத்த வீடாகவோ, அல்லது திருநாள் விழாவாகவோ கொண்டாடுவோம். செத்தவீட்டையும் விழா நாளாக கொண்டாடும் மரபு நமக்குண்டல்லவா?

அப்போது அகால மரணங்கள் அதிகம் நிகழவில்லை. தற்கொலையோ, விபத்துக்களால் நிகழ்ந்த மரணங்களோ மிகமிகக்குறைவு. இளைய வயதில் சிறகுகளை உதிர்த்து மண்ணில் வீழ்ந்தவர்கள் எவருமில்லை. சாவு காலம் ஆகித் தான் அநேகமாக நேர்ந்தது. இந்த உடலை வைத்து, உலகிற்கு பாரமாக இருக்கக்கூடாது என்று “ஆண்டவனே என்னை அழைக்க மாட்டாயா ?” என்று கெஞ்சியும், நேர்ந்தும் போனவர்களே அதிகம்.

அதனால் அந்த இழவு வீடு கொண்டாட்டத்திற்கு உரியதாயிற்று. ஒருசிலர் தம் அன்புக்குரியவர்களின் சாவு குறித்து துக்கம் காட்டினார்கள். ஒரு நாள், இருநாள் துக்கம் கொண்டாடப்பட்டது. பிறகு அந்தியேட்டி நாள் வரைக்கும், அந்தியேட்டி முடிந்து இரண்டு மூன்று நாட்களுக்கும் கூட நெருங்கிய உறவினர் இழவு வீட்டிலிருந்து துக்கத்தையும் கொண்டாட்டம் ஆக்கினார்கள்.

சேர்ந்து சமைப்பது, சேர்ந்து உண்பது, சாமம் சாமமாக இருந்து கதை பறைவது, காட்ஸ் அடிப்பது, அத்துக்க வீட்டில் இல்லாத உறவினர்கள் ‘பட்டினிப் பண்டம்’ என்று காலைக்கும், மதியத்திற்கும், இரவுக்கும் என்று சொல்லி தாம் சமைத்த உணவை அனுப்புவது, எட்டுச் செலவு, துடக்குக் கழிவு என்று சிறு சமையலும், அந்தியேட்டி என்று பெரும் சமையலும் செய்து பந்தி விரித்து வாழை இலை வைத்து... என்று கொண்டாட்டம் நிகழும். இடையிடை ஒரு முதிர் பெண் அல்லது முதியவர் சொல்வார் “அடேய் பெடியள், இது செத்த வீடு நடந்த வீடடா, ஆட்டம் பாட்டத்தை குறையுங்கோடா, அயலட்டைச் சனங்கள் என்ன நினைக்கப் போகுதுகள்.” அவர் சொல்லி ஐந்து நிமிடத்துக்கு ‘ஆட்டம் பாட்டம்’ நின்றாலே அது ஆச்சரியம்.

சமீபத்தில் நண்பர் ஒருவருடன் உரையாடியபோது, “தீபாவளி வரப்போகுது, என்ன செய்யப் போகிறாய்?” என்றேன். “இது நரகாசுரன் எனும் திராவிடன் அழிந்த நாள், இதை திராவிடராகிய நாங்கள் எவ்வாறு கொண்டாட முடியும்?” என்று கேட்டான். நான் ஒன்றுமே பறையவில்லை. இப்போது விவாதிப்பதற்கான வலு என்னிடமில்லை. என்னிடம் மாற்றம் ஒன்று நிகழ்கிறது. முதிர்கின்றேனோ அல்லது பக்குவப்படுகின்றேனோ அல்லது பரதேசியாகப் போகும் எண்ணம் உண்டோ எதுவும் எனக்குத் தெரியாது.

இப்பத்தி எழுதுகிற ***ஒரு பேப்பர்*** இன் முகப்பில் கூட ‘நரகாசுரனுக்கு எம் வீர வணக்கம்’ என்று வழமையாக தீபாவளி இதழுக்கு வருவது போல இம்முறையும் வரலாம். இவையெல்லாம் ‘தமிழர்களாகிய நாம் தீபாவளி கொண்டாடல் தகாது’ எனும் கருத்து நிலையில் எழுந்தவையே. அதனால் தான் முதல் பந்திகளில் ‘செத்த வீடு கொண்டாடுவது’ பற்றிக் குறிப்பிட்டேன். என்ன செய்தாவது கொண்டாடுவோம்.

மீண்டும் சொல்கின்றேன் கொண்டாடுவோம். அது மிக முக்கியமானது. எல்லோரும் கொண்டாடுவோம். எல்லாவற்றையும் கொண்டாடுவோம். புலம்பெயர் தேசங்களில் நத்தார் தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றோம் அல்லவா? அதற்குள் இருக்கக்கூடிய ‘அரசியல்’ பற்றி எங்களுக்கு ஏதும் கேள்வி உண்டா? நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் அதற்குள் உள்ள ‘அரசியலை’ புரிவோம். ஆனால் எதன் பெயரிலாவது அதனைக் கொண்டாடுவோம்.

எதனையும் கொண்டாடிப் பாருங்கள். எமது இரு விலா எலும்புகளிடையேயும், இரு சிறகுகள் முளைத்ததை உணர்வோம். சிறகு அடித்து வானத்தில் நீந்தும் சுகத்தை உணராதார் மனிதரல்லர்.

எனது அப்பா ‘அரசியல்’ பார்த்து தீபாவளியைக் கொண்டாடாமல் விட்டிருப்பாரானால், சித்திரை வருடப் பிறப்பைக் கொண்டாடமல் விட்டிருப்பாரானால், இப்படிப் பலவற்றை கொண்டாடாமல் விட்டிருப்பாரானால் எனது பாதி நினைவுகள், பாதி அனுபவங்கள், பாதி உணர்வுகள் அவை தரும் சுகங்கள் யாவும் என்னை விட்டு பறந்து போயிருக்கும். நல்ல காலம் அப்பாவுக்கு அந்த ‘அரசியல்’ இல்லாமலே போயிற்று. அப்பாவுக்கும், அம்மாவுக்கும் பிள்ளைகளின் கொண்டாட்டம் ஒன்றே குறியாக இருந்தது.

என் மைந்தர்களையிட்டு அந்தவாறு வேதனையடைகிறேன் நான். பிற்காலங்களில் பிறந்தநாளுக்கு ‘கேக்’ துண்டு வெட்டவும் மறித்துவிட்டேன் அவர்களை. வரட்டுத்தனமான ‘அரசியல்’ ஒன்று அதில் எஞ்சியிருந்தது. இப்பொழுது என் மைந்தர்களுடன் ‘பழங்கதைகள்’ பேசுகின்றேன். அப்போது அவை தந்த இன்பங்களைச் சொல்லி மகிழ்கின்றேன். அந்த இன்ப ஊற்றுக்களை அடையாது விட்ட அப்பா, அம்மாவிற்கு என் மேலான நன்றி.

## இரவி அருணாசலம்

### எழுதுவது என்னவெனில்

மாரி பொழிந்து, மனம் குளிர்ந்து, ஈரம் நிலத்தில் சுவறி, ஊர் பச்சையாகி, இருந்த பொழுதொன்றில் தீபாவளி வருகின்றது. தீபாவளிக்கு முன்னர் ஆசிரியர் பணி புரிகின்ற அப்பாவுக்கு எப்பொழுது சம்பளம் வருகின்றதோ அதற்கு அடுத்த நாள் யாழ்ப்பாணத்துப் பட்டினம் செல்ல பஸ் ஏறுவோம். அந்த வருடத்திற்கான அதி சிறந்த உடுப்பை எடுப்பார் அம்மா. அந்த நாளில் சிவாஜி கணேசன் ஏதோ ஒரு திரையில் தோன்றாமல் இருந்ததில்லை. அத்திரையரங்கில் நான்கு நுழைவுச் சீட்டுகளுக்கு காசு கொடுப்பார் அப்பா. அந்த மழைக் குளிருக்குள்ளும் தீபாவளிக்கான காலை எப்படியோ வேளைக்கு விடிந்து விடுகிறது. குளிர் என்றால் குளிக்க முடியுமா ? ஆனால் புது உடுப்புப் போட வேண்டுமல்லவா ? போட்ட புது சேட்டில் கொஞ்சம் மஞ்சள் கீறி, குசினிக்குள் போனால், நல்லெண்ணையில் பொங்கிய குண்டுத் தோசை இருக்கின்றது, தாளித்த சம்பலுடன்.

புது உடுப்பை ஊருக்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் காட்ட, ஒழுங்கையால், வீதியால் ஒரு நடை. ஐப்பசிக்கான அடை மழை அப்பொழுது பொழிந்ததாக ஞாபகம் இல்லை. ஆனால், இடையிடையே சிணுங்கிப் பார்க்கும் வானம். மழையின் ஒரு துளி புது சேட்டில் பட்டாலும், ‘கரம்பன்’ பிடித்துவிடும் என்று அஞ்சி நாங்கள் படும் பாடு இருக்கிறதே? மரத்தின் கீழும் ஒதுங்க முடியாது. அது ‘இரண்டு’ மழையல்லவா தரும். மதியம் வீடு வந்தால் கிடாய் இறைச்சிக் கறியுடன் சாப்பாடு, முடிந்தபின் கையை ஊன்றிக் கழுவவும் மனம் வராது. இறைச்சி வாசம் போய் விடுமல்லவா? பிறகு அடுத்த புது உடுப்பைப் போட்டு அடுத்த ஊர் உலாத்து. இரவு வரும் வரைக்கும் தீபாவளி இனித்தபடி இருக்கும். வராமலே போய் இருக்கலாமோ அந்த வசந்தம்? என்ற ஏக்கம் தலை தட்டுகிறது. நண்பர்களே, நமக்குள் ‘அரசியல்‘ அரசியலாகவே இருக்கட்டும். அதனை நம் பிள்ளைகளுக்கு ஓத வேண்டிய தேவையும் நேரமும் வரும் போது ஓதுவோம். அதுவரை எல்லோரும் எல்லாவற்றையும் கொண்டாடுவோம்.

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ புலி அகற்று அரசியல் முன்னெடுத்தவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்

இந்தியாவின் சில்லறைக் கைக்கூலிகளாக இருந்து கொண்டு நிலத்திலும் புலத்திலும் புலி அகற்று அரசியல் செய்து கொண்டிருந்தவர்களும் ரஃபல்கர் சதுக்கத்தில் புலிக் கொடி ஏற்றக் கூடாது என அடம் பிடித்த கையாட்களும் எனி என்ன செய்யப் போகின்றார்கள். மக்களாட்சி வழியில் போராட வேண்டும் தடை செய்யப் பட்ட இயக்கத்தின் கொடி வேண்டாம் எனப் போலிக் கூச்சல் போட்ட அல்லக்கைகள் எங்கு தமது மூஞ்சியைக் கொண்டு போய் வைக்கப்போகின்றார்கள்.

நடிப்பிற்காக புலிக் கொடியைக் கையில் வைத்துக் கொண்டு அலைபவர்கள் காட்டில் இனி மழைதான்.

## ■ நாட்டைப் பிரிச்சுப் போட்டாங்களோ?

வடக்குக்கிழக்கிற்கு இனி வெளிநாட்டு கடவுட்சீட்டு வைத்திருப்போர் இலங்கை அரசிடம் ‘விசா’ பெற்றுக் கொண்டுதான் போக வேண்டும் என்று ஓட்டைவாய ராஜபக்ச உத்தரவு போட்டுள்ளாராம். ஒரு நாட்டுக்கு ஒரு விசா தான் எடுக்க வேண்டும்.

இரு விசாக்கள் எடுப்பதென்றால் இரண்டு நாடுகளோ?

## ■ அம்மாவை விடுவிக்க தோழி மீது எல்லாப் பழியும்

பரப்பன அக்ரஹாரத்தில் இருந்து அம்மாவை மீட்டு பார்ப்பன அக்ரஹாரத்திற்கு அவரை மீளவும் இணைக்கும் முயற்ச்சியில் சின பூனூல்களும் அவர்களின் ஊடகங்களும் தீவிர முயற்ச்சி செய்கின்றன.

அம்மாவையும் தோழியையும் பிரித்து, அம்மாவின் குற்றங்கள் எல்லாவற்றையும் தோழியில் சுமத்தி, அம்மாவிற்குகாஞ்சியில் பாவ மன்னிப்புப் பெற்று நரேந்திர மோட்சமடைய வைத்து மீண்டும் தமிழ்நாட்டில் பூனூல் ஆட்சியை நிலை நிறுத்துவதே அவர்களின் நோக்கமாகும்.


## ■ இலங்கைக்கு வேறு ஈராக்கிற்கு வேறு

அமெரிக்காவுடன் இணைந்து செயற்படும் குர்திஷ் போராளிகளிடையே சிறார்கள் உண்டு, தற்கொடைத் தாக்குதல் உண்டு. ஆனால் அதையெல்லாம் யாரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் குர்திஷ் போராளிகள் மீண்டும் குத்து வாங்குவதற்கு தங்கள் முதுகுகளைத் தாயாராக வைத்திருக்க வேண்டும்.

குர்திஷ் மக்கள் ஏற்கனவே பல தடவைகள் மேற்குலகை நம்பி ஏமாந்து விட்டனர்.

*- ஊருளவாளி*

ஊருளவாரியோட கதைக்க - facebook.com/orupaper கண்காணிக்க @orupaper






# 'பயங்கரவாதத்தினை' எதிர்கொள்வது என்ற போர்வையில் ஒடுக்கப்படும் ஊடக சுதந்திரம்

## சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் மாநாடு








ஒக்டோபர் பதினோராம் திகதி லண்டனில் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு இலங்கைத் தீவில் போருக்கு பின்னரான காலத்தில் ஜனநாயகப்படுத்தல் முயற்சிகளில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்வதற்கான ஒரு களமாக அமைந்திருந்து. இலங்கையிலிருந்தும், ஐரோப்பா மற்றும் வட அமெரிகாவிலிருந்து வந்திருந்த கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள் இதில் கருத்துரை வழங்கியதுடன், கலந்து கொண்டவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்கள்.

மேற்கு லண்டன் ஈலிங் பகுதியில் உள்ள வெஸ்ற் லண்டன் பல்கலைக்கழ பிரதான அரங்கத்தில் நடைபெற்ற இம்மாநாடு காலை பத்து மணிக்கு இளம் ஊடகவியலாளர் அபிநயா குமரகுருநாதனின் தலைமையில் ஆரம்பமானது. விவரணத் திரைப்பட தயாரிப்பாளர் ரூபினி செல்வநாதன் மங்கல விளக்கேற்றி மாநாட்டினை தொடக்கி வைத்தார். செய்தியாளர் ஒன்றியத்தின் பணிப்பாளர் கோபி இரத்தினத்தின் வரவேற்புரையை தொடர்ந்து காலை அமர்வு ஆரம்பமாகியது. காலை அமர்வினை கென்ற் பல்கலைக்கழக விரிவுரையாளர் மதுரா இராசரத்தினம் நெறிப்படுத்தினார்.

### பாக்கியசோதி சரவணமுத்து

காலை அமர்வின் சிறப்புரையினை இலங்கை மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி வழங்கினார். அவரது உரையில், பயங்கரவாதத்திற்கான போர் என்பது இலங்கையில் ஜனநாயகத்தினை கடைப்பிடைப்பதில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார். இன்றைய தகவல் தொழிநுட்பம் இந்த ஒடுக்குமுறைகளுக்குசவால்விடுக்கும்வகையில்அமைந்துள்ளமையையும் நேர்மறையான விடயமாகப் பார்க்க முடியும் எனவும் தெரிவித்தார்.

ஜெனிவா மனிதவுரிமைச் சபையின் விசாரணைகள் பற்றி குறிப்பிட்ட பாக்கியசோதி, இது தவறான வெளிவிவகாரக் கொள்கையின் விளைவு என இலங்கையின்ஆட்சியாளர்கள் கருதுகிறார்களே தவிர, நடந்தவை பற்றிய பொறுப்புக்கூறல்பற்றிஅவர்கள்அக்கறைப்படவில்லை எனத் தெரிவித்தார்.

சிறிலங்காவில் ஊடகத்துறை மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் உதாரணத்துக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய பற்றி ஒரு கார்ட்டுன் படத்தைக் கூட வரையமுடியாதளவு கட்டுப்பாடுகள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

அளுத்கமவில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட தாக்குதல்கள் நன்கு திட்டமிடப்பட்ட வகையில் நடாத்தப்பட்டதாகவும் அரசாங்கத்தின் ஆதரவின்றி இத்தகைய தாக்குதல்களை மேற்கொண்டிருக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

### வாலிட் அல் சாகுவாப்

பாக்கியசோதி அவர்களைத் தொடர்ந்து சுவீடன் Orebro பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி வாலிட் அல் சாகுவாப் அவர்களது உரை காணொளி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது. அரசாங்கங்கள் எவ்வாறு தகவல்கள் மக்களைச் சென்றடைய முடியாது தணிக்கை செய்கின்றன என்பது பற்றி அவரது உரை அமைந்திருந்தது. யேமன், எகிப்து போன்ற நாடுகளில் அந்நாட்டு அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை நடவடிக்கைகள் பற்றியும் அவர் விபரித்தார்.

### இப்ரஹிம் சேகா ஷோ

சிரலியோன் நாட்டில் பத்திரிகையாளரக பணியாற்றியவரும் தற்போது நொதம்பிரியா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றுபவருமான இப்ரஹிம், தனதுரையில் ஜோர்ஜ் புஷ் இனால் அறிமுகப்படுத்தப்பட்ட 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற அணுகுமுறையை உலகெங்கும் சர்வாதிகாரிகளான நாட்டு தலைவர்களால் எவ்வாறு தவாறகப் பயன்படுத்தப்படுகிறது என்பதனை சிரலியோனின் முன்னைய அரசாங்கம், சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கங்கம் ஆகியவற்றை உதாரணமாகக் கொண்டு விளக்கினார்.

### ஜே. எஸ். திசைநாயகம்

அமெரிக்காவிலிருந்து வந்திருந்த விருது பெற்ற ஊடகவியலாளர் திசைநாயகம் தனது உரையினை சிறிலங்காவில் இது போன்ற கருத்துப் பரிமாற்றத்தைச் செய்ய முடியாமையினாலேயே இங்கு நாங்கள் கூடியிருக்கிறோம் என ஆரம்பித்தார். தமிழ் ஊடகங்கள் முக்கியமான வகிபாகத்தை கொண்டிருப்பதனால் அவற்றின் மீது சிறிலங்கா அரசாங்கம் ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலம் பற்றிக் குறிப்பிட்ட அவர், தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தை ஒரு மந்திரம் போன்று சிலர் உச்சரிக்கிறார்கள். ஆனால் அது எந்த வகையிலும் போதுமானதாக இல்லை என்பதனை அவர்கள் விளங்கிக் கொள்ள மறுக்கிறார்கள் என்றார்.

### குருபரன் குமாரவடிவேல்

காலை அமர்வில் இறுதியாக உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரியாளர் குமாரவடிவேல் குருபரன் பயங்கரவாத தடைச்சட்டம் ஆறாம் திருத்தச் சட்டமூலம் என்பவை எவ்வாறு ஊடக சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் கட்டுப்படுத்துகின்றன என்பதனை விபரித்தார். தற்போது பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலத்தை எதிர்ப்பவர்களைக்கூட தீவிரவாதிகள் என அழைக்கப்படுகிற நிலை தோன்றியுள்தாகத் தெரிவித்த அவர் தமிழ் ஊடகங்களும் செயற்பாட்டாளர்களும் அவர்களது கோரிக்கைகளின் நியாயத்தன்மையிட்டு நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

காலை அமர்வு கேள்வி நேரத்துடன் நிறைவு பெற்றது.

மாலை அமர்வில் நோர்வே பல்கலைக்கழப் பேராசிரியர் ருனே ஒட்டசன், அயர்லாந்திலிருந்த வந்திருந்த கலாநிதி யூட் லால் பெர்னான்டோ, லண்டன் பல்கலைக்கழக விரிவுரையாளர் வினோதினி கணபதிப்பிள்ளை, இளம் செயற்பாட்டாளரும் சுயாதீன ஊடகவியலாளருமான நிர்மானுசன் பாலசுந்தரம், இளம் செயற்பாட்டாளரும் தமிழ் கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவருமான மரியோ அருள்தாஸ் ஆகியோரும் உரையாற்றினார்கள். மே17 இயக்க இணைப்பாளர் திருமுருகன் காந்தி அவர்களது உரை காணொளி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது. தினக்குரல் ஞாயிறு பதிப்பின் ஆசிரியர் பாரதி இராசநாயகத்தின் உரை வாசித்தளிக்கப்பட்டது.

(மாலை அமர்வு பற்றிய விபரங்கள் அடுத்த ஒரு *ஒரு பேப்பர்* ல் பிரசுரிக்கப்படும்)

## பொங்கி வாடா...

தீயெழுந்து அடுப்பினிலே
பாலைச் சுட்டால்
சினந்தெழுந்து
பால்பொங்கித் தீயணைக்கும்!
நீ உவந்து செய்கின்ற
பொங்கல் வெற்று
நிகழ்வன்று....

வீரத்தின் பாடம் கண்டாய்!
தாயிழந்த சேயர்போல் தமிழர் ஈழம்
தனையிழந்து சினங்கொண்டு
பொங்குகின்றார்!
பாய்! சிவந்து களமாடு!
பொங்கி வாடா!
பகைநொறுக்கித் தமிழீழ
மண்ணை மீட்போம்!

திரைப்படத்தின்
மார்புகளைத் தின்னும் கண்ணால்
தீந்தமிழ்த்தாய் ஈழத்தில்
சாவின் வாயில்
இரைப்படப்போய் விழும்புலிகள்
களத்தின் புண்கள்
இருந்த மலை மார்புகளைப்
பார்ப்பாய்! ஆங்கே
நிரைப்பட நாளும் களத்தை
நிறைத்தார் வீரர்!
நீ என்னடா இங்கே கிழித்தாய்?
வீழ்ந்து
தரைப்பட நீ கிடக்கின்றாய்!
பொங்கி வாடா!
தமிழீழம் மலர உடன் ஆணை
ஏற்போம்!

நேற்றுவரை
உனக்குதவி நின்ற மாட்டை
நேர்நின்று மோதுகிறாய்....
தமிழீழத்தில்
நாற்றிசையும் குண்டுகளால்
உன்இனத்தை
நாளும் அழிக்கின்றார்....
நீ மோதினாயா?
போற்று தமிழ்
இனமானம்! தமிழனாய் நீ
பொங்கல் செய்!
விழித்தெழுவாய்!
வீறுகொண்டு
காற்றெழுந்தால் புயலாகும்!
பொங்கி வாடா!
களம் காண்போம்!
தமிழீழம் காப்போம்!
காப்போம்!!

- காசி ஆனந்தன்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from concept to design

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 32 வயது, 5'6" Permanent residence in uk working in a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5176

2. 52 வயது, 5'6" Europe citizen in uk working in a medical sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5175

3. 33 வயது, 5'6" Permanent residence in uk graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5172

4. 32 வயது, 6'2" Permanent residence US graduate working in a company graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5164

5. 38 வயது, 5'9" Australian citizen doctor divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5163

6. 37 வயது, 6'2" Permanent residence in uk working in NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5159

7. 28 வயது, 5'5" British citizen graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5156

8. 35 வயது, 5'9" student visa living in UK for 10 years eligible for PR தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5151

9. 27 வயது, 5'7" graduate student visa working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5149

10. 31 வயது, 5'6" Entrepreneur visa self-employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5146

11. 30 வயது, 5'9" 3 years temporary visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5145

12. 37 வயது, 5'4" British citizen store manager in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5143

13. 30 வயது, 6'0" British citizen graduate working in a company as a manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5140

14. 33 வயது, 5'10" Graduate asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5136

15. 28 வயது, 5'9" British citizen graduate financial analyst தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5135

16. 26 வயது, 5'8" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5133

17. 30 வயது, 5'8" Graduate student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5132

18. 41 வயது, 5'6" Graduate british citizen divorced working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816

19. 36 வயது, 5'10" British citizen graduate working in IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3714

20. 30 வயது, 5'6" Business visa graduate working in a private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5131

21. 34 வயது, 5'8" permanent residence in uk manager working in a private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5129

22. 34 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5127

23. 30 வயது, 5'6" Permanent residence in uk graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5119

24. 31 வயது, 6'0" student visa in uk doing a business management course தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5116

25. 29 வயது, 5'6" Canadian citizen graduate working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5115

26. 41 வயது, 5'8" Permanent residence in france working in a hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4914

27. 34 வயது, 5'9" Graduate work permit visa working in a private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4894

28. 36 வயது, 5'10" Divorced, EU citizen accountant working in a private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5113

29. 30 வயது, 5'8" Permanent residence in uk teacher தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5112

30. 32 வயது, 5'11" EU citizen working in a private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5105

31. 27 வயது, 6'0" born and brought up in uk graduate working in a private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5103

32. 39 வயது, 5'10" work permit visa working in a private company as a accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5101

33. 30 வயது, 5'8" Permanent residence engineer working in a private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4927

34. 23 வயது, 5'2" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5072

35. 33 வயது, 5'5" British citizen working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3291

36. 35 வயது, 5'8" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5095

37. 28 வயது, 5'10" student visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5084

38. 27 வயது, 5'7" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5083

39. 33 வயது, 5'5" working as a sales assistant permanent residence in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3696

40. 38 வயது, 5'8" British citizen divorced working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3663

41. 40 வயது, 5'10" British citizen graduate property investor in a private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1199

42. 40 வயது, 5'7" British citizen graduate self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5080

43. 44 வயது, 6'0" British citizen divorced working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5071

44. 40 வயது, 5'11" Holland citizen accountant working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5068

45. 33 வயது, 6'2" Graduate, PR in Canada, Working in IT field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5058

46. 28 வயது, 5'3" British citizen, Woking in a retail company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5056

47. 36 வயது, 5'6" Graduate, PR in UK, working as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5051

48. 51 வயது, 5'5" Divorced, Denmark Citizen, Working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5046

## மணமகன் தேவை

1. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5169

2. 33 வயது, 5'4" British citizen graduate student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5162

3. 30 வயது, 5'7" British citizen chatered accountant in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5158

4. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5154

5. 39 வயது, 5'3" German citizen graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

6. 29 வயது, 5'8" British citizen graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

7. 25 வயது, 5'3" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5126

8. 33 வயது, 5'7" Canadian citizen graduate working in a mediacal sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5125

9. 47 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5117

10. 25 வயது, 5'3" British citizen graduate working in a private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

11. 30 வயது, 5'4" German citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5089

12. 29 வயது, 5'5" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5086

13. 49 வயது, 5'3" british citizen divorced working as a cashier தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5077

14. 41 வயது, 5'5" british citizen divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5075

15. 29 வயது, 5'3" british citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5073

16. 33 வயது, 5'0" Graduate, Working in Government sector in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5049

17. 24 வயது, 5'3" british citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5070

18. 25 வயது, 4'7" asylum seeker in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5065

19. 42 வயது, 5'2" British citizen divorced living with 2 children தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5064

20. 25 வயது, 5'5" British citizen, looking after the business தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5059

21. 26 வயது, 5'3" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5054

22. 28 வயது, 5'2" Graduate, British citizen, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5053

23. 21 வயது, 5'3" Residing in Srilanka, studied computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5052

24. 24 வயது, 5'2" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5047

25. 27 வயது, 5'0" Residing in Srilanka, Completed Olevel தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5042

26. 37 வயது, 5'2" Graduate, Working as a Teacher in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5012

27. 35 வயது, 5'4" Graduate, Working as a Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4827

28. 31 வயது, 5'5" German citizen lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5034

29. 35 வயது, 5'6" Canadian citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5020

30. 40 வயது, 5'4" Graduate, Malaysian Nationality ,PR in Australia, Working as a Doctor in Auatralia தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5010

31. 27 வயது, 5'6" Graduate, Australian citizen, Working in a Medical Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5006

32. 37 வயது, 5'5" Residing in Srilanka, doing computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5005

33. 21 வயது, 5'1" Graduate, Canadian Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5003

34. 33 வயது, 5'2" Graduate, Canadian citizen, Working at Ministry of Health தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5000

35. 29 வயது, 5'2" Graduate, Residing in srilanka, working as AG Officer of Land Section தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4999

36. 22 வயது, 5'0" Residing in Sri Lanka, doing computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4998

37. 40 வயது, 5'5" Divorced, France citizen , Self-employed தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4996

38. 37 வயது, 5'2" Residing in Sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4992

39. 33 வயது, 5'3" Divorced, Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4991

40. 18 வயது, 5'4" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4989

41. 26 வயது, 5'1" Graduate, Canadian citizen, Working in an insurance company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4986

42. 28 வயது, 5'7" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4980

43. 36 வயது, 5'2" Graduate, UK PR, working as a Music teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4977

44. 33 வயது, 5'1" Graduate, Residing in India, working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4976

45. 32 வயது, 5'0" Permanent residence in uk divorced accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4961

46. 41 வயது, 5'5" British citizen divorced working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4960

47. 34 வயது, 5'4" Graduate, British citizen working as a Business Manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4957

48. 30 வயது, 5'8" Canadian citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4941

49. 33 வயது, 5'4" temporary visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

50. 51 வயது, 5'4" Permanent residence in uk working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 656

51. 48 வயது, 5'3" Divorced,British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4903

52. 32 வயது, 5'6" Graduate, Residing in Italy, Work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4907

53. 30 வயது, 5'4" Graduate, Canadian citizen, Working in college தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4910

54. 39 வயது, 5'4" Canadian citizen, Head Teacher in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4915

55. 35 வயது, 5'4" Graduate, Canadian citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4921

56. 30 வயது, 5'4" Graduate, Residing in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4924

57. 29 வயது, 5'3" Graduate, Residing in India, Manager in Indian Travel's company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4930

58. 31 வயது, 5'2" Graduate, Residing in Srilanka, Working in Government field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4909

59. 23 வயது, 5'4" Graduate, Residing in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4902

60. 41 வயது, 5'1" British Citizen, Divorced, Working in school தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4900

61. 32 வயது, 5'3" Graduate, Residing in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4892

62. 24 வயது, 5'3" PR, Graduate, Residing in France தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4886

63. 25 வயது, 5'1" Residing in Srilanka, Working as a Finance Executive தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4885

64. 29 வயது, 5'3" Graduate, Working as Data analyst, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4884

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# இனங்களும் மரபுக்கூறுகளும்



**மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

உலகில் வாழும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் மரபுரீதியாக வேறு படுகிறார்கள். இது பற்றிய கலந்துரையாடலும் அதற்கான விளக்கமும் மிகக் கடினமானது. இன்றைய நிலையில் இன்னும் பல தரவுகள் திரட்டப் பட வேண்டிய முற்றுப்பெறாத ஒரு ஆய்வுநிலைக் கருப் பொருள் இது.

மேலெழுந்த வாரியாக, வெள்ளையர், கறுப்பர், செவ்விந்தியர், மஞ்சள் நிறத்தவர், தெற்காசியாவின் மண்நிறத்தவர் என மக்களை ஐந்து வகையாகப் பிரிக்கும் ஒரு முறை இருக்கத்தான் செய்கிறது. இது சும்மா நிறத்தை மட்டும் வைத்து பிரிக்கும் முறை. அறிவியலில் இதற்கு முக்கியத்துவம் இல்லை.

மனித இனத்தை ஐந்து பிரிவுகளாக பிரிக்கும் ஒழுங்கும் உண்டு. இச் செயலுக்கு பல காரணங்கள் இருந்தாலும் முகத் தோற்றமும் மண்டையறையின் முன் அமைப்புமே முக்கிய கவனத்தில் கொள்ளப்படுகிறது. அமெரிக்காவின் செவ்விந்தியரும், எஸ்கிமோக்களும், சீனர்களும் அவர்களைச் சுற்றி உள்ளவர்களும் *மங்கோலியர்* என்று அழைக்கப் படுகின்றனர். ஐரோப்பாவிலிருந்து கீழே வடஇந்தியா வரை உள்ளவர்கள் *கொக்கேசியர்* என்று அழைக்கப் படுகின்றனர். பல காலம் நீக்கிரோக்கள் என்று ஒரே பெயரில் அழைக்கப்பட்ட கறுப்பின மக்கள் மூன்றாகப் பிரிபடுகின்றனர். அவுஸ்திரேலியாவையும் அதன் சமுத்திரப் பகுதிக்குள் அடங்குபவர்களையும் *அவுஸ்திரோசியர்* என்று ஒரு இனமாகவும், ஆபிரிக்காவின் தெற்குப் பகுதி தவிர்ந்த மற்றைய ஆபிரிக்கர் அனைவர்களையும் *கொங்கோலியர்* என்று ஒரு இனமாகவும், நன்நம்பிக்கை முனைப் பகுதியைச் சேர்ந்தவர்களை முனை என்பதற்கான ஆங்கிலச் சொல்லை உள்ளடக்கி *கேப்போலியர்* என்று ஒரு இனமாகவும் அழைக்கின்றனர்.

முக அமைப்பு மண்டையறையின் முன் அமைப்புப் போன்றவற்றை அடிப்படையாக வைத்து மனித இனம் பிரிக்கப் பட்டாலும், உயிரியலாளர்கள் எம் எல்லோரையும் ஒரு பெயரால்தான் அழைக்கிறார்கள். ஹோமோ சபியன்ஸ் சபியன்ஸ் என்பதுதான். அது சராசரி ஆறடி உயரம்கொண்ட ஒல்லாந்து இனமாக இருந்தாலும் சரி நாலடி உயரம் கொண்ட பிக்மீஸ் இனமாக இருந்தாலும் சரி, அல்லது வலுவான பெருத்த உடலையுடைய பசுபிக் தீவுகளிலுள்ள இனமாக இருந்தாலும் சரி எல்லோரும் ஓர் இனம். அதுதான் புத்திகூர்மை என்று இருமுறை கூறும் அர்த்தத்தில் உள்ள ஹோமோ சபியன்ஸ் சபியன்ஸ் என்னும் பெயர் கொண்ட இனம்.

இன்று மரபியல்மூலம் ஒருவரின் பல தலைமுறைகளைச் சொல்லுமளவிற்கு அறிவியல் முன்னேறிவிட்டது. மனித மரபியல் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதாயின், எமது ஒவ்வொருவரினது உடலுள் உள்ள ஒவ்வொரு உயிரணுக்களிலும் 23 சோடி பண்புக்காரணித் தொகுப்பு (chromosome) உண்டு. ஆனால் பாலியல் உயிரணுக்களில் அதாவது விந்தணுக்களிலும் (SPERM) முட்டை (ovum) அணுக்களிலும் 23 பண்புக்காரணித் தொகுப்பு மட்டுமே உண்டு. தாயின் ஒரு பாலியல் உயிரணுவும் தகப்பனின் ஒரு பாலியல் உயிரணுவும் சேர்வதால் பழையபடியும் 23 சோடி பண்புக்காரணித் தொகுப்பு உருவாகி அந்த புதிய உயிரணு சிசுவாகவளர்கிறது. தாயிடம் எப்போதுமே எக்ஸ்தான் கடைசிப் பண்புக் காரணியாக செல்லும். தகப்பனிடமிருந்து செல்லும் கடைசிப் பண்புக்காரணி எக்ஸ் என்றும் அமையலாம் வை என்றும் அமையலாம். xx என்றால் பெண்குழந்தை xy என்றால் ஆண் குழந்தை. இந்தவிதத்தில்தான் குழந்தை ஆணோ பெண்ணோ என்பது ஆணின் பாலியல் உயிரணுவால் நிர்ணயிக்கப் படுகிறது.

தகப்பன் வை பண்புக் காரணி மூலம் ஆண் குழந்தைக்கு மரபுக் கூறுகளைக் கொடுக்கிறார். தாய் எக்ஸ் பண்புக் காரணி மூலம் பெண் குழந்தைக்கு மைற்றொகொன்றியல் மரபுக் கூறுகளை கொடுக்கிறார். இவை மாற்றமடையாதவை. ஆனால் தலைமுறை தப்பாது தாயிலிருந்து மைற்றொகொன்றியல் மரபுக் கூறும், தகப்பனிலிருந்து வை மரபுக் கூறும் தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கும். ஆனாலும் காலத்தால் அவை மரபுப் பிறழ்வு மூலம் நுண்ணிய மாற்றத்தை அடைகின்றன. படிமலர்ச்சி (evolutionary) மாற்றம் தான் நான் குறிப்பிடுவது. சிலதலைமுறைகளுக்கு ஒருமுறை மரபுப் பிறழ்வு ஏற்படுவதால்தான் இந் நுண்ணிய மாற்றம் ஏற்படுகிறது. அது நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தாவிடினும் நுண்ணிய மாற்றம் ஏற்படுகிறது. எந்த நிலையில் ஒரு உயிரினம் இருந்ததோ அது மறைந்து பல காலத்திற்கு பின்பும் உயிரியற் புதைவடிவங்களில் அதன் பதிவு மாறாது இருக்கும். பல காலத்திற்கு முன் வாழ்ந்த ஒரு ஆணின் வைமரபணுக்களையும், பல காலத்திற்கு முன் வாழ்ந்த ஒரு பெண்ணின் மைற்றொகொன்றியல் மரபணுக்களையும் அடிப்படையாக வைத்தே பயனுள்ள தரவுகள் திரட்டப்பட்டு மரபு ஆய்வு தெடர்கிறது. மரபுப் பிறழ்வு ஒரு சீரான இடைவெளியில் நிகழ்வதால் மனித இன மரபு மாற்றங்களை கணித்தல் எளிதாகின்றது.

இன்றைய மரபியல்துறை, மரபுக்கூறுகளைப் மருத்துவத் தேவை உட்பட பல தேவைகளுக்குப் பயன் படுத்துகிறது. நோய் எதிர்ப்புப் பற்றிய ஆய்வுக்குப் பயன் படுத்துகிறார்கள். 150 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்காவிலிருந்து எப்படி இடம்பெயர்ந்து இன்று உலகின் மூலை முடுக்கெல்லாம் மனித இனம் வாழ்கிறது என்பதை ஏதோ நேர்முக வர்ணணை போல் கூற அவர்களால் முடிகிறது. மனிதர்கள் எல்லோருமே 150 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்காவில் இருந்து வந்தாலும் அதன் பின் ஏற்பட்ட மாற்றங்கள் அவர்களை மங்கோலியர், கொக்கேசியர், அவுஸ்திரோசியர், கொங்கோலியர், கேப்போலியர் என்று பிரித்து விட்டது. இந்தப்பிரிவிற்கமைய அந்த அந்த நாடுகளில் உள்ள மக்களும் மரவுரீயாக சிறிய சிறிய வேறுபாடுகளுடன்தான் காணப் படுகிறார்கள். எடுத்துக்காட்டிற்கு 95 சதவீதமான ஸ்பானிய ஆண்களும் 95 சதவீதமான ஐரிஷ் ஆண்களும் 70 சதவீதமான ஆங்கிலேய ஆண்களும் தங்களுள் மரபுப் பிறழ்வுக்கு உள்ளான எம் 173 என்னும் வை பண்புக்காரணித் தொகுப்புடன் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. அத்துடன் பிரித்தானியாவுக்குள் ஆங்கிலேயருக்கு முன்பு வேல்ஸ் மொழியினர்தான் வந்தார்கள் என்பதை எவ்வித வரலாற்றுச் சான்றின் உதவியுமின்றி மரபுக் கூற்று ஆய்வு வெளிக் கொணர்கிறது.

மூலக்கூற்று மனிதவியல் என்னும் பிரிவு மூலக்கூற்றுப் பகுப்பாய்வு மூலம் மக்களை ஒற்றைமயத் தொகுதிகளாகப் பிரிக்கிறது. அண்மைய மரபுவழி ஆய்வு இந்தியரில் அநேகர் மத்திய ஆசியர், மத்திய கிழக்கினர், ஐரோப்பியர் ஆகியோருடன் தொடர்புடைய தொல் வட இந்தியர்களிலிருந்து வந்த பரம்பரைகள் என்று கூறுகிறது. திராவிடர்கள் ஆகிய நாம் இதில் அடங்கவில்லை. ஒருவேளை அவுஸ்திரேலியாவின் ஆதிக் குடிகளுடன் தொடர்பு இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அடித்துக் கூறுமளவிற்கு இன்னும் தரவுகள் கிடைக்கவில்லை.

**இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்**

5, Chapel Road, West Ealing, Middlesex, W13 9AE
Charity No – 1014409
Email: info@ammanealing.org Web: www.ammanealing.org
Tel: 0044 208 8100 835 Fax: 0044 208 8400 485

**எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.**



**பணிநிலை : 1 ஆலய சிவாச்சாரியார்**
**Hindu religious workers with non pastoral role**

**தகமைகள் :** விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.
இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.
**கடமைகள் :** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.
**வேதனம் :** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.
விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.
**விண்ணப்ப முடிவு திகதி :** 31-10-2014

**பணிநிலை : 2 நாதஸ்வர, தவில் கலைஞர்கள்**
**Hindu Religious (Musicians) workers**

**தகமைகள் :** நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்.
**கடமைகள் :** ஆலய பூசைக்காலங்களில் மங்கள இசை இசைத்தல்.
**வேதனம் :** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.
**விண்ணப்ப முடிவு திகதி :** 31-10-2014

ஆலய இணையத்தளத்தில் (www.ammanealing.org) பணிநிலை வேண்டுகைக்கான விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது. விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி, பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம்.



**நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.....**

Studio Portrait, Passport & ID Photos
Prints from any media

Capture memories photography by
MITCHAM PHOTOCENTRE
www.mitchamphotocentre.com

020 8687 2284
079 5852 5412

243, London Road, Mitcham, Surrey, CR4 3NH

ஒரு பேப்பர்
ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# சாமானிய நாயகர்களின் மரணம்




**- சுரேஸ் கண்ணன்**

*கடந்த வாரத் தொடர்ச்சி*

ஒரு காலத்தில் சூப்பர் நாயகர்களுக்கு ஏறத்தாழ இணையாக பயணித்துக் கொண்டிருந்த சாமானிய நாயகர்கள் இன்று பெரும்பாலும் காணாமற் போயிருந்தாலும் அதற்கான தடயங்களைக் கொண்ட சொற்ப அடையாளங்களாவது மீதம் இருக்கிறதா என்று தேடிப் பார்த்ததில் சமீபத்தில் வெளியான இரண்டு திரைப்படங்கள் கிடைத்தன. சிவகார்த்திகேயன் நடித்த 'மான்கராத்தே' மற்றும் சந்தானம் நடித்த 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்'

இதில் சாமானிய நாயகனுக்கு மிக கச்சிதமாகப் பொருந்தக் கூடிய ஆளுமை சிவகார்த்திகேயனுக்கு இருப்பதாகத் தோன்றுகிறது. அதை உறுதிப்படுத்தும் விதத்தில்தான் அவரது துவக்க காலத்திரைப்படங்களும் இருந்தன. ஆனால் வணிகசினிமா அவரையும் தனக்குள் செரித்துக் கொண்டது ஒரு துரதிர்ஷ்டம்.

மான்கராத்தே என்பதன் விளக்கமே ஏற்கெனவே வந்திருந்த ஒரு திரைப்படத்தின் நகைச்சுவைக் காட்சியொன்றில் விவரித்திருந்தபடி ஏதாவது சண்டையொன்று வந்தால் மான் போல் ஓடி விடுவதையே சங்கேத பாணியில் அதை ஏதோ ஒரு வித்தையைப் போல நகைச்சுவையாக குறிக்கும் வார்த்தை. ஒரு சாமானியனுக்கு சரியாகப் பொருந்தக்கூடிய கதைக்களம். இந்த ஒரு வார்த்தைக்கேற்ப கதையை அமைத்துக் கொண்டு இத்திரைப்படத்தை மிக மிக சுவாரசியமாக உருவாக்கியிருக்கலாம்.

ஆனால் இதன் நாயகன், சண்டையிடுவதை தவிர ஒரு சம்பிரதாய ஹீரோவுக்குரிய சகல விதமான கல்யாண குணங்களுடன் இருக்கிறான். இதன் கதை ஏ.ஆர்.முருகதாஸாம். மனிதர் இன்னும் 'போதி தர்மர்' ஹேங் ஓவரிலிருந்து வெளியே வரவில்லை என தெரிகிறது. ஒரு சாமியாரிடமிருந்து வருங்காலத்தில் பிரசுரமாகயிருக்கும் நாளிதழ் ஒன்று கிடைக்கிறதாம். அதில் பீட்டர் என்கிற பாக்சிங் சேம்பியனுக்கு கோடிக்கணக்கில் பணம் கிடைக்கப் போகிறது என்பதை தெரிந்து கொள்ளும், வேலையை இழந்த நாலைந்து சாஃப்ட்வேர் இளைஞர்கள் அவரை வைத்து பணம் சம்பாதிக்க முடிவு செய்கிறார்களாம்.

இதன் ஹீரோ வடசென்னையின் பின்புலத்திலிருந்து வருவதாக அமைந்திருக்கிறது திரைக்கதை. ஆனால் வடசென்னையை அதன் கலாசார மற்றும் வரலாற்று பின்புலத்திலிருந்து யோக்கியமாக சித்தரித்த ஒரு தமிழ் திரைப்படமும் இதுவரை உருவாகவில்லை. ஷாப்பிங் மால்களிலேயே எப்போதும் சுற்றிக் கொண்டிருக்கும் நவநாகரிக உடைகள் அணிந்த ஒரு ஹைடெக் இளைஞனாகவே காட்டப்படுகிறார் இதன் நாயகன். ஏனெனில் சினிமா இலக்கணத்தின் படி பொதுப்புத்தியில் பதிந்துள்ள ஓர் அசலான வடசென்னைவாசியை அப்படியே ஹீரோவாக சித்தரித்தால் மல்டிப்ளெக்ஸ் ரசிகர்கள் முகஞ்சுளிக்கலாம் என்று இயக்குநர் நினைத்திருக்கலாம். இதற்கான நிரூபணம் இதன் படத்திலேயே உள்ளது. குண்டாகவும் கருப்பாகவும் ஓர் இளைஞன் லிப்டில் பெருமளவு அபானவாயுவை வெளியிடுகிறான். அதற்குப் பின்னால் வரும் சிவகார்த்திகேயனை சந்தேகமாக பார்க்கிறாள் வெள்ளைத் தோல் நாயகி. பிறகு இருவரும் வாந்தியெடுக்குமளவிற்கு ஓங்கரிக்கின்றனர். உலக அழகியாகவே இருந்தாலும் அவரின் அபானவாயு நாற்றமுடையதாகத்தான் இருக்கும். இது மாத்திரமல்ல நாயகனுக்கு நண்பனாக வருபவனும் கருப்பாக, அவலட்சணமாகவே ஒரு அடிமை போல சித்தரிக்கபட்டிருக்கிறான். நாயகனை அழகானவனாக காட்டும் உத்தி போல. பத்து திருக்குறள்களை மனப்பாடமாக சொல்பவனுக்கு தன் மகளை மணமுடித்து தர தயாராக இருக்கும் ஒரு தந்தையின் அற்புதமான காமெடி வேறு.

இத்திரைப்படத்தில் குத்துச் சண்டை விளையாட்டை தவறுதலாக சித்தரித்ததாக அதன் சம்மேளனத்திலிருந்து எதிர்ப்பும் தடையுத் தரவு வழக்கும் போடப்பட்டிருந்ததாக செய்திகள் வெளியாயின. உண்மைதான். அந்த விளையாட்டை மிக மலினமானதொரு கேளிக்கையாகவும் நகைச்சுவையாகவும்தான் இத்திரைப்படத்தில் சித்தரித்திருப்பார்கள். குத்துச் சண்டை விளையாட்டை அதன் தீவிரத்தோடு முன்வைத்த சிறந்த வணிகசினிமாவாக சில் வஸ்டர் ஸ்டாலினின் 'ராக்கி' தொடர் திரைப் படங்களைச் சொல்லலாம். சண்டையை விடவும் அது நிகழப் போவதற்கான முன்னோட்டங்களையும் கொந்தளிப்பான உணர்ச்சிகளையும் பார்வையாளனின் ஆர்வத்தை உயர்த்தும் வகையில் அற்புதமான திரைக்கதையால் உருவாக்கியிருப்பார்கள். ஆனால் மான் கராத்தேவில் சில காட்சிகளில் சார்லி சாப்ளினின் 'சிட்டி லைட்ஸ்' திரைப்படத்தின் காட்சிகளை மிக மோசமாக நகலெடுத்திருக்கிறார்கள்.

'மான் கராத்தே' என்கிற தலைப்பின் நோக்கத்திலிருந்து விலகும் வரையில் பாக்ஸிங் என்றால் என்னவென்றே தெரியாத ஹீரோ, ஏற்கெனவே சாம்பியனாக உள்ளவரை திடீரென்று உந்தப்பட்ட ஆக்ரோஷத்தின் மூலம் வெற்றி கொள்வதாக இதன் உச்சக்காட்சி அமைந்திருக்கும். இதற்கான பின்னணியும் அபத்தமானது. ஒரு சாமானிய நாயகனை எந்தவகையிலும் இத் திரைப்படம் பிரதிபலிக்கவில்லை.

♦ ♦ ♦

இன்னொரு சமகால திரைப்படமான 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' அதன் தலைப்பிலேயே ஒரு சாமானிய நாயகனை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. இதன் திரைக்கதையும் ஏறக்குறைய அவ்வாறே அமைந்திருக்கும். ராஜ மெளலியின் தெலுங்கு திரைப்படமான 'மரியாத ராமண்ணா'வின் மறுஉருவாக்கமே வ.பு.ஆ. ஆனால் இதன் மூலம் பஸ்டர் கீட்டனுடையது.

மெளன திரைப்படங்கள் உருவாகிக் கொண்டிருந்த காலத்தில் 1932-ல் வெளியான Our Hospitality என்கிற திரைப்படத்தின் நகலே 'மரியாத ராமண்ணா'. சார்லி சாப்ளினின் அபரிதமான புகழின் வெளிச்சத்தில் மங்கிப் போன, சாப்ளினுக்கு இணையாக வைத்து போற்றப்படக் கூடிய கலைஞன் பஸ்டர் கீட்டன். ஒரு சாமானிய நாயகனின் அசலான சித்திரம் கீட்டன். தன்னுடைய உயிராபத்திலிருந்து தப்பிப்பதற்காக இத்திரைப்படத்தில் கீட்டன் செய்யும் ஒவ்வொரு கோணங்கித்தனமான, புத்திசாலித்தனமான முயற்சியும் விழுந்து விழுந்து சிரிக்க வைப்பவை. இதன் உன்னதத்தை நகல்களில் அதுவும் இந்தியத் திரைப்படங்களில் எதிர்பார்ப்பது அதிகமானதுதான் என்றாலும் வல்லவனுக்கு புல்லும் ஆயுதத்தின் திரைக்கதை அதன் மையத்திலிருந்து பெரிதும் விலகாமல் இருப்பது சற்று ஆசுவாசமளிக்கிறது.

குறுகிய காலத்தில் புகழ் பெற்று விட்ட சந்தானம் அடுத்த படிநிலைக்கு உயர விரும்பி அதற்கேற்ற திரைக்கதையை தேர்வு செய்தது புத்திசாலித்தனமானதுதான் என்றாலும் தன்னுடைய பாணி நையாண்டியை அவரால் பெரிதும் கைவிட முடியவில்லை. பெரும்பாலான ஹீரோக்களைப் போலவே இவரும் ஒரு அறிமுகக்காட்சி யோடும் பாடலோடும்தான் தோன்றுகிறார். அதன் இறுதியிலாவது தன்னை சுயஎள்ளல் செய்து கொள்ளும் ஒரு வசனம் மூலம் அந்தக் குறையை சமன் செய்வார் என்று எதிர்பார்த்தேன். அவ்வாறு நிகழவில்லை. தன்னுடைய புத்திசாலித்தனத்தின் மூலமாகவே நாயகன் தன் மீதுள்ள ஆபத்தை எதிர்கொள்ளும் அதே திசையிலேயே திரைக்கதை பயணிக்கிறது என்றாலும் மான்கராத்தே-வைப் போலவே அதன் உச்சக்காட்சியில் தன் இயல்பிலிருந்து நழுவி தடாலென்று விழுந்து விடுகின்றது. உயரமானதொரு மலையில் இருந்து ஆற்றில் குதித்து விடுவாள் நாயகி. மிக முரட்டுத் தனமானவர்களாகவும் வீரர்களாகவும் அது வரை சித்தரிக்கப்படும் அவளது சகோதரர்களும் அவர்களது ஆட்களும் கூட அங்கிருந்து குதிக்க அஞ்சி கண்ணீர்விடும் போது அசமஞ்சமாக இருக்கும் ஹீரோ திடீரென்று வீரம் பெற்று ஆற்றில் குதித்து நாயகியை காப்பாற்றி விடுவான். இதன் மூலம் அத்திரைப்படத்தில் அது வரையாவது சற்று உயிர்ப்போடு இருந்த சாமானிய நாயகன் தடாலென்று இறந்து போகிறான். இந்த சூழலை பஸ்டர் கீட்டன் தன் திரைப்படத்தில் ஏற்றுக் கொள்ளும் வகையில் இயல்பாக உருவாக்கியிருப்பார்.

சாமானிய நாயகன் என்பது வேறு யாரு மல்ல. நம்மில் இருந்து உருவாகிறவன்தான். சினிமாத்தனங்கள் இல்லாதவன். அசந்தர்ப்பான சூழலை எவ்வித நாயகத்தனங்களும் அல்லாமல் பெரும்பாலும் இயல்பாகவும் கோழைத் தனங்களுடன் எதிர்கொள்கிறவன். அவன் துப்பாக்கி என்கிற வஸ்துவை தன் வாழ்நாளில் பார்த்திருக்க மாட்டான். அதை உபயோகிப்பதை கனவிலும் கூட எதிர்பார்த்திருக்க மாட்டான். எதிர்பாராதவிதமாக அவனுக்கு திடீரென்று கோடிக்கணக்கான பணம் வழியில் கிடைத்தால், சுஜாதாவின் சிறுகதையொன்றில் வருவது போல கை நடுங்க கடன் வாங்கியாவது ஆட்டோ பிடித்து கைகள் நடுங்க அதை காவல்நிலையத்தில் ஒப்படைத்து விடுவான். அவனுக்கு பஞ்ச் டயலாக்குகள் பேசத் தெரியாது. அநியாயங்களைக் கண்டு மனம் குமுறி ரகசியமாக அழத் தெரியும். சில பல குறைகளும் அபத்தங்களும் பழமைவாத சிந்தனைகளைக் கொண்டிருந்தாலும் பொதுவாக நல்லவனாக இருப்பான். சமூகம் வைத்திருக்கும் விழுமியங்களுக்கு மதிப்பளிப்பவனாக இருப்பான்.

திரைப்படத்தின் இறுதி வரையிலும் தன் இயல்பிலிருந்து மாறாத தர்க்கத்தோடு உருவாகும் சாமானிய நாயகனின் சித்திரத்தை யோசித்துப் பார்த்தால் பாக்கியராஜ்தான் மறுபடியும் நினைவுக்கு வருகிறார். 'இன்று போய் நாளை வா' திரைப்படத்தில் தன்னைக் காதலிக்கும் மூன்று இளைஞர்களை சோதிக்க 'தான் கற்பை இழந்தவள்' என்று நாயகி பொய் சொல்லும் போது மற்றவர்கள் விலகி செல்ல அவளை அந்நிலையிலேயே ஏற்றுக் கொள்ள முன்வரும் இளைஞன் சாமானியர்களின் நாயகன் என்று கொள்ளலாமா? தான் காதலித்த பெண் திருமணமானவள் என்பதை அறிந்ததும் அவளது கணவனிடமே ஒப்படைக்கும் 'பாலகக்காட்டு மாதவனை" எவ்வாறு வகைப் படுத்தலாம்? அபத்தமான சென்டிமென்ட்டுகளை பின்பற்றுபவன் என்றாலும் சாமானியனால் அதைத்தானே செய்ய முடியும்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி நம்முடைய சமகால திரைப்படங்களில் யதார்த்தத்திற்கு மிக நெருக்கமான காட்சிகளையும் மனிதர்களையும் எதிர்பார்க்கும் சமகால பார்வையாளன், அதற்கு முரணாக அதே பழைய ஆக்ஷன் நாயகர்களை, காக்கும் அவதாரங்களை வழிபட்டுக் கொண்டிருப்பது விநோதமாகத்தான் இருக்கிறது. மாறாக தமிழ்த்திரையில் முன்பு உயிர்ப்புடன் இருந்த சாமானிய நாயகர்கள் மேலதிக இயல்புத்தன்மையுடன் தமிழ் சினிமாவில் மீண்டும் வலம் வருவார்களா என்பதற்கான விடை தமிழ் இயக்குநர்களின் கையில் தான் இருக்கிறது.

Door To Door
2 x Tea Carton for £ 19.50
GLEN CARRIERS
Most Trusted and Reliable Name in the Trade Since 1985
GlenCarriers
Laksiri Seva
(Glen Carriers Forwarding Limited)
• இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் கப்பல் அல்லது விமான மார்க்கமாகவும் பொதிகள் குறைந்த விலையில், பாதுகாப்பாகவும், நம்பிக்கையாகவும் அனுப்பப்பட்டு, உரிய நேரத்தில் கையளிக்கப்படும்.
• 30 வருட கால அனுபவமும் திறனும் மிக்க உலகளாவிய சேவைக்கு பெயர் பெற்றது எங்கள் நிறுவனம்
இலங்கையில் எப்பாகத்திலும் நேரடி விநியோகம் செய்யப்படும்
Collection from £ 10 within London
Collection from your door point in any part of UK or Europe
Colombo Warehouse | Laksiri Seva Pvt Ltd. 66, New Nuge Road, Peliyagoda, Colombo Telephone: + 94 1129 177 29-31
Eastern Province Warehouse | Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addappallam, Ninthavur. 0672 0510 50-51
Tel : 020 8743 7353 || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ
Web : www.glencarriers.com
Email : info@glencarriers.com

# சினிமா

## திரை விமர்சனம்



## வெண்ணிலா வீடு

கதைக்கரு: தங்கத்தின் மீதிருக்கும் மக்களின் மோகத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு சிறிய சம்பவம் தான் கதைக்கரு. ஒரு எளிமையான அமைதியான குடும்பத்தில் நெருங்கிய நண்பர்களிடம் ஏற்படும் சகஜமான கொடுக்கல் வாங்களில் ஏற்படும் ஒரு அசம்பாவிதம் எப்படி புயலாய் மாறி அந்த குடும்பத்தை சீரழிக்கிறது என்பதை உணர்வுபூர்வமாய் அணுகியிருக்கும் கதை.

திரைக்கதை: நாம் அன்றாடம் சந்திக்கும் நண்பர்களுக்கிடையேயான ரொம்ப சகஜயமாய் நடக்கும் இரவல் பழக்கம் எந்த அளவுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என நாம் தினம்தினம் சந்திக்கும் ஒரு எதார்த்தத்தை அடிப்படையாய் வைத்து திரைக்கதை பிண்ணியிருப்பது படத்தின் மிகப்பெரிய பலம். ஆனால் இந்த விசயமே இடைவேளையில் தான் வருகிறது. அதுவரை கதை ஒரு அக்மார்க் சீரியலாய் ஜவ்வடிப்படிப்பது தான் பெரிய மைனஸ். இப்ப என்னதாம்பா சொல்ல வர்றீங்க என யோசித்து நாம் கொட்டாவி விட்டு, ஒரு குட்டி தூக்கம் போட்டு எழுந்தாலும் கதை எங்கும் சென்றுவிடாமல் அதே இடத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது. ரொம்ப சுமாராய் இருக்கே என நாம் நினைத்துக்கொண்டிருக்கும் போது சட்டென நம்மை உலுக்கும் ஒரு காட்சியை இடைவேளையில் வைத்து கதையின் வேகத்தை மாற்றுகிறார் இயக்குநர். படத்தின் கதாபாத்திரத்தின் உணர்வுடன் பார்பவர்களின் உணர்வுகளும் ஒட்டி படம் பார்க்கும் அனுபவத்தை கொடுப்பதே ஒரு நல்ல திரைக்கதையின் அடையாளம். அதை படத்தின் இரண்டாம் பாதியில் திரைக்கதை செவ்வனே செய்கிறது. படம் முடிந்து வெளிவரும் போது இப்படி நாமளும் எத்தனை தடவை கார், நகை, பணம்னு இரவல் வாங்யிருக்கிறோம்.. நமக்கும் இப்படி ஆகியிருந்தா என்னாகியிருக்கும். இனிமே கவனமாய் இருக்கனும் என மனதில் பக்கென ஒரு பயம் வரவைப்பதே இந்த திரைக்கதையின் வெற்றி.

வசனம்: “சோறு போடுற விவசாய பூமிய வித்துட்டு அப்புறம் சோத்துக்கு பிச்சையா எடுப்ப ” என சுருக்கென தைக்கும் விதமாய் ஐடியல் வசனங்கள் பேசும் மிர்ச்சி செந்தில் கதாபாத்திரம் பின்னாளில் தனக்கொரு பிரச்சினை என்றதும் அதே நிலத்தை விற்கும் போது ரியல் எஸ்டேஸ் ஆட்களின் அலட்சிய பேச்சு தான் இன்றைய அப்பட்டமான எதார்த்தம்.

நடிப்பு: மிர்ச்சி செந்தில் இதற்கு முன்பு ஒருசில படங்களில் நடித்திருத்தாலும் அவரை ஒரு நாயகனாய் கவனிக்க வைத்திருக்கும் படம் இது. பிரச்சினையில் சிக்கிக்கொண்ட பின் அலைபாய்வதும், இயலாமையில் பொருமுவதும், கோபத்தில் பொங்குவதுமாய் பொருத்தமாய் நடித்திருக்கிறார். விஜயலட்சுமி-க்கு பெயர் சொல்லும் படியான இன்னொரு கதாபாத்திரம். குழந்தைக்கு அம்மாவா நானா என 40 வயது நடிகையெல்லாம் நாணப்படும் வேளையில் இயல்பாய் காரக்டருடன் பொருந்தி தரமான நடிகையாய் பிரகாசிக்கிறார். கடைசியாக வழக்கு எண் முத்துராம். வழக்கமாய் இருந்தாலும் கவனமாய் உருவாக்கப்பட்ட அந்த கதாபாத்திரத்தை அப்படியே உள்வாங்கி நடிப்பாய் கொட்டியிருக்கிறார். கைதட்டல் வாங்குவது ஹீரோவின் வெற்றி என்றால் படம் பார்த்த அனைவரின் மனசுக்குள்ளும் திட்டலை வாங்கியிருப்பதுதான் இந்த வில்லனின் வெற்றி.

இயக்கம்: நாமளும் ஒரு கொரியன் படத்தை சிசேரியன் பண்ணுவோம் என கிளம்பாமல் சின்சியராய் ஒரு நல்ல கதையை எழுதிய இயக்குநர் வெற்றி மகாலிங்கத்துக்கு முதலில் பாராட்டுக்கள். முதல் பாதி படத்திற்கான இயக்கத்தை ரொம்ப கவனக்குறைவாக கையாண்டிருக்கிறார் எனபது ஒரு பெரிய குறைதான். அதையும் தாண்டி இரண்டாம் பாதியில் விறுவிறுப்பாய் காட்சிகளை நகர்த்தி, அதே நேரம் உணர்வுபூர்வமாகவும் உருவாக்கி முதல் பாதி குறையை மறக்கடித்து இயக்குநராய் ஜெயித்திருக்கிறார். அதே நேரம் இடைவேளையில் வைத்திருக்கும் அந்த காட்சியை படத்தின் இருபதாவது நிமிடத்தில் வைத்து, இதே வேகத்துடன் திரைக்கதையாக்கி இயக்கியிருந்தால் இந்தப் படம் ஒரு மிகப்பெரிய தரமான, முக்கியமான படமாய் வந்திருக்கும் என்பதையும் இயக்குநர் அடுத்த படத்திற்கு திரைக்கதை எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறப்புக்கவனம்: தன் மகளுக்கு செல்ல அப்பாவாகாவும் மற்றவர்களுக்கு மனசாட்சியற்ற அரக்கனாகவும் வரும் அந்த வழக்கு எண் முத்துராம் தான் படத்தின் முதுகெலும்பு. அவரது கதாபாத்திரப்படைப்பும், அதை அவர் டெலிவர் செய்திருக்கும் நேர்த்தியும் தான் படத்தை படம்தாண்டிய உணர்வுப்பூர்வ அனுபவமாக்கி வெற்றி பெற வைத்திருக்கிறது. அதே போல நடிகை விஜயலட்சுமியும் அந்த எளிமையான அப்பாவிப்பெண் கதாபாத்திரத்தில் அருமையாய் பொருந்தி கலங்க வைக்கிறார். பல வருடங்களாய் ராசியில்லாத நடிகையாய் அடையாளம் காணப்பட்ட விஜயலட்சுமி இப்போது அடுத்தடுத்து “ஆடாம ஜெயிச்சோமடா ” மற்றும் “வெண்ணிலா வீடு ” என இரண்டு வெற்றிப்படங்களில் இடம்பிடித்து தமிழ் சினிமா இலக்கணப்படி “ராசியான ” நாயகியாகி விட்டார். இன்னொரு நடிக்கத்தெரிந்த தமிழ் நடிகை பிஸியாய் இருப்பது வரவேற்றகத்தக்கதே.

மொத்தத்தில்: பலமில்லாத சீரியல் டைப்பாக முதல் பாதி நம் பொறுமையை சோதித்தாலும் இடைவேளையில் துவங்கும் சுவாரஸ்யம் அதன் பின் விறுவிறுப்பாகி கடைசி வரை நம்மை கதையுடன் ஒன்றிப்போய் பார்க்க வைத்திருப்பதே ஒரு பெரிய வெற்றி தான். இதுபோல தரமான குறைந்த பட்ஜெட் படங்களை நல்ல முறையில் வெளியிடுவதற்கு இவர்களை போன்ற டிஸ்ட்டிபியூட்டர்களும் அவசியம்.

*- சவுண்ட் கமெரா அக்‌ஷன் இணையம்*

## சினித்துளி

### ‘ஐ’ எப்ப வரும் !



ஷங்கரின் ‘ஐ ’ படம் எப்போ ரிலீசாகும் என்கிற விவரம் அவருக்கு மட்டுமில்லை, தயாரிப்பாளர் ஆஸ்கார் பிலிம்ஸ் வி.ரவிச்சந்திரனுக்கே இப்போதையை சூழ்நிலையில் தெரியாது போலிருக்கிறது.ஷங்கர் எடுத்த பிரம்மாண்டப் படங்களிலேயே கோடிக்கணக்கான பணத்தையும், ஆயிரக்கணக்கான நாட்களையும் விழுங்கியிருக்கும் ஒரே படம் ‘ஐ ’ தானாம். கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப்படம் ் வெற்றிகரமாக 2 வருடங்களை விழுங்கி விட்டது.

கடைசியாக ஒரு பாடல் காட்சியோடு படப்பிடிப்புக்கு பூசணிக்காய் உடைத்தாலும் இன்னும் போஸ்ட் புரொடக்‌ஷன்ஸ் வேலைகளே மலையளவு இருக்கிறதாம். ஆக மொத்தத்துல எல்லாம் நடந்து முடியும் வரைக்கும் ‘ஐ’ படம் எப்போ ரிலீசாகும் என்கிற விவரம் ஷங்கருக்கு மட்டுமில்ல, தயாரிப்பாளருக்கே தெரியாது என்பதே உண்மை.

### கத்தி ஜெயாவுக்கு இல்லையாம்



தமிழ்நாட்டில் ‘கத்தி’ படத்துக்கு இருக்கும் எதிர்ப்பை சமாளிக்க ஆளுங்கட்சிக்கு ஆதரவான சேனலுக்கு படத்தின் ரைட்ஸ் கொடுக்கப்பட்டதாக சில வாரங்களுக்கு முன்பு செய்திகள் பரவியது. இந்த விஷயம் முழுமையாக பரவ ஆரம்பித்ததும் கத்தி படத்துக்கு எதிரானவர்களின் போராட்ட வேகம் சுருங்கிப் போனது. அதை வைத்தேபடத்தை தீபாவளிக்கு எந்தப் பிரச்சனையும் இல்லாமல் ரிலீஸ் செய்யும் வேலைகளை லைகா நிறுவனம் செய்து வருகிறது.


ஆனால் தற்போது சேனல் ரைட்ஸ் கொடுக்கப்பட்ட விவகாரம் பொய் என்று தெரிய வந்துள்ளது. அதன்படி ஜெயா டிவிக்கு கத்தி படத்தின் சேனல் ரைட்ஸ் இதுவரை அதிகாரப்பூர்வமாக கொடுக்கப்படவே இல்லையாம்.

### தீபாவளிக்கு பூலோகம் !



ஜெயம் ரவி நடிப்பில் நீண்ட காலமாக உருவாகி கிடப்பில் இருந்த படம் ‘பூலோகம்’. இப்படத்தில் இவருக்கு ஜோடியாக திரிஷா நடித்துள்ளார். சதீஷ்குமார் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்திற்கு ஸ்ரீகாந்த் தேவா இசையமைத்திருக்கிறார். டைரக்டர் எஸ்.பி.ஜனநாதன் வசனம் எழுத, என்.கல்யாண் கிருஷ்ணன் கதை, திரைக்கதை எழுதி இயக்கியிருக்கிறார். ஆஸ்கர் ரவிச்சந்திரன் தயாரித்திருக்கிறார் படத்தை தீபாவளி அன்று வெளியிட படக்குழுவினர் முடிவுசெய்துள்ளனர்.

### மணிரத்தினத்தின் 5கோடி திட்டம் !



மணிரத்னம் படங்கள் என்றாலே ஒரு காலத்தில் அனைவரும் கவரும் வகையில் இருக்கும். ஆனால், அவர் இயக்கி கடைசியாக ஹிட் ஆன படம் என்றால் கொஞ்சம் யோசிக்க தான் வேண்டும்.இவர் பெரிதும் நம்பியிருந்த கடல் படமும் கை விட்டது. இந்நிலையில் இனி பெரிய பட்ஜெட் படங்கள் எடுப்பதில்லை, சுமார் ரூ 5 கோடியில் ஒரு படத்தை எடுத்து முடிக்க முடிவெடுத்துள்ளாராம்.மேலும் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையின் சில பகுதிகளில் நடைபெற்றிருக்கிறது.

இதில் துல்கர் சல்மான், நித்யா மேனன் நடித்து வருகின்றனர்.


Kayaal IT Solution Ltd

CCTV Camera Installation & Maintenance



- PC, LAPTOP MAINTAINECE, SHOP TILL POS SYSTEM,SHOP TILL SOFTWARE INSTALLMENT
- HOME SECURITY ALARM,SHOPS ALARM ALL WIRELESS THIS SYSTEM WORKING IN GSM,PSTN WE CAN CONNECT 5 MOBILE NUMBERS.
- CCTV SYSTEM INSTALLATION INCLUDING ONLINE SETUP ALL SPEACIAL PRICES IF ALARM ,CCTV INSTALL, WE WILL GIVE GOOD DEAL
- ALL SERVICES IN UK.[OVER 15MILES WE WILL CHARGES FOR MILEGE FOR 50 PENCE

- SPECIAL OFFER HOME SECURITY ALARM SYSTEM 3-ROOM SENSOR[PIR] 3- DOOR & WINDOW SENSOR -3,1- PANIC, 3-KEY MAIN SYSTEM WORK GSM/PSTN BOTH [TOUCH PANNEL ], SIREN6-NUMERS AUTOMATIC DIAL INCLUDING VAT £ 300,NO CONTRACT

Special Offers !!

Please Contact : Jothy REG COMPANY :8193915 FROM AUGUST 2012, FRIENDLY AND QUALIFIED ENGINEER Paying Method : By PayPal or Cash

Electrical & Electronic Engineer, Beng Hons
Microsoft certified for MCTC, MCP 2.0 & Guilds
Certified for PAT test

83, Roberts Bridge Road,
Carshalton,
SM5 1AH

Tel : 07859892657 (Jothy), 02034416364
E-Mail : kayaalitsolutions@hotmail.com
Web : www.kayaalitsolutionlimited.com

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!!!

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*


www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED

CELEBRATIONS by

# SHREE VENILALS UK

தீபாவளித் திருநாள் மற்றும் நவராத்திரியை
முன்னிட்டு மாபெரும் விலைச்சலுகைகள் !!




SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES

DESIGNER
LEHNGA
SUITS

DESIGNER
PAVADAI & HALF
SAREES

DESIGNER
SALWAR
SUITS

DESIGNER
COSTUME
JEWELLERY

EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES

## மங்கையர் மனங்கவர் ஆடைகளின் சங்கமம்!

ராசியான கூறைப்புடவைகள் அனைத்து வகையான சாறிகள் மற்றும் சிறுவர்களுக்கான உடைகளைத் தரமாக பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

Introducing For The First Time..

**Shree Venilal's**
115/117 Ealing Road
Wembley.
HA0 4BP
Tel: 020 8903 3144

**Celebrations**
by Shree Venilal's
99/103 Ealing Road
Wembley, HA0 4BP
Tel: 020 8795 3051

**Warehouse by**
Shree Venilal's & Celebrations
95/97 Ealing Road
First Floor
Behind Bus Stop / On Top Of Jalaram Sweets Wembley.

விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!

உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றிகள்...